கல்கி



KALKI அக்டோபர் 19, 1952

4 அணா



வெப்பத்திலோ...
அல்லது குளிரிலோ...
Erasmic
HIMALAYA BOUQUET SNOW
நீங்கள் எங்கிருந்தாலும்...
ஹிமாலயா புக்கே ஸ்னோ
உபயோகியுங்கள்.
ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின் சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது
சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கே ஸ்னோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.
இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு
HBS. 6A-X30 TM.

கல்கி பொருளடக்கம்

மலர் 12
இதழ் 12

1952 அக்டோபர் 19

நந்தன ௵ ஐப்பசி 3



அக்டோபர் 17 முதல்
வெலிங்டன்
கிரௌன்
மதுரை
கோயமுத்தூர்
திருச்சிராப்பள்ளி
பெங்களூர் ஸிடி
பெங்களூர் கன்.
மைசூர்
சேலம்
திருநெல்வேலி
தஞ்சாவூர்
கும்பகோணம்
திண்டுக்கல்
வேலூர்
பாண்டிச்சேரி
ஈரோடு
விருதுநகர்
காரைக்குடி
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி
பிலிம் கம்பெனியாரின்
ஏழை உழவன்
— முற்றிலும் மாறுபட்ட முன்னேற்றச் சித்திரம் —
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்
அஞ்சலிதேவி · கண்ணாம்பா · லக்ஷ்மிபிரபா · துளசி · முத்துலக்ஷ்மி ·
ஸ்ரீராமமூர்த்தி · லிங்கமூர்த்தி ·
உதயகுமார்
ஜெமினி

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 12

கடல் பொங்கியது, பூமி நடுங்கியது!

ஆஸ்திரேலியா தேசத்தை அடுத்துள்ள சில தீவுகள் சில தினங்களுக்கு முன் கிடு கிடு வென்று ஆடி அதிர்ந்தன.

அதைச் சூழ்ந்துள்ள இந்திய மகா சமுத்திரம் குபு குபு என்று பொங்கியது.

உடனே அந்தப் பிரதேசத்தில் வானமெங்கும் பத்தாயிரம் அடி உயரத்துக்கும் பயங்கரமான புகை மண்டலங்கள் வியாபித்துக் கொண்டன.

இதைக் கேள்வியுற்ற பிரிட்டன் வெற்றி முழக்கம் செய்து, மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

ஆனால் மேற்படி விவரங்களைக் கேள்விப்பட்ட உலக மக்களோவெனில் பெருந் திகில் அடைந்து விட்டார்கள்; அந்த உற்பாதங்கள் மூன்றாவது உலக மகா யுத்தத்துக்கான அறிகுறிகளில் ஒன்று என்று நடுங்கி விட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணம், ஆஸ்திரேலியாவுக்கு வடமேற்கேயுள்ள மாண்டி பெல்லோ தீவுகளில், பிரிட்டிஷார் தாங்கள் இப்போது உற்பத்தி செய்துள்ள முதலாவது அணுகுண்டைப் பரீட்சை செய்து பார்த்ததுதான்.

அந்தப் பரிசோதனையை நடத்துவதற்காகப் பிரிட்டிஷார் பல மாதங்களாகப் பிரமாதமான முன்னேற்பாடுகள் செய்திருந்தனர்.

தாங்கள் உற்பத்தி செய்ய முற்பட்டுள்ள அணுகுண்டின் அழிக்கும் சக்தியை ஆராய்வதற்காக அவர்கள் மாண்டி பெல்லோ தீவுப் பிரதேசத்தில் மனிதர்களே இராத ஒரு மாய நகரையே சிருஷ்டித்திருந்தார்கள் என்றால், பார்த்துக் கொள்ளுங்கள்!

பிரிட்டனின் அணுகுண்டு வீச்சுப் பரீட்சை பற்றிய செய்தியை அமெரிக்கப் பத்திரிகைகள் முழுப் பக்கத் தலைப்பின் கீழ்ப் பத்தி பத்தியாகப் பிரசுரித்தன.

பிரிட்டனை இதுவரையில் இரண்டாம் தர வல்லரசு என்று உலகம் நினைத்து வந்தது. ஆனால் பிரிட்டன் தான் உற்பத்தி செய்த அணுகுண்டை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்ததன் மூலம் அது மீண்டும் முதல் தர வல்லரசாகி விட்டது என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் பரவசம் அடைந்தன.

அதாவது ஒரு தேசத்தின் வல்லமையும் பெருமையும் அதன் அழிக்கும் சக்தியையே பொறுத்திருக்கிறது என்பது பிரிட்டிஷாரின் சித்தாந்தம் போலும்!

இதுவரையில் அமெரிக்கா பரீட்சை செய்து பார்த்த அணுகுண்டுகளைக் காட்டிலும் பிரிட்டன் பரீட்சை செய்த குண்டு அதிக சக்தி உள்ளது என்றும், அது போல் பிரிட்டன் இன்னும் சில அணுகுண்டுகளைப் பரீட்சை செய்து பார்க்கப் போவதாயும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

பிரிட்டன் இப்போது பரீட்சை செய்து பார்த்த குண்டு ஹைட்ரஜன் குண்டாகத்தான் இருக்க வேண்டும் என்று பிரசித்தி பெற்ற ஆஸ்திரேலிய விஞ்ஞான மேதாவி கூறியுள்ளார். மேற்படி பரீட்சையை நேரில் பார்த்து, தகுந்த ஆதாரங்களுடன் அவ்வாறு கூறும் ஆஸ்திரேலிய விஞ்ஞான நிபுணரின் வார்த்தைகளை உலகம் அலட்சியமாகத் தள்ளிவிட முடியாது.

ஒருபுறம், உலகத்தில் பட்டினி, பிணிக் கொடுமையையும் பொருளாதாரக் கஷ்டங்களையும் நிவர்த்திப்பதே தங்களுடைய நோக்கம் என்று ஐக்கிய நாடுகள் சபையில் வல்லரசுகள் வாய்ப்பந்தல் போட்டு வருகின்றன. மற்றொரு புறம், ஏக காலத்தில் பெரிய நகரங்களையும் அதிக மக்களையும் அழிக்கும் சக்தி யாருக்கு உண்டு என்ற போட்டிப் பரீட்சையில் பகிரங்கமாக ஈடுபட்டிருக்கின்றன.

* * * *

பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு சென்னைமா நகருக்கு விஜயம் செய்த போது, பிரிட்டிஷார் நடத்திய அணுகுண்டுப் பரீட்சை சம்பந்தமாக அவரது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி பத்திரிகைப் பிரதிநிதிகள் கேட்டனர்.

"அணுகுண்டு உற்பத்தி செய்யும் உத்தேசம் இந்திய சர்க்காருக்கு லவலேசமும் இல்லை" என்று ஜவாஹர்லால்ஜி அவர்களுக்குப் பதில் கூறினர்.

அணுகுண்டு உற்பத்திக்கு இன்றியமையாத யுரேனியம் (Uranium) போன்ற அபூர்வ சாதனங்கள் இந்தியாவில் கிடைக்கின்றன. ஆனால் அந்தச் சாதனங்களைக் கொண்டு அணு சக்தியை உற்பத்திசெய்து, அதைச் சமுதாய அபிவிருத்திக்கான ஆக்கவேலைகளுக்கு உபயோகிப்பதில் இந்திய சர்க்கார் மிகுந்த அக்கறை காட்டி வருவதாக நேருஜி குறிப்பிட்டார்.

உலக சமாதானத்தையும், மக்களின் நல் வாழ்வையும் விரும்புகிறது இந்திய சர்க்கார் என்பதற்கு எல்லாவித வசதியும் இருந்தும் அணுகுண்டு உற்பத்தியில் ஈடுபடாமல் இருப்பதே சிறந்த சான்றல்லவா! இது சமாதான மகாநாடு என்ற பெயரால் நடக்கும் நாடகத்தைவிட சமாதானத்தை உண்மையிலேயே இந்திய சர்க்கார் விரும்புகிறது என்பதை உலகுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஓர் அணுகுண்டு வெடித்தால் அதிலிருந்து இரண்டு லட்சம் கோடி (2,000,000,000,000) டிகிரி உஷ்ணம் கிளம்புவதாக அணுசக்தி நிபுணர்கள் ஆராய்ச்சி செய்துள்ளனர். அந்த உஷ்ணப் பொடிக்குள் பல சதுர மைல்களுக்கு உட்பட்ட ஜீவராசிகள், தாவர வர்க்கங்கள், கட்டிடங்கள் எல்லாவற்றையும் அழித்து விடுகின்றன. அதன் சக்தி பூமிக்கு ஆழத்திலும் தண்ணீருக்குள்ளும் கூடப் பாய்ந்து விடுகிறது.

உஷ்ணம் இராவிட்டால் ஒரு விநாடி கூட உலகம் இயங்க முடியாது.

உஷ்ணமின்றி மனிதனோ, மற்ற ஜீவராசிகளோ உயிர் வாழ முடியாது; யந்திரங்கள் இயங்க முடியாது; ரயில் வண்டிகள் ஓட முடியாது; விமானங்கள் ஆகாயத்தில் பறக்க முடியாது; கப்பல்கள் கடலில் செல்ல முடியாது.

சூரியன் குளிர்ந்து விட்டால் அண்ட சராசரங்களும் உயிரற்ற பிண்டங்களாகி விடும் என்று விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறாக மானிட வர்க்கத்துக்குத் தொண்டனாக இருக்கும் உஷ்ணத்தை அணுகுண்டு ஏக காலத்தில் மாபெரும் நகரங்களையும் ஜனங்களையும் அடியோடு அழிக்கும் யமனாகச் செய்து விடுகிறது.

ஆனால் அத்தகைய சக்தியை ஆக்க வேலைகளுக்கு உபயோகிக்கும் பட்சத்தில் அதனால் மானிட சமூகத்துக்கு ஏற்படக்கூடிய பலன்களை அளவிட்டுச் சொல்ல முடியுமா!

பிரிட்டனின் அணுகுண்டுப் பரீட்சை வெற்றிகரமாக நடந்ததைக் குறித்துப் பிரிட்டன் சந்தோஷப்படலாம்.

ஆனால் உலக நாகரிகத்தையும் மானிட வர்க்கத்தையும் அழிக்கக்கூடிய பயங்கர அணுகுண்டுகளின் உற்பத்திப் பெருக்கத்தைக் கண்டு உலக மக்கள் நடுங்காமல் இருக்க முடியாது.

பஞ்ச அரக்கனின் மரணப் பிடி

வடாற்காடு ஜில்லாவை வருண பகவான் மிகக் கடுமையாகச் சோதிக்கிறார். கோயமுத்தூர், சேலம், ராயலசீமைப் பிரதேசங்களிலே கூடச் சமீபகாலத்தில் கொஞ்சம் மழை பெய்திருக்கிறது. வடாற்காடு ஜில்லாவில் மூன்று வருஷங்களாக மழையைக் காணாத சில திட்டுப் பிரதேசங்களில் இந்த வருஷமும் இது வரையில் மழை பெய்யவில்லை. இதனால் மேற்படி பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான நிலைமையைத் தேசத் தொண்டர் ஆக்கூர் அனந்தாச்சாரி நேரில் பார்த்து விட்டுவந்து பின்வருமாறு நமக்குத்தெரிவிக்கிறார்:-

"சென்ற வாரம் நான் வடாற்காடு ஜில்லா வாலாஜா தாலூகாவிலுள்ள செங்காடு, மோட்டூர், சொனத்தூர், அனந்தலை முதலிய கிராமங்களுக்குச் சென்றேன். அங்கெல்லாம் கால் வயிற்றுக் கஞ்சி கிடைக்காத மக்கள் பரிதாபமான நிலையில் காலனுடன் போராடிக் கொண்டிருப்பதைக் கண்ணால் கண்டேன். குழந்தைகள் கைகால் சூம்பிப் போய் கால் பின்னிக் கொண்டு மார்கூடு கட்டிக்கொண்டு உட்குழிந்த ஒளியிழந்த கண்ணுடன் காணப் பட்டார்கள். நகரங்களுக்குச் சமீபத்திலுள்ள கிராம மக்கள் ஒருவாறு சமாளித்துக் கொள்கின்றனர். ஆனால் நகரங்களுக்கு வெகு தூரத்திலுள்ள கிராமங்களின் நிலை மிகவும் பீதியளிப்பதாக இருக்கிறது. வாலாஜா தாலூகாவிலுள்ள கிராமங்களின் நிலைமை சீர்திருந்த ஓரளவு காந்தி மிஷன் சங்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். அங்கங்கே கிராமங்களில் கமிட்டி அமைத்து நிவாரண வேலை நடத்தப் பட்டு வருகிறது. இது மட்டும் போதாது. சர்க்கார் அதிகாரிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் மனமாரப் பிரயாசை எடுத்தால்தான் பஞ்சக் கொடுமையிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும். சற்று அசிரத்தையாயிருந்தாலும், காலம் தவறி விட்டாலும், ஆயிரக் கணக்காக மக்கள் மாண்டு போவார்கள். எதற்கும் சர்க்காரை எதிர்பார்ப்பது கூடாது. என்றாலும் சர்க்கார் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. மலிவாகக் கிடைக்கும் மைலோ, பஞ்சத்தினால் பாதிக்கப் பட்டிருக்கும் கிராமங்களுக்குச் சுலபமாகக் கிடைக்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம். எல்லோருமே ஒன்று சேர்ந்து பெரு முயற்சி செய்தால்தான், நல்ல மழை பெய்யும் வரை, மக்களை, முக்கியமாகக் குழந்தைகளை, மரணப் பிடியிலிருந்து காப்பாற்ற முடியும்."

ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் பொறுப்புள்ள நெடு நாளைய தேசத் தொண்டர். நிலைமையை மிகைப்படுத்தும் எண்ணம் அவருக்கு எள்ளளவும் இருக்க முடியாது. ஆகையால் அவர் மேலே விவரித்திருக்கும் நிலைமை நூற்றுக்கு நூறு உண்மை என்றே வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி நிலைமை வடாற்காடு ஜில்லா கிராம மக்களுக்கு மட்டும் ஏற்பட்டிருக்கும் சோதனையல்ல. சென்னையில் உள்ள செல்வர்கள், தர்மப் பிரபுக்கள், தர்ம ஸ்தாபனங்கள், சமூக ஊழியச் சங்கங்கள், பொது நன்மைக்காக உயிரை விடுகிறோம் என்று பறைசாற்றிக் கொள்வோர்,— ஆகிய அனைவருக்கும் ஒரு சோதனையாகும்.

ஆயிரம் பதினாயிரக் கணக்கான சின்னஞ் சிறு குழந்தைகள் பக்கத்து ஜில்லாவில் கால் வயிற்றுக் கஞ்சிக்கு இல்லாமல் கொஞ்சங் கொஞ்சமாக பஞ்ச அரக்கனின் மரணப் பிடியில் அகப்பட்டுக் கொண்டு வரும் போது, நாட்டில் நடைபெறும் மற்ற முன்னேற்றத் திட்டங்கள் எல்லாம் வெறும் வேஷக்கூத்து என்றே தோன்றுகிறது அல்லவா! கலை விழா என்ன, இலக்கிய முன்னேற்றம் என்ன, சமூக சீர்திருத்த மகாநாடுகள் என்ன, சமயப் பிரசாரங்கள் என்ன, தலைவர்களுக்கு உபசாரங்கள்


என்ன, ஆலய ஜீர்ணோத்தாரணம் என்ன, கலாசாலைக் கட்டிட நிர்மாணங்கள் என்ன,—இவை யெல்லாம் நகைக்கத் தக்கவை யாகின்றன.

சின்னஞ் சிறு குழந்தைகளையும் உழைப்பாளிகளான கிராமத்து மக்களையும் பஞ்சத்தின் மரணப் பிடியிலிருந்து காப்பாற்றுவதே முதலில் செய்ய வேண்டிய வேலை. பிறகுதான் மற்ற முன்னேற்றத் தொண்டுகள், சமயப் பிரசாரம், சமூக சீர் திருத்தம், கலை வளர்க்கும் கைங்கரியங்கள் எல்லாம்.

இந்த உண்மையை நன்கு உணர்ந்த புதப் பெருமான் நல்லூர் அன்னதான சிவன் ஞாபகார்த்த சங்கத்தினர் வாலாஜா பேட்டைக்கு ஆறு மைல் தூரத்திலுள்ள செங்காடு என்ற கிராமத்தில் இந்த ஞாயிற்றுக் கிழமை முதல் கஞ்சி தானத் தொண்டு செய்ய முன் வந்திருக்கிறார்கள். மூன்று மாதம் மேற்படி கைங்கரியத்தை அந்தக் கிராமத்தில் அவர்கள் தொடர்ந்து நடத்தி வரப் போகிறார்கள்.

இந்த மாதிரியே சென்னை நகரிலுள்ள ஒவ்வொரு தர்ம ஸ்தாபனமும், சமூக ஊழியச் சங்கமும், பஞ்சத்தில் அடிபட்ட ஒவ்வொரு கிராமத்துக்கும் மூன்று மாத காலம் கஞ்சிதானம் அல்லது அன்னதானம் செய்ய முன் வந்தால் மகத்தான சமூகத் தொண்டு செய்ததா யிருக்கும்.

குபேரச் செல்வம் சேர்த்துள்ள வர்த்தகப் பிரபுக்கள் எவ்வளவோ பேர் சென்னையிலிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒரு கிராமத்தில் பஞ்ச நிவாரண கைங்கரியத்தை மேற்கொண்டு இகபர நலன்களை அடையலாம். ஆனால் அவர்களுக்கு மனம் வரவேண்டுமே!



சென்னை மாகாணத்தில் ராஜாஜி ஆட்சி நடந்து வருவதால் இவ்வருஷம் தீபாவளியை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

‘மைலோ’வுக்கு வந்த கேடு!

கிராமங்களில் பஞ்ச நிவாரணத் தொண்டில் ஈடுபட்ட சமூகத் தொண்டர்கள் தங்கள் அநுபவத்தைக் கொண்டு ஓர் உண்மையைத் தெரியப் படுத்துகிறார்கள். அதாவது :

அரை அணு பெறுமான ‘மைலோ’ தானியத்தைக் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு ஜீவனைக் காப்பாற்றி விடலாம் என்பதுதான்.

பஞ்சத்தில் அடிபட்ட கிராமங்களில் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள், காட்டுக் கிழங்குகளையும் இலைகளையும் தின்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், மேற்படி கிராமங்களுக்கு ‘மைலோ’ தானியம் போய்ச் சேராமல் இருப்பது தான் என்றும் சொல்லுகிறார்கள்.

‘மைலோ’ என்பது அமெரிக்கா தேசத்தில் ஏராளமாக உற்பத்தியாகும் ஒருவகைச் சோளம். சென்ற வருஷத்தில் இந்தத் தானியம் ஏராளமாக இந்தியாவில் இறக்குமதியாயிற்று. சென்னை மாகாணத்துக்கும் ஒரு பெரும்பகுதி கிடைத்தது.

அரிசியிலுள்ள உணவுச் சத்தைவிட ‘மைலோ’ சோளத்தில் உள்ள உணவுச் சத்து குறைந்ததல்ல. ஆனாலும், ‘மைலோ’ என்னும் பெயர் புதியதாயிருந்த படியாலும், விலை அதிகமாயிருந்த படியாலும், ஜனங்கள் அதிகமாக அதை வாங்கவில்லை. பேலும் ஒரு முறை அரிசி உணவு பழக்கமாகி விட்டால், அந்த வழக்கத்தை மாற்றிக் கொள்ளுவது சற்றுக் கடினமான காரியம். ஆகையால் “கல்லும் மண்ணும் கலந்த ரேஷன் அரிசியை வாங்கினாலும் வாங்குவோம்; மைலோவும் கிய்லோவும் வேண்டாம்” என்ற மனோபாவம் மக்களிடையே பரவி யிருந்தது.

ஆதலின் உணவுக் கண்ட்ரோலை எடுத்த சமயத்தில் சர்க்கார் கைவசமிருந்த ஏராளமான ‘மைலோ’ தானியத்தை என்ன செய்வது என்ற பிரச்னை எழுந்தது. இன்னும் சிலநாள் வைத்திருந்தால் தானியம் கெட்டு விடுவதாகவும் இருந்தது.

எனவே சர்க்காருக்கு நஷ்டம் வந்தாலும் வரட்டும் என்று விலையைக் கணிசமாகக் குறைத்து விற்றுவிடத் தீர்மானித்தார்கள். பட்டணம் படி ‘மைலோ’ச் சோளம் ஆறரை அணு வீதம் விற்கத் தொடங்கினார்கள்.

ரேஷன் கடைகளை எடுத்து, அதே சமயத்தில் ‘மைலோ’ வின் விலையைக் குறைத்ததும், உடனே எதிர்பார்த்த பலன் ஏற்பட்டது. ‘மைலோ’ச் சோளத்துக்கு மக்களிடையே நல்ல கிராக்கி ஏற்பட்டது. ஜனங்கள் அதுவும் நல்ல உணவு தானியம் என்பதை உணர்ந்து ஆவலோடு வாங்கிச் சாப்பிடத் தொடங்கினார்கள்.

ஆனால், விலை மலிவான ‘மைலோ’ தானியம் எந்த இடங்களுக்கு முக்கியமாகப் போய்ச் சேர வேண்டுமோ, அந்த இடங்களுக்குப் போய்ச் சேரவில்லை. அதாவது பஞ்சம் மிகக் கடுமையாகப் பரவி யிருக்கும் உள்நாட்டுக் கிராமப் பிரதேசங்களுக்குப் போய்ச் சேரவில்லை.

நகரங்களிலும் பட்டணங்களிலுமே பெரும்பாலும் தங்கி நின்று விட்டது.


இதன் காரணம் என்னவென்பதை ஓர் உதாரணத்தினால் விளக்கலாம்.

பெரிய அணைக்கட்டுத் தேக்கத்திலிருந்து ஜலம் விடும் போது, பல கணவாய்களையும் திறந்து கணிசமான அளவு தண்ணீரை விட்டால் மளமள வென்று ஓடிப் பாய்ந்து, கடைசி வாய்க்கால் வழியாகக் கடைசி வயல் வரையில் போய் எட்டும்.

அதற்குப் பதிலாக இரண்டு, மூன்று கணவாய்களில் கொஞ்சமாகத் தண்ணீரைத் திறந்துவிட்டு,


---

குடத்துக்குள் பூதம்!



பாகிஸ்தான் சர்க்கார் இந்திய சர்க்காரைக் கலந்து கொள்ளாமல் செய்த பாஸ்போர்ட் விதிகள் அவர்களுக்கே தொல்லையாக முடிந்திருக்கின்றன.

நவீன அநுமான்!



எகிப்தின் இராணுவப் பிரதமர் ஜெனரல் நாஜிப் எகிப்திலுள்ள பழைய சமுதாய முறைகளை ஒழித்துக் கட்டுவதில் முனைந்திருக்கிறார்.

அவற்றையும் மூடி மூடித் திறந்து கொண்டிருந்தால், ஒவ்வொரு தடவையும், பாசன நதிகளிலும் வாய்க்கால்களிலும் பாதி தூரம் வரையில் போய்த் தண்ணீர் நின்று விடும். பாசனப் பிரதேசத்தின் கடைசியிலுள்ள வாய்க்கால்களுக்கும், வயல்களுக்கும், தண்ணீர் போய்ச் சேரவே சேராது.

இந்தச் சாதாரண உண்மையை நம் உணவு இலாகா அதிகாரிகள் உணரவில்லை. சர்க்காரின் 'மைலோ' களஞ்சியத்தைக் கொஞ்சம் திறந்து விட்டார்கள். அதற்குக் கிராக்கி ஏற்படுகிறது. ஜனங்கள் வாங்குகிறார்கள் என்று தெரிந்ததும், உடனே களஞ்சியத்தை மூடி விட்டார்கள்.

இதன் பலன் என்ன? அங்கங்கே நகரங்களிலும் பட்டணங்களிலும் உள்ள தானிய வியாபாரிகள் சர்க்காரிடம் வாங்கிய தானியத்தை ஜனங்களுக்கு விற்காமல் அமுக்கி வைத்துக் கொண்டார்கள். மேலே தானிய வரத்துத் தடைப்பட்டது என்று அறிந்ததும், விற்காமல் வைத்துக் கொண்டிருந்தால் பிற்பாடு அதிக லாபத்துக்கு விற்கலாம் என்ற ஆசை வந்து விட்டது. மைலோவில் கள்ள மார்க்கெட்டுகளும் ஏற்பட்டு விட்டன!

உணவுக் கண்ட்ரோல் சம்பந்தமான இவ்வளவு நீடித்த அநுபவத்துக்குப் பிறகும் நமது உணவு இலாகா அதிகாரிகள் இம்மாதிரி தவறு செய்ததை நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது.

எந்த சாமானாலும் தேவைக்குக் கொஞ்சம் குறைவாக இருந்தால்தான் அமுக்கல், பதுக்கல், கள்ள மார்க்கெட், கொள்ளை லாபம் முதலிய தீமைகள் ஏற்படுகின்றன என்பது கண்கண்ட அநுபவம்.

சர்க்கார் களஞ்சியத்திலுள்ள தானியத்தைத் தரித்திர புத்தி யில்லாமல் தாராளமாகத் திறந்து விட்டிருந்தால், வழியில் உள்ள வர்த்தகர்களிடையே தானியம் தங்கியிராது. உள்நாட்டுப் பிரதேசங்களிலுள்ள பஞ்சத்திலடிபட்ட கிராமங்களுக்கும் போய்ச் சேர்ந்திருக்கும்.

அரை அரை மைலோச் சோளம் கிடைக்காத காரணத்தினால் ஜனங்கள் காட்டுக் கிழங்குகளையும் பூண்டுகளையும் தின்று வியாதிகளை வருவித்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்திராது.

அல்லது கையிருப்பில் உள்ள 'மைலோ' அப்படித் தாராளமாகக் களஞ்சியத்தைத் திறந்து விடுவதற்குப் போதாது என்றால், முதலிலேயே வியாபாரிகளுக்கு அதை விற்காமல் தடுத்திருக்க வேண்டும். பஞ்சப் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு மட்டும் அது போய்ச் சேர ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

மொத்த வியாபாரிகள் தானியத்தை அமுக்காமல் செய்வதற்குச் சுலபமான வழி இருக்கிறது. "தானியத்தை அடகாக வைத்துப் பாங்கிகளில் கடன் வாங்கக் கூடாது" என்று விதி செய்தால் எந்தப் பெரிய வியாபாரியும் அதிகமான தானியத்தை அமுக்கிவைக்க முடியாது.

தற்போது கைவசமுள்ள மைலோவை அதிக நாள் வைத்திருக்கவும் முடியாது. சீக்கிரத்தில் கெட்டு மனிதர்கள் உண்பதற்குத் தகுதியற்றதாகப் போய்விடும்.

ஆகையால் நம் உணவு இலாகா அதிகாரிகள் தரித்திர புத்தியைக் கைவிட்டு உடனடியாக 'மைலோ' களஞ்சியத்தைத் திறந்து விடவேண்டும்.

அல்லது, உள்நாட்டில் பஞ்சத்திலடிபட்ட கிராமங்களில் 'மைலோ' விற்பனைக்கு வேறு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒரு பக்கத்தில் சர்க்காரின் களஞ்சியங்களில் தானியத்தை மடித்துப் போகும்படி விட்டு விட்டு, இன்னொரு பக்கத்தில் கிராமங்களில் ஜனங்களைப் பஞ்சத்தால் மடிய விடுவதில் புண்ணியமில்லை.

சிட்டுக் குருவியின் சவால்

ஒரு சமயம் சமுத்திர ராஜன் மீது ஒரு சிட்டுக் குருவிக்குப் பிரமாதமான கோபம் உண்டாகி விட்டது. அவ்வளவுதான்! சிட்டுக் குருவி சிறகை அடித்துக் கொண்டு உயரே பறந்தது. தண்ணீர் மட்டத்துக்கு மேலே இருந்து கொண்டு சமுத்திரத்தை ஒரு கை பார்த்து விடுவதாக ஆர்ப்பாட்டம் செய்தது!

இன்று புதுச்சேரியில் சிலர் அடிக்கும் கூற்று அந்தச் சிட்டுக் குருவியின் கதைக்கு ஒப்பாகவே இருக்கிறது. பிரஞ்சு இந்தியப் பிரதேசமாக இருந்து வரும் புதுச்சேரியும், காரைக்கால் முதலிய இதரப் பிரதேசங்களும் இந்தியாவுடன் ஐக்கியம் அடைய வேண்டும் என்ற கிளர்ச்சி, இந்தியா சுதந்திரம் பெற்ற பின் வலுவடைந்து இன்று உச்ச நிலையை அடைந்திருக்கிறது. அந்தக் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கி விட முடியும் என்று சிலர் இன்னும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் சேரவேண்டும் என்பதை ஆதரிக்கும் தேச பக்தர்களில் சிலருடைய மண்டையை உடைத்து விட்டால், அவர்கள் யாவரும் இந்தியாவுக்கு ஓடி விடுவார்கள்; பிறகு புதுச்சேரியும் மற்றப் பிரதேசங்களும் என்றென்றும் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்து வரும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். சூரியன் அஸ்தமிக்காத, சர்வ வல்லமையுடன் விளங்கிய பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் செய்ய முடியாத காரியத்தைத் தாங்கள் செய்து விட முடியும் என்று புதுச்சேரிப் பிராந்தியத்தில் உள்ள சில குண்டர்கள் கனவு காண்கிறார்கள்.

அந்தக் குண்டர்களின் தாக்குதல்களுக்கு இலக்கான இரண்டொரு பிரமுகர்கள் சென்னைக்கு வந்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்து கொள்ளும்படியான அபாயம் நேர்ந்தது.

புதுச்சேரியைச் சேர்ந்த பாகூர்ப் பகுதியில் மேற்படி துஷ்டர்கள் பலரைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டனர். அதனால் ஐம்பது குடும்பங்களுக்குமேல் அந்தப் பிரதேசத்தை விட்டு விட்டு, இந்தியாவில் வந்து குடியேறும்படி நேர்ந்துளது.

இந்தியாவுடன் ஐக்கியத்தை ஆதரிக்கும் பாவத்துக்காக, ஸ்ரீ தங்கவேல் கவுண்டர் என்ற பிரமுகரை, அவர் வகித்து வந்த பாகூர்ப் பகுதி உதவி மேயர் பதவியிலிருந்து பிரஞ்சு அதிகாரிகள் எதேச்சாதிகாரமாக விலக்கி விட்டார்கள்.

புதுச்சேரியில் குண்டர்களின் அட்டகாசங்கள் அதிகமாகி விட்டதால்தான், பிரதம மந்திரி நேரு சென்னைக்கு விஜயம் செய்தபோது, பிரஞ்சு இந்தியப் பிரச்னையை ஒட்டித் தமது அபிப்பிராயத்தை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார்.

"பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் சேரும் விஷயமாக இனி சர்வ ஜனவாக்கு எடுப்பது என்ற பிரச்னையே எழ இடமில்லை. சமாதானத்தில் உள்ள ஆர்வம் காரணமாக இதுவரையில் நாம் அந்தப் பிரச்னை சம்பந்தமாகப் பொறுமை காட்டி வந்துள்ளோம். இனி அவ்விஷயமாக எத்தகைய விவாதத்துக்கும் இடமில்லை. அப்பிரச்னையைத் தீர்க்க இனி அதிக காலம் காத்திருப்பது என்பது முடியாத காரியம். யார் என்ன சூழ்ச்சி செய்தாலும் என்ன மோசடி செய்தாலும் அந்தப் பிரதேசங்கள் இந்தியாவுடன் ஐக்கியம் அடைவதைத் தடுக்க முடியாது" என்று ஜவாஹர்லால்ஜி உறுதியாகக் கூறினர்.

* * *

இந்தியா விஷயத்தில் பிரஞ்சு சர்க்கார் அனுஷ்டித்து வரும் கொள்கையை பாரிசில் உள்ள 'பிராங் டைரியர்' என்ற பிரபல பிரஞ்சுப் பத்திரிகை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

"இந்தியாவில் நாற்பது கோடி ஜனங்கள் மீது தங்களுக்கு இருந்த ஆதிக்கத்தைப் பிரிட்டன் கைவிட்டு விட்டது. அப்படியிருக்க அங்குள்ள மூன்று லட்சம் ஜனங்கள் விஷயத்தில் பிரான்ஸ் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் பார்ப்பது வெட்கக் கேடாகும். பூகோள ரீதியாகப் பார்த்தால் இது மிகவும் அற்ப விஷயம். ஆனால் இதில் அடங்கியுள்ள கொள்கையையோ, அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையோ அலட்சியம் செய்வதற்கில்லை. கேவலம் ஒரு சின்ன நகரமான புதுச்சேரிக்காக நாம் மாபெரும் இந்தியா தேசத்தை விரோதித்துக் கொள்ளலாமா!"

பிரான்சில் உள்ள பிரபல பத்திரிகையே பிரஞ்சு இந்தியப் பிரச்னையைப் பற்றி இவ்வாறு பட்டவர்த்தனமாக எழுதியிருக்கிறது.

எனவே, பிரஞ்சு இந்தியப் பிரச்னையின் முடிவு என்ன என்பது பற்றி யாருக்கும் எவ்விதச் சந்தேகமும் இருப்பதற்கு இடமில்லை.

உலகத்து வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸ் இந்தியப் பிரதேசங்களில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு ஒரு சில குண்டர்களின் உதவியை நாட முற்பட்டிருப்பது மிகவும் பரிதாபகரமான விஷயம்தான்.

அட்டைப்பட விளக்கம்

தீபமங்கள ஜோதி நமோ நம
வேதமந்த்ர ஸ்வரூபா நமோ நம

—அருணகிரியார்.

தீபாவளிப் பண்டிகை வந்து விட்டது என்றால் தொண்டு கிழவர்கள் முதல் பச்சிளங் குழந்தைகள் யாவருக்கும் ஒரே கொண்டாட்டம்.

காஷ்மீரத்திலிருந்து குமரி வரையுள்ள பாரத மக்கள் அனைவருக்கும் குதூகலம்.

இந்தக் குதூகலம், புது வேஷ்டிகள், புதுப் புடவைகள், மங்கள ஸ்நானங்கள், நண்பர் கூட்டங்கள், இனிப்புப் பண்டங்கள், களிப்புப் பேச்சுகள், டப்பாஸுகள், பட்டாஸுகள், தீபாவளி மலர்கள் இவற்றால் எல்லாம் நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு என்று பெருகி விடுகிறது.

தமிழ் நாட்டுத் தாய் ஒருத்தி "ஆண்டவனே! இந்த மகிழ்ச்சியும் குதூகலமும் எங்கள் வாழ்க்கையில் என்றென்றும் நிலவி வர அருள்புரிய வேண்டும்" என்று தீபாராதனை செய்து பிரார்த்திக்கிறாள். அந்தத் தாயுடன் நாமும் சேர்ந்து பிரார்த்திப்போமாக!

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 10

மனித வேட்டை

வந்தியத் தேவன் நாயின் வாயில் அகப்படாமல் தரையில் குதிக்கப் பார்ப்பதா, அல்லது மறுபடியும் மதிள் சுவரின் மேல் ஏறுவதா என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் பக்கத்திலிருந்த மரங்களின் மறைவில் யாராவது ஒளிந்திருக்கிறார்களா என்றும் கூர்மையாகக் கவனித்தான். ஒரு மரத்தின் மறைவில் வெள்ளைத்துணி தெரிவதுபோலிருந்தது. சற்று முன் நாயின் குரைப்புச் சத்தத்தோடு மனிதனின் சிரிப்புக் குரல் கலந்து கேட்டது நினைவுக்கு வந்தது. மனிதர் யாராவது உண்மையில் மறைந்திருந்தால்? ஒரு மனிதனா? பல மனிதர்களோ? அதைத் தெரிந்து கொள்ளாமல் குதிப்பது பெருந் தவறாக முடியும்? நாயின் வாயிலிருந்து தப்பினாலும் மனிதர்களின் கையில் அகப்படும்படி நேரிடலாம். அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்க்கும் போது ஆழ்வார்க்கடியானுடைய முகம் மதிள் சுவர் மேல் தெரிவது போலத் தோன்றியது. அந்த வைஷ்ணவன் தான் அய்யனார் கோவிலில் காத்துக் காத்துப் பார்த்து அலுத்துப் போய் இங்கு வந்து நாயை ஏவிவிட்டு வேடிக்கை செய்கிறானா, என்ன? எல்லாவற்றுக்கும் கூப்பிட்டுப் பார்த்தால் போகிறது. "வைஷ்ணவரே! வைஷ்ணவரே! இது என்ன வேடிக்கை?" என்றான். மறுபடியும் ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது. அது ஆழ்வார்க்கடியான் குரல் அல்ல. ஆகையால் திரும்ப மதிள் மேல் ஏறி அரண்மனைக்குள் இறங்குவது தான் சரி. பெரிய பழுவேட்டரையரின் வரவேற்பு தடபுடல்களில் எப்படியாவது தப்பித்துக் கொள்ளலாம். அல்லது சுரங்க வழி இருக்கவே இருக்கிறது. மணிமேகலையிடம் மீண்டும் கொஞ்சம் கெஞ்சுமணியம் செய்தாற் போகிறது. இல்லாவிடில் பழுவூர் இளைய ராணியின் தயவையே சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான்! இதுவரை தன்னைக் காட்டிக் கொடுக்காதவள் இப்போது மட்டும் காட்டிக் கொடுத்து விடுவாளா?...

வந்தியத் தேவன் இறங்கிய வழியில் மறுபடி மேலே ஏறத் தொடங்கினான்.

நாய் இன்னும் உயரமாக எழும்பிக் குதித்துக் குரைத்தது.

மீண்டும் சிரிப்புச் சத்தம் கேட்டது.

மரத்தின் மறைவிலிருந்து ஓர் உருவம் வெளியே வந்தது. அதன் கையில் ஒரு வேல் இருந்தது.

அவன் தேவராளன் என்பதை வந்தியத் தேவன் தெரிந்து கொண்டான்.

தேவராளன் வந்தியத்தேவன் சுவரில் தொங்கிய இடத்திற்கு அருகில் வந்தான்.

"அப்பனே! உன் உயிர் வெகு கெட்டி!" என்றான்.

"அதுதான் தெரிந்திருக்கிறதே! ஏன் மறுபடியும் என்னிடம் வருகிறாய்?" என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"இந்தத் தடவை நீ தப்ப முடியாது!" என்று கூறித் தேவராளன் தன் கையிலிருந்த வேலை வந்தியத்தேவனை நோக்கிக் குறி பார்த்தான்.

வந்தியத்தேவன் தன்னுடைய ஆபத்தான நிலையை உணர்ந்து கொண்டான். பாதிச் சுவரில் தொங்கிக் கொண்டிருப்பவன் கீழேயிருந்து வேலினால் குத்தப் பார்ப்பவனுடன் எப்படிச் சண்டையிட முடியும்? குதித்துத் தப்பப் பார்க்கலாம்

என்றால், வேட்டை நாய் ஒன்று மேலே பாயக் காத்துக் கொண்டிருக்கிறது.

"தேவராளா! ஜாக்கிரதை! உங்கள் எஜமானி *பழுவூர் ராணியின் கட்டளையை ஞாபகப் படுத்திக் கொள்! என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று உங்களுக்கு ராணி சொல்லியிருக்க வில்லையா?"

தேவராளன் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்து விட்டு "பழுவூர் ராணி என் எஜமானி அல்ல; எந்த ஊர் ராணியும் என் எஜமானி அல்ல. பத்திரகாளி துர்க்கா பரமேசுவரிதான் என்னுடைய எஜமானி!" என்றான்.

"என் குலதெய்வமும் துர்க்கா பரமேசுவரிதான்! அவளுடைய அருளினால் தான் நடுக்கடலில் எரிகிற கப்பலிலிருந்து தப்பித்து வந்தேன். என்னைத் தொட்டாயானால் துர்க்கை உன்னை அதம் செய்து விடுவாள்!" என்றான் வந்தியத் தேவன்.

"நீ துர்க்கையின் பக்தன் என்பது உண்மையானால், இப்பொழுது எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும். அப்போதுதான் உன்னைக் கொல்லாமல் விடுவேன்!" என்றான் தேவராளன்.

"என்ன செய்ய வேண்டும்! — முதலில், உன்னுடைய நாயை அப்பால் போகச் சொல்லு!"

"இந்தப் பக்கம் ஒரு வீர வைஷ்ணவன் வந்தான். அவனைத் தேடிப் பிடிப்பதற்கு நீ ஒத்தாசை செய்தால் உன்னைச் சும்மா விட்டு விடுறேன்."

"எதற்காக அவனைப் பிடிக்க வேண்டும்?" என்றான் வந்தியத்தேவன்.

"துர்க்கா தேவிக்கு ஒரு வீர வைஷ்ணவனைப் பலி கொடுப்பதாக நான் சபதம் செய்திருக்கிறேன். அதற்காகத் தான்!" என்றான் தேவராளன்.

இந்தச் சமயத்தில் வந்தியத் தேவன் மதிள் சுவரில் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த சிறிய செடி வேரோடு பெயர்ந்து வர ஆரம்பித்தது.

வேலின் முனையில் சிக்காமல் எப்படித் தேவராளன் கழுத்தின்மேல் குதிப்பது என்று வந்தியத் தேவன் யோசித்துக் கொண்டே "அந்த வீர வைஷ்ணவன் என் அருமைச் சிநேகிதன். அவனுக்கு ஒரு போதும் நான் துரோகம் செய்ய மாட்டேன். அவனுக்குப் பதிலாக என்னையே பலி கொடுத்து விடு!" என்றான்.

"அப்படியானால் இந்த வேலுக்கு இப்போதே இரையாகி விடு!" என்று தேவராளன் வேலைத் தூக்கி வந்தியத் தேவன் மீது குறி பார்த்தான்.

வந்தியத் தேவன் செடியை விட்டு விட்டு வேலின் முனைக்கு அடியில் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு கீழே குதித்தான். குதித்த வேகத்தில் தரையில் மல்லாந்து விழுந்தான். தேவராளன் அந்த அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு வேலைத் தூக்கினான்.

அந்தச் சமயத்தில் பின்னாலிருந்து ஓர் உருவம் ஓடிவந்து தன் கையிலிருந்த தடியினால் தேவராளன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டது.

தேவராளன் வந்தியத் தேவன் பேரில் பொத்தென்று விழுந்தான்.

நாய் தன் எஜமானைத் தாக்கியவன் பேரில் பாய்ந்தது. ஆழ்வார்க்கடியான் அதற்கும் சித்தமா யிருந்தான். தன்னுடைய மேல் துணியை விரித்து நாயின் தலைமீது போட்டான். நாய் சில விநாடி நேரத்துக்குக் கண் தெரியாத குருடாகி யிருந்தது. அச்சமயம் சுருக்குப்போட்டுத் தயாராகவைத்திருந்த காட்டுக்கொடியை அதன் கழுத்தில் எறிந்து வைஷ்ணவன் நாயை ஒரு மரத்தோடு சேர்த்துப் பலமாகக் கட்டினான்.

இதற்குள் வந்தியத் தேவன் தேவராளனைத் தன்மேலிருந்து தூக்கித் தள்ளி விட்டு எழுந்தான்.

தேவராளன் வைஷ்ணவனுடைய ஒரே அடியில் நினைவு இழந்து மூர்ச்சையாகிக் கிடந்தான். இருவரும் இன்னும் சில காட்டுக் கொடிகளைப் பிடுங்கி அவனுடைய கால்களையும் கைகளையும் கட்டிப் போட்டார்கள்.

பிறகு வந்தியத் தேவன் வேலையும் ஆழ்வார்க்கடியான் கைத் தடியையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

சம்புவரையர் மாளிகையின் வாசற் பக்கத்தைத் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் நெடுந் தூரத்துக்குக் காடு மண்டிக் கிடந்தது. அதற்குள்ளே புகுந்து விட்டால் வெளியில் வருவது கஷ்டம். ஆகையால் வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் மதிள் சுவர் ஓரமாகவே விரைந்து சென்றார்கள்.

விரைந்து நடக்கும்போதே ஆழ்வார்க்கடியான் "நீ புத்திசாலி என்று நினைத்தேன். நான் நினைத்தது தவறு என்று இப்போது தெரிந்தது!" என்றான்.

"அவசரப்பட்டுச் சுரங்க வழியில் புகுந்ததைச் சொல்கிறீரா? அதன் மூலமாக எவ்வளவு பயங்கரமான மர்மங்களைக்

கண்டு பிடித்திருக்கிறேன் தெரியுமா?" என்றான் வந்தியத்தேவன்.

"அது ஒரு புறம் இருக்கட்டும். 'வைஷ்ணவனைக் கண்டு பிடிப்பதற்கு ஒத்தாசை செய்கிறாயா?' என்று தேவராளன் கேட்டதும், 'ஆகட்டும்' என்று சொல்லித் தொலைப்பதற்கு என்ன? வீணாக ஏன் அபாயத்துக்கு உள்ளாக வேண்டும்?" என்றான் வைஷ்ணவன்.

"எல்லாம் சகவாச தோஷந்தான்!" என்றான் வந்தியத்தேவன்.

"யாருடைய சகவாசத்தைச் சொல்கிறாய்? இத்தகைய தவறு செய்யும்படி நான் உனக்கு ஒருநாளும் சொன்னதாக நினைவில்லையே?"

"உம்மைச் சொல்லவில்லை, ஐயா! பொன்னியின் செல்வரைச் சொல்லுகிறேன். அவரைப் பார்த்துப் பழகிய பிறகு, பொய் சொல்லுவதற்கு உள்ளம் இடம் கொடுக்கவில்லை......"

"உயிர் தப்புவதற்காகக் கூடவா? அவ்வளவு சத்தியசந்தனாகி விட்டாயா?"

"அதுமட்டுமல்ல, நீர் எங்கேயோ பக்கத்தில் மறைந்திருக்கிறீர் என்று எனக்குத் தெரியும். நான் உம்மைப் பிடித்துக் கொடுக்கிறேன் என்று தேவராளனிடம் சொல்வதை நீர் கேட்டுக் கொண்டிருந்து அதை உண்மை என்று நம்பிவிட்டால்! இந்த ஆபத்துச் சமயத்தில் எனக்கு உதவி செய்ய வந்திருப்பீரா?"

"அப்பனே! உன் அறிவுக் கூர்மை அபாரம்; சந்தேகமில்லை. உண்மையில், தேவராளன் கேட்ட கேள்விக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் என்று கேட்க நான் மிகுந்த ஆவலாய்த்தான் இருந்தேன்!"

"பார்த்தீரா? நீர் ஒரு சந்தேகப் பிராணி என்று நான் கருதியது சரியாய்ப் போயிற்று. அதைத் தவிர, எப்பேர்ப்பட்ட நன்மை வருவதாயிருந்தாலும் வாய் வார்த்தைக்குக் கூடச் சிநேகத் துரோகமாக எதுவும் நான் சொல்லும் வழக்கமில்லை. ஆனால் நீர் 'அய்யனார் கோவிலில் காத்திருக்கிறேன்' என்று சொல்லிவிட்டு இங்கு வந்தது எப்படி? சுரங்க வழியில் நான் திரும்பி வந்திருந்தால் உம்மைக் காணாமல் திண்டாடியிருப்பேனே?" என்றான் வந்தியத்தேவன்.


"சுரங்க வழியில் நீ திரும்பி வந்திருந்தால் உயிரோடு வந்திருப்பது சந்தேகந்தான். நீ சுரங்க வழியில் புகுந்து சிறிது நேரத்துக்கெல்லாம் சதிகாரர்கள் அதில் புகுந்தார்கள். நீ புத்திசாலியாகையால் நிச்சயம் வேறு வழியாகத்தான் வருவாய். அநேகமாக இங்கே சுவர் ஏறிக் குதித்து வரக்கூடும் என்று எண்ணினேன்."

"அவ்வாறு எண்ணிக்கொண்டா இவ்விடத்துக்கு வந்தீர்?"

"அதுமட்டுமல்ல. சுரங்கப் பாதையில் புகுந்த சதிகாரர்கள் தேவராளனை மட்டும் வெளியில் காவலுக்கு வைத்து விட்டுச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும்போது அய்யனார் கோவிலில் யாரும் இல்லாமலிருக்க வேண்டாமா? அதற்காக ஏதோ சமிக்ஞை சொல்லிவிட்டுப் புகுந்தார்கள் போலிருக்கிறது. ஆனால் அது எனக்குத் தெரியாது. எல்லாரும் சுரங்கத்துக்குள் புகுந்து விட்டார்கள் என்று நினைத்தேன். நீ உள்ளே போய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாயே என்று வேறு கவலையாயிருந்தது. சுரங்கப் பாதையை வெளியிலிருந்து திறப்பதற்கு என்ன உபாயம் என்று தெரிந்து கொள்ளவும் விரும்பினேன். ஆகையால் பலி பீடத்தின் அருகில் சென்று அதைத் திருப்ப முயன்று கொண்டிருந்தேன். காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். தேவராளன் கையில் வேலுடன் வந்து கொண்டிருந்தான். என்னைக் கண்ட இடத்தில் கொன்றுவிடச் சதிகாரக் கூட்டத்தார் வெகு நாளைக்கு முன்பே தீர்மானித்திருந்தார்கள். அது எனக்குத் தெரியும். என் கையிலோ ஆயுதம் இல்லை. ஆகையால் ஓட்டம் பிடிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. தேவராளனும் தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருந்தான். அடர்ந்த காடாக இருந்தபடியால் அவனால் என்னைப் பிடிக்க முடியவில்லை. வேலை எறியவும் முடியவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு என்னை அவன் தொடர்ந்து வரவில்லை என்று தோன்றியது. வேட்டையைக் கைவிட்டு விட்டான் என்று எண்ணிக் காட்டிலிருந்து இனி இராஜ பாட்டைக்குப் போய்விடலாம் என்று உத்தேசித்தேன். சற்றுத் தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அதில் ஒரு சிறிய விளக்கு மினுக்கு மினுக்கு என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தக் குடிசையில் இராஜ பாட்டைக்கு வழி கேட்கலாம் என்று நினைத்து அதை அணுகினேன். சற்றுத் தூரத்திலிருந்து உற்றுப் பார்த்தேன். நல்ல வேளையாய்ப் போயிற்று. குடிசை வாசலில் தேவராளன் நின்று கொண்டிருந்தான். ஒரு பெண் பிள்ளையும் ஒரு நாயும் அவன் அருகில் நின்றார்கள். தேவராளன் பெண்பிள்ளையிடம் ஏதோ

சொல்லி விட்டு நாயை அழைத்துக் கொண்டு மறுபடியும் புறப்பட்டான். நாய் நான் நின்ற திசையை நோக்கிக் குரைத்தது. ஆகவே அபாயம் இன்னும் அதிகமாயிற்று. இராஜ பாட்டைக்குப் போகும் உத்தேசத்தைக் கைவிட்டுக் காட்டு வழியிலேயே புகுந்து ஓடி வந்தேன். நாய் அடிக்கடி குரைத்துக் கொண்டு வந்தபடியால் அவர்கள் எங்கே வருகிறார்கள் என்பதை நான் ஊகிக்க முடிந்தது. ஓடி வந்து கொண்டிருக்கும்போதே மூளையும் வேலை செய்து கொண்டிருந்தது. இரவு முழுவதும் காட்டில் சுற்றிக் கொண்டிருப்பது அசாத்தியம். எப்படியும் அவர்கள் வந்து பிடித்து விடுவார்கள். கையில் வேலுடன் கூடிய தேவராளனையும் வாயில் பல்லுடன் கூடிய வேட்டை நாயையும் ஏக காலத்தில் சமாளிப்பது சுலபம் அல்ல. அச்சமயத்தில் இப்பெரிய மாளிகையின் மதில் சுவர்





தெரிந்தது. மதிளில் ஏறி உள்ளே குதித்து விட்டால் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். அப்படியே ஏறி விட்டேன். அச் சமயம் நீ அரண்மனை மேன் மாடத்தில் ஓடி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். நீ மதிள் ஏறி வெளியே குதிப்பதற்குத்தான் ஓடி வருகிறாய் என்று தெரிந்து கொண்டு மறுபடியும் கீழே குதித்தேன். நாம் இரண்டு பேருமாகச் சேர்ந்து தேவராளனையும் அவனுடைய நாயையும் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இதற்குள் நாய் குரைக்கும் சத்தம் கேட்கவே பக்கத்திலிருந்த மரத்தின் மேலே ஏறிக் கொண்டேன். நாயும் தேவராளனும் நான் ஏறியிருந்த மரத்தை அணுகித்தான் வந்தார்கள். அதற்குள் நீ மதிள் சுவரிலிருந்து இறங்கியது தேவராளனின் கண்ணில் பட்டது போலும். நாயையும் அழைத்துக் கொண்டு நீ இறங்குமிடத்தை நெருங்கினான். பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரியும்......"

"வைஷ்ணவரே! விதியின் வலிமையைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இது என்ன கேள்வி! திடீரென்று விதியின் பேரில் உன்னுடைய எண்ணம் போனது, ஏன்?"

"ஒவ்வொருவனும் பிறக்கும் போதே 'இன்னாருக்கு இன்னபடி' என்று பிரம்மதேவன் தலையில் எழுதி விடுவதாகச் சொல்கிறார்களே! அதை நீர் நம்புகிறீரா, இல்லையா?"

"இல்லை! எனக்கு விதியில் நம்பிக்கையில்லை. விதியை முழுதும் நம்புவதாயிருந்தால், பரந்தாமனிடம் பக்தி செய்து உய்யலாம் என்பதற்குப் பொருள் இல்லாமற் போய் விடும் அல்லவா. ஆழ்வார்கள் என்ன சொல்லியிருக்கிறார்களென்றால்..."


"ஆழ்வார்கள் எதையாவது சொல்லியிருக்கட்டும். எனக்கு விதியில் பூரண நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. விதியின்படிதான் எல்லாம் நடக்கும் என்று கருதுகிறேன். இல்லாமற் போனால் இன்றைக்கு நான் தப்பித்துக் கொண்டு வந்திருக்க முடியாது......"

"அப்பனே! விதியினால் நீ தப்பித்து வரவில்லை. மதியின் உதவியினால் தப்பித்து வந்தாய்......"

"இல்லவே இல்லை; என் மதி என்னை ஆழந் தெரியாத அபாயத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது. விதி என்னை அதிலிருந்து கரையேற்றியது!"

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே காட்டைக் கடந்து வந்து விட்டார்கள். கடம்பூர் அரண்மனையின் முன் வாசல் அங்கிருந்து தெரிந்தது. அங்கு ஒரே அல்லோல கல்லோலமாக இருந்ததும் தெரிந்தது. பழுவேட்டரையரின் யானை, குதிரை, பரிவாரங்கள் வெளியிலிருந்து வாசலை நெருங்கி வந்து கொண்டிருந்தன. அமோகமாக அலங்கரிக்கப் பட்டிருந்த அரண்மனை வாசலில் சம்புவரையரும் அவருடைய பரிவாரங்களும் வரவேற்பதற்குக் காத்திருந்தார்கள். நூற்றுக் கணக்கான தீவர்த்திகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. பேரிகைகள், முரசுகள், கொம்புகள், தாரைகள், தப்பட்டைகள் ஒன்று சேர்ந்து முழங்கின.

ஆழ்வார்க்கடியான் வந்தியத் தேவனுடைய கையைப் பிடித்து இழுத்து "வா! போகலாம், யாராவது நம்மைப் பார்த்து விடப் போகிறார்கள்!" என்றான்.



"இந்தப் பக்கம் ஒருவரும் பார்க்க மாட்டார்கள். பார்த்தாலும் என்னுடைய விதி என்னைக் காப்பாற்றும்."

"அப்படியாவது எதற்காக இங்கே நிற்க வேண்டும்?"

"பெரிய பழுவேட்டரையர் யானை மீது வந்து இறங்கும் காட்சியைப் பார்க்க வேண்டாமா?"

"அது மட்டுந்தானா?"

"பழுவூர் ராணி நந்தினி அவருடன் யானை மீதில் வந்து இறங்குகிறாளா, அல்லது மூடு பல்லக்கில் வருகிறாளா என்று பார்க்கவும் விரும்புகிறேன்..."

"தம்பி! விதி எப்போதும் உனக்கு அனுகூலமாக இருக்கும் என்று எண்ணாதே. ஒரு மாய மோகினியின் உருவத்தில் வந்து உன்னைக் குடை கவிழ்த்தாலும் கவிழ்த்து விடும்......"

"அப்படியெல்லாம் மயங்கி விடுகிறவன் நான் அல்ல, வைஷ்ணவரே! அதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்!"

கம்பீரமான யானை வந்து அரண்மனை வாசலில் நின்றது. அதன்மேலிருந்து பெரிய பழுவேட்டரையர் இறங்கினார். அவரைத் தொடர்ந்து பழுவூர் இளைய ராணியும் இறங்கினாள்.

"ஓ! இந்தத் தடவை இளைய ராணி மூடு பல்லக்கில் வரவில்லை. பகிரங்கமாகவே அழைத்து வந்திருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அதைத் தெரிந்து கொள்ளத்தான் விரும்பினேன். இனிப்போகலாம்" என்று வந்தியத்தேவன் பின்னால் சென்றான்.

ஆனால் இப்போது ஆழ்வார்க்கடியான் பின் செல்வதற்கு அவ்வளவு அவசரப்படவில்லை. மேலும் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். பழுவூர் இளைய ராணி நந்தினியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

தற்செயலாகவோ, அல்லது அவனுடைய மனோ சக்தியினால் இழுக்கப்பட்டுத்தானோ என்னவோ நந்தினி அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

ஆழ்வார்க்கடியானுடைய முகம் இருண்ட மரங்களின் மத்தியிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கூர்ந்து கவனித்தாள்.

அவள் முகத்தில் உடனே பீதியின் சாயல் பரவிற்று.

இளைய ராணியின் முக மாறுதலைப் பெரிய பழுவேட்டரையர் கவனித்தார். அவள் பார்த்த திசையை அவரும் ஒரு தடவை கூர்ந்து நோக்கினார்.

இரண்டு உருவங்கள் நெருங்கி வளர்ந்திருந்த மரங்களின் இருண்ட நிழலில் மறைந்து கொண்டிருந்தன.

உடனே சம்புவரையரின் காதோடு ஏதோ சொன்னார்.

சம்புவரையர் தம்முடைய வீரர்களில் இருவருக்கு ஏதோ கட்டளையிட்டார்.

பழுவேட்டரையரும் இளையராணியும் அமோகமான வாத்திய கோஷங்களுக்கிடையில் அரண்மனை வாசல் வழியாக உள்ளே பிரவேசித்தார்கள்.

அதே சமயத்தில் இரண்டு குதிரை வீரர்கள் அரண்மனை மதிளைச் சுற்றியிருந்த காட்டிற்குள் பிரவேசித்தார்கள்.

குதிரைகளைக் காட்டுக்குள் அவர்கள் கஷ்டத்துடன் செலுத்திக் கொண்டு போனார்கள்.

வெகுதூரம் சென்றும் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கிட்டத்தட்டக் காட்டைக் கடந்து அப்புறத்தில் சமவெளியாக இருந்த திறந்த மைதானத் தண்டை வந்து விட்டார்கள்.

"அண்ணே! காட்டில் ஒருவரும் இல்லை. கிழவரின் மனப் பிராந்திதான்!" என்றான் அவர்களில் ஒருவன்.

அச்சமயம் நாய் ஒன்று அவர்களுக்கெதிரே ஊளையிட்டுக்கொண்டு வந்தது.

"தம்பி! நாய் எப்போது ஊளையிடும் தெரியுமா?" என்று மற்றவன் கேட்டான்.

"யாராவது செத்துப்போனால் ஊளையிடும்!" என்றான் முதலில் பேசியவன்.

"பேய் பிசாசு வேதாளம் முதலியவைகளைக் கண்டாலும் ஊளையிடும்!" என்றான் இன்னொருவன்.

"உன்னைப் பார்த்துத் தான் பிசாசு என்று நினைத்துக் கொண்டு விட்டதோ, என்னமோ?"

"இல்லை, தம்பி! உன்னை வேதாளம் என்று எண்ணிக் கொண்டு விட்டது!"

இச்சமயத்தில் அவர்களுடைய தலைக்கு மேலே பயங்கரமான பேய்ச் சிரிப்பைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தார்கள்.

இரண்டு பேரின் தலைக்கு மேலேயும் இரண்டு மரக் கிளைகளில் இரண்டு வேதாளங்கள் உட்கார்ந்திருந்தன!

இரண்டு வேதாளங்களும் அந்த இரண்டு வீரர்களின் கன்னத்திலும் பளீர் என்று அறைந்து, கழுத்தைப் பிடித்து நெட்டிக் கீழே தள்ளின!

பிறகு, அந்தப் பொல்லாத வேதாளங்கள் குதிரைகளின் மீது ஏறிக் கொண்டு காட்டைக் கடந்து திறந்த மைதானத்தில் விரைந்து சென்றன!

அத்தியாயம் 11

தோழனா? துரோகியா?

மணிமுத்தாநதி வெள்ளாற்றில் கலக்கும் வனப்பு வாய்ந்த இடத்தைத்தாண்டி ஆதித்த கரிகாலனும் அவனுடைய தோழர்களும் பரிவாரங்களும் வந்து கொண்டிருந்தார்கள்.

முதல் நாள் இரவு திருமுதுகுன்றத்தில் இளவரசருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றியும், அந்த க்ஷேத்திரத்தில் நடந்து கொண்டிருந்த ஆலயத் திருப்பணியைப் பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள்.

"திருமுதுகுன்றத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் செய்த காரியம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்றான் பார்த்திபேந்திரன்.

"எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?" என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"கிழவியைப் பாடமாட்டேன் என்று சொன்னதைத்தான்!"

"அது என்ன? எனக்குத் தெரியாதே? விவரமாகச் சொல்" என்றான் ஆதித்த கரிகாலன்.

சுந்தர மூர்த்தி நாயனார் க்ஷேத்திர யாத்திரை செய்து கொண்டு வந்த பொழுது திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்துக்கு வந்தார். வழக்கம் போல் அந்த ஊர் சிவாலயத்துக்குச் சென்றார். பட்டர்கள் நாயனாருக்குச் சுவாமி தரிசனம் பண்ணுவித்து, "எங்கள் ஊர் இறைவன் பேரிலும் பதிகம்பாடி அருள வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார்கள்.

"பார்ப்போம். இந்த ஆலயத்திலுள்ள சுவாமியின் பெயர் என்ன?" என்று சுந்தரர் கேட்டார்.

திருமுது குன்றம் என்ற பெயரைக் கொண்டு அந்தச் சிவாலயத்திலுள்ள சுவாமிக்கு **விருத்த கிரீசுவரர்** என்று பெயர் சூட்டி யிருந்தார்கள். பட்டர்கள் அந்தப் பெயரைச் சொன்னார்கள்.

நாயனாரின் முகம் சுருங்கிற்று. போயும் போயும் கிழவரையா பாட வேண்டும் என்று மனத்தில் எண்ணிக் கொண்டு, "போகட்டும்; அம்மன் பெயர் என்ன?" என்று வினவினார்.

"விருத்த கிரீசுவரி" என்றார்கள் கோவில் பட்டர்கள்.

"சுவாமிக்குத்தான் கிழவர் என்று பட்டம் கட்டினீர்கள்; அம்மனையும் கிழவியாக்கி விட்டீர்களே? கிழவனையும் கிழவியையும் என்னால் பாட முடியாது போங்கள்!" என்று சொல்லி விட்டுச் சுந்தர மூர்த்தி நாயனார் கோபமாகக் கோவிலை விட்டுக் கிளம்பி விட்டார்.

சுந்தர மூர்த்தி நாயனாரால் பதிகம் பாடப் பெறு விட்டால் தங்கள் ஊர் ஆலயத்துக்கு மகிமை ஏற்படாது என்று பட்டர்கள் கருதினார்கள்.

ஆகையால் ஆலயத்தில் இன்னொரு அம்மனைப் பிரதிஷ்டை செய்து 'பாலாம்பிகை' என்று பெயர் சூட்டினார்கள்.

மறுபடியும் சுந்தர் மூர்த்தி நாயனார் இருந்த இடத்துக்குப் போய் அவரிடம் மேற்படி விவரத்தைச் சொல்லித் திரும்பவும் திருமுது குன்றம் ஆலயத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் பெரிய மனது செய்து மீண்டும் அந்த ஊருக்குச் சென்று பாலாம்பிகை சமேத விருத்த கிரீசுவரர் மீது பதிகம் பாடித் துதித்தார்!

இந்தக் கதையைக் கேட்டு விட்டு ஆதித்த கரிகாலன் உடல் குலுங்கக் குலுங்கச் சிரித்தான்.

"பெரிய பழுவேட்டரையரிடம் வந்த கவிஞன் யாராவது ஒருவேளை சுந்தர மூர்த்தியைப் போல் சொல்லியிருப்பான். கிழவனையும் கிழவியையும் பாடமாட்டேன் என்று கூறியிருப்பான். அதற்காகத்தான் அவர் நந்தினியை மணந்து கொண்டாரோ, என்னமோ?" என்றான்.

இதைக் கேட்டுப் பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்படி அவர்கள் சிரித்த சிரிப்பில் குதிரைமேலிருந்து கீழே விழுந்து விடுவார்கள் போலிருந்தது.

சிரித்து ஓய்ந்த பிறகு, பார்த்திபேந்திரன், "கடவுள் மூதுமை என்பதாக ஒன்றை எதற்காக ஏற்படுத்தி யிருக்கிறாரோ, தெரியவில்லை. அவரவர்களும் அவரவர்களுக்கு விதிக்கப் பட்ட வயது வரையில் ஒரேமாதிரி இருந்து விட்டுச் சாவது என்று ஏற்படுத்தி யிருக்கக் கூடாதோ?" என்றான்.

"கடவுள் என்ன ஏற்படுத்தினால் என்ன? மூதுமை அடைவதும் அடையாததும் நம்முடைய கையிலேதானே இருக்கிறது?" என்றான் கரிகாலன்.

"அது எப்படி முடியும்?" என்று கந்தமாறன் கேட்டான்.

"அபிமன்யுவையும் அரவானையும் கிழவர்கள் என்று நாம் எண்ணுவதுண்டா?"

மற்ற இருவரும் ஒன்றும் கூறாமல் மௌனமா யிருந்தார்கள்.

"தஞ்சாவூர் அரண்மனைச் சித்திர மண்டபத்தில் என் மூதாதையர்களின் சித்திரங்கள் எல்லாம் எழுதியிருக்கின்றன. விஜயாலய சோழர், ஆதித்த சோழர், பராந்தக சக்கரவர்த்தி எல்லாரும் முதிய பிராயத்தவராகக் காட்சி அளிக்கிறார்கள். ஆனால் என் பெரிய பாட்டனார் இராஜாதித்தர் எப்படியிருக்கிறார்? நவ யௌவன வீர புருஷராக விளங்குகிறார்! இராஜாதித்தர் இளம் வயதில் இறந்து போனார்; அதனால் என்றைக்கும் அவர் யௌவனம் நீங்காத பாக்கியசாலி ஆனார்! நம்மில் யாருக்கு அத்தகைய பாக்கியம் கிட்டுகிறதோ, தெரியவில்லை!"

மற்ற இருவருக்கும் இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள்.

"ஏன் திடீரென்று மௌனமாகி விட்டீர்கள்? சாவு என்றால் உங்களுக்கு ஏன் இவ்வளவு பயம்? இந்த உடம்பு போனால் இன்னொரு புத்தப் புதிய உடம்பு கிடைக்கிறது. எதற்காக மரணத்துக்கு அஞ்ச வேண்டும்? என்னுடைய நண்பன் வந்தியத் தேவன் இங்கே இருந்தால் என்னை ஆமோதிப்பான். அவனைப் போன்ற உற்சாக புருஷனைக் காண்பது அரிது. யமலோகத்தின் வாசலில் கொண்டு போய் விட்டாலும் அவன் குதூகலமாய்ச் சிரிப்பான்!" என்றான் இளவரசன் கரிகாலன்.

அச் சமயத்தில் அவர்களுக்கு எதிரே சாலையில் இரண்டு குதிரைகள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வெகு வேகமாக வருவதை அவர்கள் பார்த்தார்கள். கண்மூடித் திறக்கும் நேரத்தில் அக் குதிரைகள் அவர்களை நெருங்கி வந்து விட்டன. அவை வந்த வேகத்தைப் பார்த்தால் இளவரசர் கோஷ்டி எதிரில் வருவதைக் கூடக் கவனியாமல் தாண்டிப் போய்விடும் எனத் தோன்றியது.

அவ்வளவு அகம்பாவம் பிடித்தவர்கள் யார் என்று பார்ப்பதற்காகக் கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் வேல்களை நீட்டிச் சாலையின் குறுக்கே வழி மறிக்க ஆயத்தமானார்கள்.

ஆனால் வந்த குதிரைகள் அவர்களுக்குச் சிறிது தூரத்தில் தடால் என்று பிடித்து இழுத்து நிறுத்தப்பட்டன.

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் குதிரைகள் மீதிருந்து கீழே குதித்தார்கள்.

வந்தியத் தேவனைக் கண்டதும் இளவரசன் ஆதித்த கரிகாலனுக்குக் குதூகலம் தாங்கவில்லை. அவனும் குதிரை மீதிருந்து கீழே குதித்து முன்னேறிச் சென்று வந்தியத் தேவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

"தம்பி! உனக்கு வயது நூறு. இப்போதுதான் உன் பெயரைச் சொல்லி ஒரு கண நேரங்கூட ஆகவில்லை!" என்றான் கரிகாலன்.

கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் இந்தக் காட்சியைப் பார்த்து அடைந்த அசூயை அவர்கள் முகத்தில் தெரிந்தது. அவர்கள் சற்று முன்னால் குதிரையைச் செலுத்திக் கொண்டு போய் நின்றார்கள்.

சிறிது தூரத்தில் இன்னும் சில குதிரைகள் வருவதை அவர்கள் கண்டார்கள். சில நிமிஷத்துக்கெல்லாம் அந்தக் குதிரைகளும் வந்து நின்றன. அந்தக் குதிரைகளின் மீது வந்தவர்கள் கடம்பூர் ஆள்கள் என்பதைக் கந்தமாறன் கவனித்தான். அவர்களிடம் நெருங்கிச் சென்று விவரம் கேட்டான்.

பின்னர், இளவரசன் ஆதித்த கரிகாலனிடம் வந்தான். "கோமகனே! இந்த வந்தியத்தேவன் தங்களுக்கும் நண்பன்; எனக்கும் சிநேகிதனாகத்தான் இருந்தான். ஆனால் இவன்மீது நான் குற்றம் சுமத்த வேண்டியதா யிருக்கிறது. இவன் சிநேகத் துரோகி! இவன் என்னை முதுகில் குத்திப் படுகாயப்படுத்தினான்! ஆகையால் இவன் விஷயத்தில் தாங்கள் ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும் என்று எச்சரிப்பது என் கடமையாகிறது!" என்றான் கந்தமாறன். (தொடரும்)



தீபாவளி
ரிலீஸ்
17ம் முதல்
மாடர்ன்
தியேட்டர்ஸ்
வளையாபதி
சென்னை
பிரபாத்·கெயிட்டி
ஸரஸ்வதி
மற்றும்
தமிழ்நாடெங்கும்
டைரக்ஷன்: T.R. சுந்தரம் & மஸ்தான்



தங்கையின் சீதனம்

எஸ்.வி.எஸ்

சுலோசனா கண்டிப்பாகக் கூறி விட்டாள். ''கல்யாணம் செய்து கொண்டால் அவரைத்தான் —ஜகந்நாதனைத்தான் — செய்து கொள்வேன். இல்லையெனில் எனக்குக் கல்யாணமே வேண்டாம், அப்பா!'' என்று சொன்னபோதுதான் கந்தசாமி முதலியார் தாம் வாழ்க்கையில் என்றும் கண்டறியாத அதிர்ச்சியை அடைந்தார். அடியற்ற மரம் போல உட்கார்ந்து விட்டார். அவர் தலை கிறு கிறு என்று சுழலத் தொடங்கியது.

இருந்தாலும் மனதைச் சற்றுத் திடப்படுத்திக் கொண்டு, ''அம்மா, சுலோசனா! அவன் பரம தரித்திரனாயிற்றே! அஷ்ட ஐசுவரியத்தில் வளர்ந்த நீ அந்த அஷ்ட தரித்திரன் வீட்டில் கஷ்டப்படுவாயா!'' என்றார். அவர் குரல் தழதழத்தது.

''கஷ்டப்பட்டால் என்ன, அப்பா! கல்யாணம் என்றால் கஷ்டமும் இருக்கும், சுகமும் இருக்கும். இரண்டையும்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றாள் சுலோசனா.

''இந்த வாக்கியங்கள் எல்லாம் கதை, கட்டுரைகளில் வந்தால் படிப்பதற்கு ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கும்; சினிமாவில் 'டைலாக்'காக வந்தால் ரொம்ப ஜோராக இருக்கும். ஆனால் நடைமுறையில் இந்தப் பேச்செல்லாம் சரிப்பட்டு வராது அம்மா'' என்றார் கந்தசாமி முதலியார்.

''அப்பா! நீங்களா இப்படிச் சொல்கிறீர்கள்! உங்கள் இளமைப் பருவ வாழ்க்கையைப் பற்றியெல்லாம் என்னிடம் சொல்லி வந்த நீங்களா இப்படிச் சொல்லுகிறீர்கள்! அப்படியானால் இத்தனை நாளும் உங்கள் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களைப் பற்றியும், அம்மாவும் நீங்களும் நடத்திய வாழ்க்கையைப் பற்றியும் கூறியவையெல்லாம் பொய்யா......!'' என்று கேட்டாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கந்தசாமி முதலியார் திக்பிரமை பிடித்தவர் போல் ஆகி விட்டார். அவருக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. ஆயினும் 'சுலோசனா எவ்வளவு புத்திசாலி! சாமர்த்தியமாக என் வார்த்தைகளைக் கொண்டே என்னை மடக்கி விட்டாளே' என்று எண்ணி மகிழ்ந்தார். அந்த மகிழ்ச்சியினூடே, 'இந்தப் புத்திசாலிப் பெண்ணுக்கு ஏற்ற வரனாக இல்லாமல், எவனையோ அல்லவா இவள் தேர்ந்தெடுத்திருக்கிறாள்' என்ற வருத்தமும் அவருக்கு இருந்தது!

இந்தச் சமயத்தில் டிரிங், டிரிங், டிரிங் என்று டெலிபோன் அறையிலிருந்து டெலிபோன் மணிச் சத்தம் கேட்டது. உடனே சுலோசனா டெலிபோன் அறையை நோக்கிப் போனாள்.

சுலோசனா அந்த அறையை விட்டு அகன்றதும், கந்தசாமி முதலியார் நீண்ட பெருமூச்சு விட்டார்.

அப்பொழுது இரவு ஏழு மணியிருக்கும். அவர் பங்களாவுக்கு எதிரில் தான் அவருடைய பெரிய மோட்டார் ஷாப் இருந்தது. அவர் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்தால் அவருடைய கடையின் பெயர்ப் பலகை நன்றாகத் தெரியும். அதுவும் இரவு வேளையில் 'கந்தன்' என்ற அவர் கடையின் பெயர்ப் பலகை நன்றாகத் தெரிவதற்காக வினாடிக்கு வினாடி அணைந்து எரியும் மின்சார விளக்கு ஏற்பாட்டைச் செய்திருந்தார். ஆகவே, இன்று சாய்மான நாற்காலியிலிருந்து அவர் வெளியே பார்த்த போது கந்தன்ஸ் என்ற விளம்பரப் பலகை ஒரு வினாடி கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் பிரகாசித்ததால் அடுத்த வினாடி ஒரே இருட்டாக அடித்தது. இப்படி மாற்றி மாற்றி ஒளியும் இருளும் வந்ததானது அவரை இன்று கேலி செய்வது போலிருந்தது. 'உன்னுடைய மனக் கோட்டைகள் வெறும் மணல் கோட்டைகளாக முடிந்தன, பார்த்தாயா! உன்னுடைய லக்ஷியம் எல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டது, பார்த்தாயா!' என்று கை கொட்டிச் சிரிப்பது போலிருந்தது. அவரால் அந்த விளம்பரத்தைப் பார்க்க முடியவில்லை. தமது சொந்த முயற்சியில் உருவாக்கிய அந்தக் கடையை அவரால் பார்க்க முடியவில்லை. கண்களை இறுக மூடிக் கொண்டார்.

அடுத்த கணம் அவர் மனக்கண் முன் அவருடைய மனைவி மரகதத்தின் இன்முகம் தோன்றி

யது. இருபது வருஷங்களுக்கு முன், அவரும் அவளும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டார்களே, அப்பொழுது காணப்பட்ட அவளுடைய அழகு பொலிவும் முகம் தோன்றியது. அத்துடன் அவர்கள் திருமண தினத்தன்று நடந்த ரகளைகள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

ஸ்ரீமான் கந்தசாமி முதலியார் ஊரிலேயே பெரிய பண்ணையார்கள் என்று கருதப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர். மிகவும் செல்வமாகவும் செல்வாக்குடனும் வளர்ந்தார். அப்படி வளர்ந்த பையனுக்குப் படிப்பு ஏறவில்லை என்றால் பெற்றோர் பொறுப்பார்கள்; ஆனால் அவர்கள் அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட குடும்பத்தில் கல்யாணம்செய்து கொள்ளுகிறேன் என்றால் பொறுப்பார்களா! எவ்வளவு வெட்கக் கேடான விஷயம்! இந்த வெட்கக் கேடான விஷயத்தைச் செய்யத் துணிந்து விட்டார் அந்த நாளில் கந்தசாமி முதலியார்.

அதாவது, உள்ளூரில் தண்ணீர் மொண்டு கொடுத்தும், அப்பளம் இட்டுக் கொடுத்தும் ஜீவனம் செய்து வந்த ஒரு விதர்வையான அம்மாளின் ஒரே புதல்வியைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகப் பிடிவாதம் பிடித்தார். அதன் விளைவாகக் கந்தசாமி வீட்டிலிருந்து சற்றும் இரக்கமின்றி விரட்டப் பட்டார்.

பிறகு கொஞ்ச நாளில் கந்தசாமி முதலியாரின் தந்தை நிலங்களை யெல்லாம் தாம் சுயார்ஜிதத்தில் சம்பாதித்தது என்று ஸ்தாபித்து, அவற்றை யெல்லாம் கோவிலுக்கும் மற்ற தான தர்மங்களுக்கும் எழுதி வைத்து விட்டார். கந்தசாமிக்கு ஒரு குழி நிலம்கூட வைக்கவில்லை.

கந்தசாமி முதலியார் வீட்டிலிருந்து விரட்டப் பட்ட போது கையில் காலணாக் கூட இல்லாமல் தான் படியை விட்டு இறங்கினார். மரகதமும் அவருமாக இறங்கினார்கள். ஆனால், அவர் கையில் ஒரு தங்க மோதிரம் போட்டிருந்தார். அதை ஒரு தங்க வியாபாரியிடம் விற்றார். இருபது ரூபாய் கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு அவரும் மரகதமும் ஊரை விட்டே கிளம்பினர். சென்னைப் பட்டணத்துக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டனர்.

சென்னைப் பட்டணத்தில் கந்தசாமி முதலியாருக்கு உற்றாரும் கிடையாது; உறவினரும் கிடையாது. அப்படியிருந்தாலும் கந்தசாமி அங்கே மரகதத்துடன் இறங்க முடியுமா? தங்கத்தான் முடியுமா? ஆகவே, ஏதோ ஒரு வீட்டில் இரண்டு ரூபாய் வாடகையில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். ஆம்; அந்த நாட்களில் அவ்வளவு சொற்ப வாடகையில் சென்னைப் பட்டணத்தில் கூட இடம் கிடைத்தது. இடம் எல்லாம் பிடித்துக் குடும்பம் நிறுவியான பிறகுதான், குடும்பம் நடத்துவதற்கு வழி என்ன என்பது பற்றித் தீவிரமாக யோசிக்கத் தலைப்பட்டார்.



மூன்றாம் பாரம் பரீட்சை மூன்று தடவை எழுதி மூன்று தடவை பெயிலானவருக்கு யார் என்ன வேலை கொடுப்பார்கள்! அப்படிக் கொடுத்தால்தான், மேஜையடியில் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து வேலை செய்வது என்பது அவரால் முடியாதே! என்ன செய்வது! ஏதாவது ஒரு தொழில் ஆரம்பிக்கலாம். என்ன தொழில் செய்யத் தெரியும்! இவ்வாறு என்னவெல்லாமோ சென்னைக்குப் போன புதிதில் ஒரு நாள் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அவர் சிந்தனையைக் கலைக்க வந்ததுபோல், "ஸார்! பக்கத்திலே சைக்கிள் ரிப்பேர் ஷாப் எங்கே இருக்கிறது! தயவுசெய்து சொல்லுங்களேன்!" என்று ஒருவர் கெஞ்சலாகக் கேட்டார். அவர் ஒரு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்திருந்தார்.

"நானே இந்த ஊருக்குப் புதிசு! சைக்கிள் ஷாப் எங்கேயிருக்கிறது என்று தெரியாதே!" என்றார்.

"என்ன கஷ்டகாலம்! அவசர காரியமாகப் போகவேணும் என்று புறப்பட்டால் இப்படிப் பஞ்சராகித் தொலைந்ததே! அட ஈசுவரா!" என்று அலுத்துக் கொண்டார் அந்த மனிதர்.

"பஞ்சர் தானே! சற்று இருங்கள். என்னிடம் ஸொல்யூஷனும் ரப்பரும் இருக்கிறது. நானே பஞ்சர் அடைத்துத் தந்து விடுகிறேன்......" என்று சொல்லி உள்ளே போனார் கந்தசாமி.

சிறு வயதில், விஷயங்களுக்கு மதிப்பு எப்படி எப்படியோ கொடுத்து விடுகிறோம். லக்ஷ ரூபாய் மதிப்புள்ள வைரக் கல்லைக் கண்டால்பிடிப்பதில்லை; காலணா பெறாத கண்ணாடித் துண்டைத் தலையில் வைத்துக் கொண்டு குதிப்போம். அப்படித்தான் கந்தசாமி முதலியாரும் சிறு வயதில் ஒரு லிக்கு ஆணியைக் கண்டால் எடுத்து வைத்துக் கொள்வார்; ஒரு இரும்பு 'நட்'டைக் கண்டால் பத்திரப்படுத்தி வைப்பார். மேலும் வீட்டில் ஓட்டை சைக்கிள் இருந்தது. அதற்குத் தினம் ஏதாகிலும் ஒரு வியாதி வந்துவிடும். அதை ரிப்பேர் செய்வதில் அவருடைய நாள் எல்லாம் கழிந்து விடும். பள்ளிக் கூடம் போகத் தோன்றாது; சாப்பாடு வேண்டியிருக்காது. இப்படி இருந்தவர், ஊரை விட்டுப் புறப்படும் போது, சைக்கிள் ரிப்பேர் செய்யும் சாமான் பெட்டி மட்டும் எடுத்துக் கொண்டு வந்தார். ஆம், அந்தப் பெட்டியின் மீது அவர்

தம் உயிரையே வைத்திருந்தார் என்று சொன்னால் அது கொஞ்சங்கூட மிகையல்ல.

சைக்கிள் பஞ்சராகி விட்டது என்று அந்த நபர் சொல்லவே, கந்தசாமி, உள்ளே நுழைந்து அந்தப் பெட்டியைக் கொண்டு வந்தார். நல்ல வேளையாக அதில் ரப்பர் ஒட்டும் பிசினும், ரப்பர் துண்டும் இருந்தது. பக்கெட்டில் தண்ணீர் கொண்டுவந்து வைத்துக் கொண்டு 'ட்யூப்'ல் எங்கே துவாரம் இருக்கிறது என்று கண்டு பிடித்து ஒட்டுப் போட்டுக் கொடுத்துவிட்டார். எல்லாம் பத்து நிமிஷத்தில் முடிந்து விட்டது. சைக்கிள் சொந்தக் காரருக்கானால் சந்தோஷம் தாங்கவில்லை.

"ஸார், சமயத்துக்கு உதவினீர்கள்! நீங்கள் நன்றாய் இருக்க வேண்டும். உங்களிடம் அஞ்சு ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா!" என்று அவர் கேட்டார்.

"நீங்க ஒண்ணு! நானே ஒரு அன்னக் காவடி. அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீங்களோ என்னிடம் அஞ்சு ரூபாய்க்குச் சில்லறை கேட்கிறீர்கள்!......"

"அஞ்சு ரூபாய்க்குச் சில்லறை இல்லையென்றால், இந்த அஞ்சு ரூபாய் நோட்டையே வைத்துக் கொள்ளுங்கள். இதை மாற்றி ஒரு ரூபாய் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், பாக்கி நாலு ரூபாயை நான் சாயங்காலம் திரும்பி வரும் போது வாங்கிக் கொள்கிறேன்..." என்று சொல்லிக் கொண்டே சைக்கிள் ஏறினார் அம்மனிதர்.

"இந்தச் சின்ன உதவிக்கு ஒரு ரூபாயா!" என்றார் கந்தசாமி.

"நான் எவ்வளவு அவசரத்திலிருக்கிறேன் என்பதை அறிந்தீர்களானால் இவ்வாறு சொல்ல மாட்டீர்கள். 'ஒரு ரூபாய் என்ன, அஞ்சு ரூபாயையுமே கொடுக்கலாம்' என்பீர்கள்" என்று கூறி விட்டு வேகமாகச் சைக்கிளை ஒரு மிதி மிதித்துக் கொண்டு போய் விட்டார்.

அன்று மாலை அவர் வரவில்லை; மறு நாளும் அவர் வரவேயில்லை. ஒரு வாரம் வரைக்கும் தாமதித்துப் பார்த்தார், வரவில்லை. கடைசியாக, கடவுளின் விருப்பம் இதுதான் போலும், என்று நினைத்து நாலு ரூபாயை மூலதனமாகக் கொண்டு கந்தசாமி தாம் குடியிருந்த வீட்டுத் திண்ணையில் ஒரு சைக்கிள் ரிப்பேர் ஷாப் வைத்தார்.

இந்த நாளைப்போல் அந்த நாட்களில் ஷாப் சட்டம் இருக்கவில்லை. காலை ஆறு மணியிலிருந்து ராத்திரி பத்து மணி வரை கடையில் உட்கார்ந்து வேலை செய்வார் கந்தசாமி. 'வீட்டில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சும்மாவியாக உட்கார்ந்து சாப்பிடக் கூடிய பாக்கியம் பெற்றிருக்க, அதை வேண்டாமென்று உதறித் தள்ளி விட்டுக் காலையிலிருந்து மாலை வரை உழைத்துச் சாப்பிட வேண்டி நேர்ந்ததே' என்று அவர் சற்றும் வருத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக அப்படி உழைத்துப் புசித்த அன்னம் அவருக்கு அமிர்தமாக ருசித்தது. அதுவும் மரகதத்தின் கைச் சாப்பாடு என்றால் கேட்கவும் வேண்டுமா!

கந்தசாமி முதலியார் அந்த நாட்களில் ஒரு நாளைக்குச் சுமார் ஐந்து ரூபாய் சம்பாதித்தார். அவர் அன்றாடம் சம்பாதிப்பதை யெல்லாம் மரகதத்தினிடம் கொடுப்பார். அவள் அந்த ஐந்து ரூபாயில் நாலு ரூபாய் மிச்சம் பிடித்து விடுவாள். ஆறு மாசத்திலேயே மரகதத்தின் ஒத்துழைப்பினால், சொந்தத்தில் நாலு சைக்கிள் வாங்கிப் போட்டு வாடகைக்குச் சைக்கிள் கொடுக்கவும் ஏற்பாடு செய்து கொண்டார். இப்பொழுது வருமானம் அதிகரித்தது; பிறகு மிகச் சகாய விலையில் பழம் சைக்கிள் வண்டிகளை வாங்கி அவற்றை ரிப்பேர் செய்து, நல்ல விலை வைத்து விற்று விடுவார். இந்த வியாபாரத்திலும் கந்தசாமிக்கு நல்ல லாபம் கிடைத்தது. இவ்வாறு அவர் வியாபாரம் கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியாகிச் சொந்தத்தில் மோட்டார் ரிப்பேர் கம்பெனியே வைத்து விட்டார்.



இதிலும் வியாபாரம் பெருகியது; வருமானம் பெருகியது. இன்பம் பெருகியது. எனினும் அந்த இன்பத்தினிடையே ஒரு சிறு குறையும் தலை யெடுக்க லாயிற்று.

இந்தக் குறை அதிக நாள் நீடிக்கவில்லை. கடவுளே, இப்படித் தன் சொந்த முயற்சியில் முன்னுக்கு வந்தவனுக்கு ஒரு சிறிதும் குறை வைக்கக் கூடாது என்று கருதினாரோ என்னவோ, தெரியவில்லை!

மரகதம் கர்ப்பவதியானாள்; சில நாட்களில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அவளுக்குச் சுலோசனா என்று பெயரிட்டுத் தாயும் தந்தையும் மகிழ்ந்தனர். அவளுக்குப் பொம்மைகள், சட்டைகள், அணி மணிகள் வாங்கிக் கொடுத்து மகிழ்ந்தனர். இந்த மகிழ்ச்சி இரண்டு ஆண்டுகள்தான் மரகதத்துக்கு நீடித்தது. இதற்குப் பிறகு மரகதம் இந்த மண்ணுலக வாழ்வை நீத்தாள்.

பிறகு குடும்பப் பொறுப்பு ஏற்பதற்காக மற்றொருத்தியைக் கரம் பிடிக்கச் சொல்லி எத்தனையோ பேர் தொந்தரவு செய்தனர். பணம் படைத்த முதலாளி யென்றால், சும்மா விட்டு விடுவார்களா! நச்சரித்தனர். ஆனால் கந்தசாமி மரகதம் வகித்த ஸ்தானத்தில் இன்னொரு பெண்ணை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார். ஆம்; அந்த ஸ்தானத்தை யாரால் அடைய முடியும்! அவளுடைய தியாகம் என்ன! ஒத்துழைப்பு என்ன! சே, சே, இன்னொருத்தியை மணப்பது என்பது மரகதத்துக்குத் தாம் இழைக்கும் அநீதி என்று நினைத்தார். அது மட்டுமல்ல, அப்படி மணம் புரிவது மனுஷத் தன்மையை விட்டிறங்கி, மிருகமாவது போலாகும் என்றும் நினைத்தார். ஆகவே, பிடிவாதமாகக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தார்.

பிறகு கொஞ்ச நாள் கழித்து, கைம்மை எய்திய அவளுடைய சகோதரி ஒருத்தி வந்து வீட்டைக் கவனிக்கலானாள்.

கந்தசாமி, தாயை இழந்த சுலோசனாவிடம் தாயின் அன்பையும் சேர்த்து வைத்து ஒரு குறைவுமின்றி வளர்த்து வந்தார்.

வியாபாரத் துறையிலும் ரொம்ப தூரம் முன்னேறி மோட்டார் ஸ்ப்பேர் ஷாப்புடன் சொந்தமாக மோட்டார் கார் இறக்குமதி செய்து விற்கும் பெரு வியாபாரியாகவே ஆகிவிட்டார்.

இப்படி இவர் பெறும் லாபம் பாங்கியிலிருந்த இவர் பெயரேட்டில் வரவுப் பத்தியில் தொகை பெரிதாகி வந்தது; சுலோசனாவுக்கும் வயதாகி வந்தது. மணப்பருவம் அடைந்தாள். இவளுக்கு நல்ல இடத்தில் கல்யாணமாகி இந்தச் சொத்துக்கெல்லாம் யோக்கியதையுடைய மாப்பிள்ளையாக ஒருவன் வரவேண்டுமே என்ற கவலையும் நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது கந்தசாமி முதலியாருக்கு.

கடைசியாக அவர் ஒரு முடிவுக்கு வந்து, சுலோசனாவின் கல்யாண விஷயமாகப் பிரஸ்தாபித்த போதுதான், ஆரம்பத்தில் கூறிய சம்பாஷணை நிகழ்ந்தது. ஆம், சுலோசனா கந்தசாமி முதலியார் கூறிய வரனை நிராகரித்து விட்டுத் தான் ஜகந்நாதனைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் கல்யாணம் செய்து கொண்டால் அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்ள முடியும் என்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

தன்னிடம் அன்பும் குழைவுமாகப் பழகிய சுலோசனாவிடம் இவ்வளவு நெஞ்சுறுதி, மனோவலிமை இருக்கும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதனாலேயே அவருக்கு அதிர்ச்சி அதிகமாக இருந்தது. அத்துடன் தம் பால்ய வாழ்க்கையைப் பற்றியெல்லாம், சிறு வயதில் தாம் பட்ட கஷ்ட நஷ்டங்களைப் பற்றி யெல்லாம் இத்தனை நாள் இந்தப் பெண்ணிடம் சொல்லி வந்தது எவ்வளவு தவறாகப் போய் விட்டது என்று நினைத்ததும் அவருடைய ஆற்றாமை இன்னும் அதிகமாயிற்று.

இந்த அதிர்ச்சியில் நாற்காலியில் பின்புறம் சாய்ந்த கந்தசாமி தம் பூர்வகால வாழ்க்கை நினைவில் மூழ்கி யிருந்தார். அதைக் கலைப்பதற்கு வந்தாற்போல் சுலோசனா, "அப்பா" என்று குரல் கொடுத்துக் கொண்டே அங்கே வந்தாள்.

மயக்கம் முழுவதும் தெளியாத கந்தசாமி முதலியார், "என்ன அம்மா!" என்று கேட்கும் பாவனையில் முகத்தை அசைத்தார்.

"மிஸ்டர் கருணாகரன் உங்களைப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறார். வரச் சொல்லவா!" என்று கேட்டாள் சுலோசனா.

கந்தசாமி, ஒரு கணம் யோசித்தார். பிறகு "சரி, வரச்சொல்" என்றார் மிகச் சோர்ந்த குரலில்.

சுலோசனா அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

* * *

கந்தசாமி முதலியார் பங்களாவின் முகப்பில் 'புர்ர்ர்' என்று சத்தமிட்டுக் கொண்டு ஒரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து நாகரிக உடை யணிந்த ஒரு இளைஞன் வந்து இறங்கி 'டக், டக்' என்று பூட்ஸ் சத்தத்துடன் மாடிப்படி ஏறினான்.

சுலோசனா தன் அறையில் ஏதோ காரியமாக இருந்தாள். இந்த இளைஞன் நேரே அவள் அறை வாசலில் நின்று கொண்டு, "மிஸ் சுலோசனா!" என்று அழைத்தான்.

அவன் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பிறகு இலேசாகச் சிரித்துக் கொண்டே, "ஓ, நீங்களா! அப்பா கீழே ஹாலில் இருக்கிறார். போய்ப் பாருங்கள்!" என்றாள்.

"சுலோசனா, நான் அப்பாவைப் பார்க்க வரவில்லை. உன்னைத்தான் பார்க்க வந்தேன். நேற்று என் அப்பா ஒரு நல்ல சமாசாரம் சொன்னார். உன் தகப்பனாரும் என் தகப்பனாரும் பேசிக் கொண்டிருந்தார்களாம்......"

"உங்கள் தகப்பனார் நல்ல சமாசாரம் சொன்னார் என்பதைக் கேள்விப் பட்டுச் சந்தோஷப் படுகிறேன். ஆனால் அந்தச் செய்தியை யாரிடமாகிலும் சொன்னால்தான் மனசு நிம்மதி யடையுமென்றால், கீழே அப்பா இருக்கிறார். அவரிடம் போய்ச் சொல்லுங்கள்...சரி, நீங்கள் போய் வருகிறீர்களா!" என்று சொன்னாள்.

கருணாகரன் மனசு முறிந்து விட்டாற்போலிருந்தது. நேரே கீழே இறங்கி ஹாலுக்கு வந்தான். அங்கே கந்தசாமி முதலியார் உட்கார்ந்திருந்தார். கருணாகரனைப் பார்த்ததும் "வா அப்பா, கருணாகரா!" என்று வரவேற்றார்.

"என்ன மாமா, ஒரு மாதிரி சோர்ந்தாற்போல் உட்கார்ந்திருக்கிறீர்கள்!" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை; லேசாகத் தலையை வலிக்கிறது. அவ்வளவுதான் ...... அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறேன். அதை மறக்காமல் அப்பாவிடம் கொடுத்து விடு!" என்று சொல்லிக் கொண்டே ஒரு கடிதத்தை நீட்டினார்.

அதை வாங்கிக் கொண்ட கருணாகரன், "நான் வருகிறேன், மாமா!" என்று சொல்லிக் கொண்டு, வில்லை விட்டுப் புறப்படும் அம்பைப் போல் நேரே காருக்கு வந்தான். கார் எடுத்த எடுப்பிலேயே நாற்பது மைல் வேகத்தில் பறந்தது. அதிலிருந்தே அவன் எவ்வளவு கோபத்திலிருந்தான் என்பது அறைக்குள் இருந்த சுலோசனாவுக்குப் புரிந்தது. உடனே அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை தவழ்ந்தது.

வேகமாகக் காரில் வந்த கருணாகரன், நேரே கடற்கரைக்கு வந்து ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில்

வண்டியை நிறுத்தினன். கடலிலிருந்து வந்த குளிர் காற்று அவன் கோபத்தைச் சற்று ஆற்றியது. பின்னர் கந்தசாமி முதலியார் தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

அன்பார்ந்த முருகேச முதலியார் அவர்களுக்கு.

நேற்று நாம் இருவரும் சம்பந்தம் செய்து கொள்ளலாம் என்று பேசிக் கொண்டிருந்தோம். கலோசனுவுக்கும் கருணுகரனுக்கும் முடிச்சுப் போட்டு வைத்தால் நம் கவலை தீர்ந்துபோகும் என்று நினைத்தோம். ஆனல் கலோசனு கருணுகரனைக் கணவனுக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. தமையன் தங்கைபோல் பழகி விட்டு, விவாக சம்பந்தம் செய்து கொள்வது அவ்வளவு பிடித்தமாக அவளுக்குத் தோன்றவில்லை. அவளுக்குப் பிடிக்காததோர் விஷயத்தை அவளை வற்புறுத்திச் செய்யச் சொல்ல மாட்டேன் என்பது தங்களுக்குத் தெரிந்ததே!

இப்படிக்கு,

கந்தசாமி முதலியார்.

இதைப் படித்து முடித்ததும், அவனுக்கு இன்னும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கடிதத்தை மடக்கிப் பையில் போட்டுக் கொண்டு 'புர்ர்ர்' என்று காரைப் புறப்படச் செய்து அவ்விடத்தை விட்டுப் போனன்!

* * *

"என்ன மாமா, நீங்கள் வரச் சொன்னீர்களாமே! என்ன விசேஷம்! பௌண்டிரியிலே (தொழிற்சாலையிலே) முக்கியமான வேலையிருந்தது. அதைக் கூட விட்டு விட்டு வந்துவிட்டேன், நீங்கள் கூப்பிட்டீர்களே என்று. வேறு யாராகிலும் கூப்பிட்டிருந்தால், நான் அந்த வேலையை விட்டு விட்டு வந்திருக்க மாட்டேன்" என்று கூறிக்கொண்டே வந்தான் ஜகன்நாதன்.

"அப்பப்பா! எப்பொழுது பார்த்தாலும் பௌண்டிரி ஞாபகமும், வேலை ஞாபகமும்தானு! இப்பொழுது நான் ஒரு முக்கியமான யோசனையொன்று கேட்கக் கூப்பிட்டேன்" என்றுர் கந்தசாமி முதலியார்.

"என்ன மாமா!"

"இப்பொழுது நீ வேலை பார்க்கிருயே, அந்த பௌண்டிரியை விட்டு விட்டு, என் கம்பெனிக்கு வந்துவிடேன். நீ இப்பொழுது வாங்குகிற சம்பளத்தை விட இரண்டு மடங்கு சம்பளம் கூடத் தருகிறேன்."

இதைக் கேட்டதும் ஜகன்நாதன் திகைத்தான். "உங்கள் கம்பெனிக்கு வந்து நான் என்ன செய்வது! அங்கே செய்யக்கூடிய வேலை எனக்கு என்ன தெரியும்!" என்ருன் ஜகன்நாதன்.

"ஒன்றுமே செய்ய வேண்டாம். சும்மா இரு. ஆயிரம் ரூபாய் தருகிறேன்" என்றுர் கந்தசாமி.

"ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்து, உங்கள் பெண்ணைக் கொடுப்பதாய் இருந்தாலும், எனக்கு அந்தச் சும்மா இருக்கிற உத்தியோகம் வேண்டாம், மாமா!" என்ருன் ஜகன்நாதன்.

"ஆ! எந்த விஷயத்தை நான் மனத்தில் நினைத்துக் கொண்டு உன்னைக் கேட்டேனே அதே விஷயத்தை நீயும் சொல்லி விட்டாய்! ஆம், ஜகன்நாதா! உனக்கு என் பெண் கலோசனவைக் கல்யாணம் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறேன். ஆகவே, நீ உன் தற்போதைய வேலையை விட்டுவிட்டு என் கம்பெனிக்கு வந்துவிடு!" என்றுர் கந்தசாமி முதலியார்.

ஜகன்நாதனுக்கு ரொம்ப தர்ம சங்கடமாகப் போய் விட்டது. 'உங்கள் பெண்ணும் வேண்டாம், உங்கள் உத்தியோகமும் வேண்டாம்' என்று அவனல் எப்படிச் சொல்ல முடியும்! அவனல் சொல்லக் கூடிய பதில், 'மாமா உங்கள் உத்தியோகம் வேண்டாம். ஆனல் உங்கள் பெண் மட்டும் வேண்டும்' என்பதுதான். ஆனல் அதை அப்படிப் பட்டவர்த்தனமாகக் கூற முடியுமா! என்ன சொல்வது என்று தெரியாமல் மென்று விழுங்கிக் கொண்டே, "எனக்கு வேலை வேண்டாம், மாமா! எனக்கு வேலையிருக்கிறது. நான் செய்கிற வேலை எனக்குச் சந்தோஷத்தை அளிக்கிறது. நான் கையினல் நான் எல்லாம் உழைத்துப் பெறும் ஊதியத்தில் மன நிறைவு இருக்கிறது. ஏதோ வருகிற வருவாய்க்குள் வாழ முடியும் என்ற தைரியமுமிருக்கிறது. ஆகவே, நான் வருகிறேன் மாமா. மன்னித்து விடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே அவர் மறு பேச்சுப் பேசுமுன் அவ்விடத்தை விட்டுப் பனிச் சென்று அகன்று விட்டான்.

மாடியிலிருந்து இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கலோசனு மனத்தை விட்டுப் பெரும் பாரம் இறங்கியது போன்ற மன நிம்மதியை யடைந்தாள்!


* * *

கந்தசாமி முதலியார் பங்களாவை விட்டு வெளியேறிய ஜகன்நாதன், தான் கடைசியாகச் சொல்லிவிட்டு வந்த பதில் சரியோ தவருே என்று வெகு நாழிகை யோசித்துக் கொண்டே நடந்தான்.

தன்னை நாடிவந்த லக்ஷ்மியை உதறித் தள்ளிவிட்டதாக ஆகுமோ! தான் கூறிய பதிலைக் கேள்விப்படும் சுலோசனா தன்னைப் பற்றித் தவறாக நினைப்பாளோ! அவளுடன் எத்தனை நாட்கள் இன்பக் கனவுகள் கண்டிருக்கிறான்! அவள், எத்தனை நாட்கள் மணந்தால் அவனைத்தான் மணப்பதாகக் கூறி யிருக்கிறாள். ஆனால் அவள் அந்தஸ்துக்கும் அவன் அந்தஸ்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! சுலோசனாவுக்கும் ஜகந்நாதனுக்கும் கல்யாணமா! நடக்கக்கூடிய காரியமா! அதுவும் ஜகந்நாதனின் அலட்சியமான பதிலைக் கேட்ட பிறகு கூடவா, கந்தசாமி முதலியார் ஜகந்நாதனுக்குப் பெண் கொடுக்கச் சம்மதிப்பார்! நடக்கவே நடக்காது! நடக்காவிட்டால் போகட்டும். தன் லட்சியத்தை விட்டு இவர்கள் காரணமாகப் பிறழ முடியுமா! ஆம்; அன்று அவன் டௌன்டிரியில் தண்ணீர் இறைக்கும் யந்திரப் பம்பு ஒன்று செய்து காண்பித்தான். அதைப் பார்வையிட்ட பெரிய பெரிய இன்ஜினியர்கள் அவனை ரொம்பவும் பாராட்டினார்கள். தேசத்துக்கு அவன் மாபெரும் உதவி செய்ததாகப் பாராட்டினார்கள். இன்னும் எத்தனையோ இயந்திரங்கள் செய்ய வேண்டும் என்று அவன் மனம் கற்பனையில் ஆழ்ந்திருக்கிறது. அதையெல்லாம், ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு பெரேடு புரட்டிக் கொண்டிருந்தால் செய்து முடிக்க முடியுமா? நல்லவேளை. அவர் பேராசை காட்டியதற்கு அவன் உடன் படாமலிருந்தானே! இப்படித் தன்னைத் தானே பாராட்டிக்கொண்டான். இதற்குள் அவன் வீடு வந்தது. மனசு நிம்மதியடைந்து வீட்டுக்குள் நுழைந்தான்.

அங்கே கந்தசாமி முதலியார் ஜகந்நாதனுடைய பதிலைக் கேட்டு அப்படியே அயர்ந்து போய் விட்டார். ஜகந்நாதன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்த கந்தசாமி முதலியார், 'இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படிப் பெரியவர்கள் பேச்சை மதிக்காமல், தங்கள் மனசில் ஏதோ ஒரு அபிப்பிராயம் கொண்டால் அதை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு சாதிக்கப் பார்க்கிறார்கள். சே, வர வரக் காலம் கெட்டுப் போச்சு!' என்று முணுமுணுத்தார்.

'இந்தக் காலத்தில் மட்டும்தான் இளைஞர்கள் இப்படி யிருக்கிறார்களா! அந்தக் காலத்தில் அப்படி யிருக்கவில்லையா!' என்று அவர் உள் மனசு அவரை இடித்துக் கூறியது.



"ராமுவைப் பார்த்தாயா? அவன் தகப்பனாரை அப்படியே படம் பிடித்த மாதிரி இருக்கிறான்!"

"ஆமாம். ராமுவின் தங்கையைப் பார்த்தாயா? அவள் தாயாரை அப்படியே டாக்கி எடுத்த மாதிரி இருக்கிறாள்!"

* * *

ஜகந்நாதனுக்கும் சுலோசனாவுக்கும் கல்யாணத் தேதி நிச்சயம் செய்தாகிவிட்டது. கல்யாண நாளும் நெருங்கிக் கொண்டே யிருந்தது. இன்னும் பதினைந்து நாட்கள்தான் இருந்தன.

கந்தசாமி முதலியார் தம் ஒரே மகளுக்குச் செய்கிற கல்யாணமாவது நன்றாகச்செலவழித்துத் தடபுடலாகச் செய்ய வேண்டும் என்று விரும்பினார். ஒரு வாரமாக யோசித்து எப்படி எப்படிச் செலவு செய்து, என்ன என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார். எப்படிப் பணத்தைக் கரைப்பது என்பது தெரியாமல் அவர் இராப்பகல் கண் விழித்துக் கொண்டிருந்தார். ஒரு வாரமாகத் தந்தையின் இந்தப் போக்கைச் சுலோசனா கவனித்து வந்தாள். சுலோசனாவுக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை.

கடைசியில் ஒரு நாள் மனசைத் திடப்படுத்திக் கொண்டு, "அப்பா ஒரு விஷயம்!" என்று அடக்கமான குரலில் கூறினாள் சுலோசனா.

"என்ன அம்மா!"

"பந்தல்காரனுக்கு ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்திருக்கிறீர்களாமே!"

"ஆமாம், அம்மா! பெரிய பந்தல் போட வேண்டாமா!"

"நகைக் கடைக்காரனிடம் பத்தாயிரம் ரூபாய் பெறுமான நகை கொண்டு வரச் சொல்லி யிருக்கிறீர்களாமே!"

"ஆமாம்; உனக்கு மிக நேர்த்தியான செயின்கள் நெக்லெட்டுகள் எல்லாவற்றிற்கும் ஆர்டர் பண்ணி யிருக்கிறேன், அம்மா!

"ஐம்பதினாயிர ரூபாய் பெறுமானமுள்ள வைரங்களுக்கும் நகைகளுக்கும் ஏற்பாடு பண்ணி யிருக்கிறீர்களாமே!"

"ஆமாம், அம்மா! பிரமாதமான வேலைப்பாடுகளுடன் கூடிய நகைகள். கழுத்துக்கு, காதுக்கு, கண்ணுக்கு, மூக்குக்கு, காலுக்கு என்று உன்னை வைரத்தினாலேயே இழைத்து விடப் போகிறேன்" என்று உற்சாகமாகச் சொல்லிக் கொண்டே போனார் கந்தசாமி முதலியார்.

சுலோசனாவினால் தாங்க முடியவில்லை "அப்பா! அப்பா! அப்பா! நான் ஒன்று சொல்லுகிறேன். அதைச் சற்றுக் கேளுங்களேன்......" என்று ஒரே அடியாய்த் தடுத்தாள்.

"என்ன அம்மா!"

"முதலில் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் நிறுத்தி விடுங்கள்."

"என்ன!" என்று விழி பிதுங்கக் கேட்டார்.

"ஆமாம், அப்பா! இந்தக் கலாட்டா வெல்லாவற்றையும் நிறுத்தி விட்டுக் காதும் காதும் வைத்தாற்போல் வெகு சுருக்கமாகத் திருநீர் மலையில் செய்து விடுங்கள், அப்பா!"

"சுலோசனா! இது என்ன!"

"ஒன்றுமில்லை, அப்பா! எதற்காக இந்த அனாவசிய ஆடம்பரங்கள். அவருக்கு இதெல்லாம் பிடிக்காது, அப்பா! அவரை விட எனக்கும் இவையெல்லாம் பிடிக்கவில்லை, அப்பா!"

"கலோசனு!" என்றார். அவ்வளவுதான் அவ ரால் சொல்ல முடிந்தது. ஆனால் அந்தக் குரலில் உள்ளத்தில் உண்டான எல்லாவித உணர்ச்சிகளும் அப்படியே பிரதி பலித்தன.

மகள் விருப்பத்துக்குச் சற்றும் மாறாக நடக் கத்தெரியாத ஸ்ரீமான் கந்தசாமி முதலியார் திருநீர் மலையிலேயே தன் அருமை மகளின் கல்யாணத் தைச் செய்து விட ஏற்பாடு செய்தார்.

*   *   *

கல்யாணத்திற்கு முதல்நாள் கலோசனு தன் மேனியில் ஒரே பொரு தங்கச் சங்கிலி மட்டும் அணிந்து கொண்டிருந்தாள். மற்ற நகைகள் எல்லாவற்றையும் கழற்றி விட்டாள்.

மிக உயர்ந்த விலைமதிப்புள்ள புடவைகள் இருக்க, பத்து ரூபாய் மதிப்புள்ள சாதாரண நூல் புடவையை அணிந்திருந்தாள்.

இந்த எளிய உடையில் கலோசனு பால் நிலவு வீசும் பூரண சந்திரன் போல் பொலிந்தாள். எளிமையில் திகழ்ந்த அழகைக் கண்டு கந்தசாமி முதலியாரின் நெஞ்சம் நெகிழ்ந்தது.

'ஆகா! எத்தனையோ நகைகள் அணிந்து செல் வச் சீமாட்டியாக விளங்க வேண்டிய இவள், சர்வ சாதாரண வெள்ளைக் கலையுடுத்தி கலை மகளாக அல்லவா தோன்றுகிறாள்!' என்று நினைத்தபோது வருத்தமும் சந்தோஷமும் கலந்த உணர்ச்சி அவர் உள்ளம் முழுதும் நிரம்பியது. அவரால் பேச முடியவில்லை. நா தழதழுத்தது.

அந்தச் சமயத்தில் கலோசனு, "அப்பா!" என்று கூப்பிட்டாள்.

"என்ன அம்மா!" என்றார் கந்தசாமிமுதலியார்.

"அப்பா! என் பெயரிலும், அவர் பெயரிலும் ஆளுக்கு தூம்பதினாயிர ரூபாய் பாங்கியில் போட் டிருக்கிறீர்களாமே!" என்று கேட்டாள் கலோசனு.

"ஆமாம் அம்மா! குடித்தனம் ஆரம்பித்த வுடன் செலவுக்கு வேண்டியிருக்கு மல்லவா!"


"அதை நீங்கள் திருப்பி வாங்கிக் கொண்டு விடுங்கள், அப்பா!"

இதைக் கேட்டவுடன் அவரால் தாங்கவில்லை. கலோசனுவை அப்படியே கட்டித் தழுவிக் கொண் டார். அவர் கண்களில் கட கட வென்று கண் ணீர் பெருக்கெடுத்தது.

"பொழுது விடிந்தால் கல்யாணம், இப்பொழுது அழுது என்ன புண்ணியம்! மனசைத் தேற்றிக் கொள், கந்தசாமி. அதனதன் தலைவிதிப்படி நடக்கிறது நடந்துவிட்டுப் போகிறது!" என்றாள் கந்தசாமி முதலியாரின் தங்கை.

"இந்தக் கண்ணீர் வருத்தக் கண்ணீர் அல்ல, தங்கச்சி! இது ஆனந்தக் கண்ணீர். இது வரைக்கும் யாரும் தங்கள் பெண்களுக்குக் கொடுக் காத ஸ்ரீதனத்தை நான் கலோசனுவுக்குக் கொடுத் தேன் என்ற பெருமையில் என் கண்களில் ஆனந் தக் கண்ணீர் பெருகுகிறது. ஆம், என் அருமைக் கண்மணி கலோசனுவுக்கு இத்தனை நாளும், நான் என்னை அறியாமலே, தன் சொந்த முயற்சி யிலேயே, தன் சொந்த உழைப்பிலேயே வாழ வேண்டும் என்கிற உயர்ந்த உணர்ச்சியை ஊட்டி யிருக்கிறேன்! இது ஒன்றே போதாதா — என் மகளுக்குச் சீதனம்! அம்மா, கலோசனு! உன் னைப் பெற்ற நான் பெரிய பாக்கியசாலி. உங்கள் இருவருக்கும் எல்லா மங்களமும் உண்டாகட்டும்" என்று ஆசீர்வதித்தார் கந்தசாமி முதலியார்.

தமிழ்க் களஞ்சியம்



டி.கே.சி

12. பராசக்தியின் சந்நிதி

கன்யாகுமரியில் தெற்கு முனையை ஒட்டியே இருக்கிறது குமரி அம்மன் கோவில். அதாவது மூன்று புறமும் கடல் சூழ்ந்திருக்கிறது. கோவில் என்னவோ, பெரிய கோவில்தான். சமுத்திரத்துக்குள்ளிருந்தே எழுந்து நிற்பதாகத் தோன்றும் பட்டை போட்ட மதில்கள்.

ஆனாலும் கன்யாகுமரி ஊருக்குள் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. ஒரு பக்தரது வீட்டோடு ஒட்டிய கோவில். மதிலெல்லாம் நாலடி மண் சுவர்தான். உள்ளே சுவரை ஒட்டிச் சில மரங்கள். தங்க அரளி நாலு, நந்தியாவட்டை ஐந்து, திருவாத்தி மூன்று. அவ்வளவுதான்.

ஒரு கல்ப் பீடத்தின் மீது ஒரு பிள்ளையாரை எழுந்தருளச் செய்திருக்கிறது. இடத்தை வெகு சுப்புரவாக வைத்திருக்கிறது. காலை ஐந்து மணிக்கே பெருக்கித் தண்ணீர் தெளித்து அழகாக வைத்து விடுவார் பக்தர்.

புஷ்பமாலை ஒன்று அழகாய்க் கட்டி—நந்தியாவட்டை, தங்க அரளி, திருவாத்தி, அறுகம் புல்—எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிச் சுவாமிக்குச் சார்த்தி விடுவார்.

இத்தனை அழகான கைங்கர்யத்தையும் சத்திரத்து மாடி வராந்தாவில் நின்று தினம் தினம் அனுபவிப்பேன்.

காலையோ நண்பகலோ மாலையோ எந்த நேரம் வராந்தாவுக்குப் போக நேர்ந்தாலும் கோவில்ப் பக்கமாகப் போய்விடும் கண். கோவிலினுள்ளே நின்று அனுபவிக்கும்.

பக்தி என்கிற ஆனந்த உணர்ச்சி மிகவும் உயர்ந்த மனப்பாங்கைக் கொண்டது. அந்த பக்தி கன்யாகுமரி அம்மன் கோவில் மண்டபத்துக்குள் அதிகமாக உண்டாகுமா, பிள்ளையார் கோவிலில் உண்டாகுமா என்று கேட்கலாம். பிள்ளையார் கோவிலில்த்தான் அதிகமாக உண்டாகும் என்று சொன்னால் குற்றமில்லை. கம்பர் அபிப்பிராயமும் அப்படித்தான். "வனத்துள் வைகுவான்" என்கிறார் கம்பர். இனி:

ஒரு பழம் பாட்டு, மிகப் பழைய பாட்டு.

வேடர்கள் காட்டுக்குள் பராசக்தியை வழிபடுவதற்காக ஒரு கோவில் அமைத்திருக்கிறார்கள். சிறிய இடத்தை வளைத்ததுதான் கோவில். கோவிலுக்குள் காணும் காட்சிகளை ஆனந்தத்தோடு அனுபவிக்கிறார் பக்தர்.

புன்னை மரம் (நாகை) இருக்கிறது; வாசனையோடு கூடிய நாரத்தை மரம் இருக்கிறது; கருங்காலி மரம், சந்தன மரம் எல்லாம் அழகாய் நிற்கின்றன. கோவிலுக்குள்க் காளைகளும் பசுக்களும் நிறைந்து உலாவி வருகின்றன. பலி பீடத்தைச் சுற்றித்தான் இத்தனையும். பக்தியோடு கூடிய கண்ணுக்கு அழகாய் இருக்கிறது எல்லாம்.

நாகம் நாறும்
  நரந்தை நிரந்தன;
ஆவும் ஆரமும்
  ஓங்கின எங்கணும்;
சேவும் ஆவும்
  செறிந்தன—கண்ணுதல்
பாகம் ஆளுடை
  யாள்பலி முன்றிலே.

[நாகம்: புன்னை; நாறும் நரந்தை நிரந்தன: வாசனையோடு கூடிய நாரத்தை மரங்கள் வரிசையாய் நிற்கின்றன; ஆவும் ஆரமும்: கருங்காலி மரமும் சந்தன மரமும்; ஓங்கின எங்கணும்: காளை பசுக்களும் வளர்ந்து வளமாய் நிற்கின்றன;

டெலிபோனில் பேசுபவர்: ஹலோ! நெருப்பணைக்கும் ஸ்டேஷனா?

ஆபீஸர்: ஆமாம், என்ன சமாசாரம்?

டெலிபோனில் பேசுபவர்: நான் ஒரு புதுத் தோட்டம் போட்டுப் புதுச்செடிகளைச் செழிப்பாய் வளர்த்திருக்கிறேன்...!

ஆபீஸர் (பொறுமை இழந்து): சரிதானய்யா, எங்கே நெருப்புப் பிடித்துக் கொண்டிருக்கிறது?

டெலிபோனில் பேசுபவர்: .... செடிகளில் சில மிக உயர்ந்தவை. மேலும்... !

ஆபீஸர் (கோபத்துடன்): எங்கே நெருப்பு? அதற்குப் பதில் சொல்லாமல் அளக்கிறீரே!

டெலிபோனில் பேசுபவர்: என் பக்கத்து வீட்டில் தீவிபத்து ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் அங்கே வந்தால் என் புதுத் தோட்டத்தை மிதிக்கக் கூடாது என்றுதான் சொல்ல வந்தேன்!

சேவும் ஆவும் செறிந்தன: கலைகளும் பசுக்களும் ஊடாடி மேய்கின்றன; கண்ணுதல் பாகம் ஆளுடையாள் பதி முன்றிலே: நெற்றிக் கண்ணோடு கூடிய சிவபெருமானது வலது பாகத்தைத் தனக்காகக் கொண்ட பராசக்தி தேவியது கோவிலின் முற்ற மெங்கும்.]

அழகாக அமைந்த பாடல். பக்தியில் இருந்து எழுந்தது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

எந்தை குன்றம்

முருகன் எழுந்தருளியுள்ளது அனேகமாய்க் குன்றுகளில்த்தான். சமுத்திரக் கரை ஓரத்திலும் நன்செய் நிலத்துக்கு ஊடேயும் இருக்க மாட்டார் என்று சொல்லவில்லை. ஆனாலும் முருகனுக்கு உகந்த இடம் மலைப்பக்கம்தான்.

முருகன் எழுந்தருளியிருக்கிற காரணத்தினாலேயே மலைக்குரிய விஷயங்கள் மனசை ரொம்பவும் கவர்கின்றன. அந்த விஷயங்களிலேயே திளைத்து நிற்கிறது மனசு.

* * *

மலைப் பிரதேசத்தில், குற்றாலம் போன்ற பிரதேசத்தில் பங்குனி சித்திரை மாசங்களில் எங்கே போனாலும் ஒரு சுகமான வாசனை. காட்டுச் செடியான வன மல்லிகை (மௌவல்) எல்லா இடங்களிலும் நெருங்கி உண்டாகி இருக்கும். சாயங்கால நேரம் வந்ததும் மொட்டுகள் விரிந்து வாசனையைக் காடெங்கும் பரப்பி விடும்.

காலையில்த் தடாகங்களைப் பார்த்தோமானால் நீலோற்பல மலர்கள் ஆங்காங்கு விரிந்து நிற்கும்.

இன்னொரு காட்சி · மேலே ஒரு மேகப் படலம் அசைவற்று நிற்கிறது. அந்த மேல்ப் பரப்பில்க் காற்று அடைப்பு. அதனால்க் காற்று இல்லை. ஆனால்க் கீழ்ச் சரிவில்க் காற்று அடித்துக் கொண்டு இருக்கிறது. உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கும் மூங்கில் ஒன்றை முன்னும் பின்னுமாக அசைத்துக் கொண்டிருக்கிறது காற்று. அப்படி அசையும் மூங்கில் என்ன வேலை செய்கிறது:

கொஞ்சம் தள்ளி அசைவற்றும் வேறு ஒரு மூங்கில் வான முகட்டை அளாவி நிற்கிறது.

மேலே குறிப்பிட்ட வன மல்லிகை (மௌவல்) நீலோற்பலம் (குவளை) மேகப் படலம் (அந்தண் புயல்) எல்லாவற்றையும் மனசில் வைத்துக் கொண்டு பாடலைப் பார்க்கலாம்:

மாலை மணம்கம ழ
மௌவல் முகைவிரி யும்
எந் தைகுன் றம்;

காலை மணிக்குவ ளை
காதலர் போல்விழிக் கும்
எந் தைகுன் றம்;

ஆடு கழைகிழிக் கும்
அந்தண் புயலிற் றே
எந் தைகுன் றம்;

நீடு கழை மேல்
நிலாமதி யம்நிற்கு மே
எந் தைகுன் றம்.

நிலா மதியத்தை எவ்வளவு அழகாய்த் தூக்கி வைத்துக் காட்டுகிறது பாருங்கள்.

அழகான காட்சிகளை பக்தியோடு பார்த்துப் பாடியிருக்கிறது. வியப்பு, பக்தி, எக்களிப்பு ஆகிய ரஸங்கள் தெளிவாய்த் துலங்குகின்றன கவியில்.

பழமையான இசைக்காக அமைந்த ஒரு அருமையான பாடல்.

எல்லா வீட்டிற்கும் உகந்த

ஊறுகாய்



டி.எஸ்.ஆர்

ஊறுகாய்

கைதேர்ந்தவர்களால் சிறந்த முறையில் கைபடாமல் தயாரிக்கப்பட்டு அழகிய ஸீல் வைத்த பாட்டில்களில் விற்கப்படுகிறது





ஒவ்வொருவர் ருசிக்கும் தகுந்த பல விதங்கள் :

பலகாய்கறி ஊறுகாய்
எலுமிச்சை ஊறுகாய்
மாங்காய் ஊறுகாய்

முதலியவை

இந்த மார்க்கைப் பார்த்து வாங்கவும்

டி.எஸ்.ஆர் & கோ., கும்பகோணம்

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

சுராஜ் ஏஜென்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு,
திருவல்லிக்கேணி, மதராஸ்

கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜண்டு :

B. பாலபட்டாபி (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது)
கோயமுத்தூர்



5 புதிய வழி

"நீ கவலைப்படாதே! நான் பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன், கவலைப்படாதே!" என்று ஹாஸன் தன் மனைவியிடம் கூறினான் அல்லவா? அதைக் கேட்டதிலிருந்து அவளுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

"பணம் சம்பாதிப்பதற்கு என்ன தந்திரம் செய்யப்போகிறாய்?" என்று கௌஷால் கேட்டாள். அதற்கு ஹாஸன் கூறினான்:

"நாம் இருவரும் இறந்துவிட்டதாகப் பாசாங்கு செய்வோம். அதன் மூலம் நமக்குப் பணம் கிடைக்கும். நான் முதலில் இறந்துவிட்டவன் போல் படுத்துக் கொள்கிறேன். என்னைப் புதைப்பதற்குத் தயாராக மூடிவைத்துவிட்டு நீ அழுதுகொண்டே ராணியிடம் ஓடு. உன் வருத்தத்திற்குக் காரணம் என்ன என்று ராணி கேட்பாள். நான் இறந்துவிட்டது பற்றிச் சொல். உன் மேல் பரிதாபப்பட்டு சடங்குச் செலவுக்குப் பணம் கொடுப்பாள். என்மேல் போர்த்துவதற்கு விலை உயர்ந்த துணி கொடுப்பாள். நீ வந்தவுடன் நீ இறந்துவிட்டது போல் படுத்துக் கொள். உன்னைச் சவ அலங்காரம் செய்து விட்டு நான் கலிபாவிடம் ஓடுகிறேன். அவரும் அனுதாபப்பட்டு உன் சவ அடக்கச் செலவுக்குப் பணமும் உன்னை மூடுவதற்கு உடையும் தருவார். அப்புறம் நமக்கு என்ன குறைவு? எப்படி என் யோசனை?"

இந்த யோசனையைக் கேட்ட கௌஷால் தன் கணவனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டினாள். உடனே அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்றும் கூறினாள்.

அபூ ஹாஸன் தரையிலே விரிக்கப்பட்டிருந்த பாயின்மீது படுத்தான். உடனே கௌஷால் ஒரு மஸ்லின் துணியால் அவனை மூடிவிட்டுத் தலைவிரி கோலமாய் ராணியிடம் ஓடினாள். தன் அருமைத் தோழி இவ்வளவு துக்கத்துடனிருப்பதைப் பார்த்த ராணி என்ன விஷயம் என்று கேட்டாள். கௌஷால் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, "ஐயோ! என் அருமைக் கணவர் அபூஹாஸன் இறந்து விட்டாரே!" என்று கண்ணீர் விட்டுக் குய்யோமுறையோ என்று கதறினாள்.

கௌஷால் நடிப்பு முதல் தரமாயிருந்ததால் அவள் கூறுவது பொய் என்று ராணிக்குத் தோன்றவில்லை. அரண்மனையிலுள்ளோரை யெல்லாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த ஹாஸன் இறந்து விட்டதைக் குறித்து அவள் மிகவும் வருந்தினாள். மரணச் செலவுக்கு நூறு பவுனும், அவன் மேல் போர்த்துவதற்கு விலையுயர்ந்த பட்டும் கொடுத்துவிட்டு, "கௌஷால்! நீ கவலைப்படாதே சடங்கு முடிந்ததும் நீ மறுபடி என்னிடம் வந்துவிடு. உன்னை எப்பொழுதும் போல் காப்பாற்றுகிறேன்" என்று கூறினாள்.

பணத்தையும் பட்டையும் எடுத்துக் கொண்டு தன் அறைக்கு கௌஷால் வந்ததைப் பார்த்ததும் ஹாஸனுக்குத் தன் திட்டம் வெற்றி பெற்றதைப் பற்றி மட்டில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே கௌஷாலைப் படுக்க வைத்து அவளை மஸ்லின் துணியால் மூடிவிட்டு ஹாஸன் கலிபாவிடம் ஓடினான். எப்பொழுதும் சிரிப்பும் விளையாட்டுமாயிருக்கும் ஹாஸன் கண்ணைக் கசக்கிக் கொண்டும் கையைப் பிசைந்து கொண்டும் வருவதைக் கண்டு கலிபா கலங்கிப் போனான். "ஹாஸன், ஏன் இப்படி அழுகிறாய், சொல்? நான் உன் கவலையைத் தீர்க்கிறேன்" என்று கலிபா கூற, ஹாஸன் "ஐயோ என் அருமை மனைவி இறந்து விட்டாளே? என்ன செய்வேன்?" என்று விம்மி விம்மி அழுதான். உடனே செலவுக்கு நூறு பவுனும், அவளைப் போர்த்த அழகிய பட்டுப் புடவையும் கொடுத்தான். இதைப் பெற்றுக் கொண்டு ஹாஸன் கலிபாவின் காலில் விழுந்து நன்றி கூறிவிட்டு, தன் அறைக்குத் திரும்பினான்.

தன் கணவனும் வெற்றியுடன் திரும்பியதைப் பார்த்த கௌஷால் படுக்கையை விட்டுத் துள்ளிக் குதித்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். தங்கள் திட்டம் இப்படி வெற்றி பெற்றதைக் குறித்துச் சிறிது நேரம் இருவரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஆரம்ப உற்சாகம் சற்றுத் தணிந்தவுடன் தங்கள் திட்டத்தின் உண்மை அரண்மனைக்குத் தெரிந்து விட்டால் என்ன செய்வது என்று கவலைப் பட்டு, இன்னும் சிலகாலம் ஜாக்கிரதையாயிருப்பதென்று தீர்மானித்தனர்.

இதற்கிடையில் கௌஷாலின் மரணத்தைப் பற்றித் தன் மனைவியிடம் சொல்வதற்காகக் கலிபா செல்லுகையில் அவள் கண்ணும் கண்ணீருமாயிருப்பதைக் கண்டான். அவள் துக்கத்திற்குக் காரணம் என்ன என்று கேட்டதும், "ஐயோ! நமது அபூ

ஹாஸன் இறந்து விட்டானே? தெரியாதா உங்களுக்கு" என்று கேட்டாள். இதைக் கேட்டு கலிபா ஆச்சரியமடைந்து, "என்ன? ஹாஸனா? இறந்து விட்டானா? இப்போதுதானே அவன் என்னிடம் வந்து தன் மனைவி நெளஷாவின் மரணத்தைப் பற்றிச் சொன்னான். நானும் சடங்குச் செலவுக்குப் பணமும் அவள் சவத்தை மூடத் துணியும் அளித்து விட்டு இந்த துக்கச் செய்தியை உன்னிடம் சொல்ல வந்தேன்" என்று கூறினான்.



இந்தச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்ட ராணி, "விளையாடுகிறீர்களா என்ன? நெளஷால் சில நிமிஷங்களுக்கு முன் என்னிடம் வந்து அபூஹாஸனின் மரணச் செய்தியைச் சொல்லிக் கதறிக் கதறி அழுதாள். அவன் சடங்குக்குப் பணமும் மூடத் துணியும் அளித்துவிட்டு அழுது கொண்டிருக்கையில் நீங்கள் வந்தீர்கள்" என பதில் கூறினாள்.

இதன் பயனாக இருவருக்குள் பலத்த வாக்குவாதம் நடந்தது; ஒவ்வொருவரும் தாங்கள் கூறியதே சத்தியம் எனச் சாதித்தனர். கடைசியாக இருவரும் தத்தம், வேலையாட்களை ஹாஸன் வீட்டிற்கு அனுப்பி உண்மையை அறிந்துவர ஏற்பாடு செய்தனர். ஒவ்வொருவரும் தத்தம் யஜமானர் கூறிய வற்றையே ஆதரித்துச் செய்தி கொண்டு வந்ததால் தகராறு தீரவில்லை. கடைசியில் இருவரும் நேரில் ஹாஸனின் இருப்பிடம் சென்று உண்மையை பரீக்ஷித்து வருவதாகத் தீர்மானித்தனர். புறப்படுமுன் இருவரும் ஒரு விசித்திரமான பந்தயம் வைத்தனர். ராணி ஜெயித்தால் கலிபா அவளுக்கு ஒரு அழகிய நந்தவனத்தைப் பரிசாக அளிப்பதென்றும், கலிபா ஜெயித்தால் அவனுக்கு ராணி சித்திரங்கள் நிறைந்த அரண்மனை ஒன்றைப் பரிசாக அளிப்பதாகவும் சபதஞ் செய்து கொண்டனர். இந்த ஏற்பாட்டுடன் இருவரும் தத்தம் பரிவாரங்களுடன் அபூஹாஸன் வசிக்குமிடத்துக்குச் சென்றனர்.

கலிபாவும் ராணியும் வருவதை அறிந்த நெளஷால் நடுங்க ஆரம்பித்து விட்டாள். வேலைக்காரர்களை எப்படியோ ஏமாற்றி அனுப்பி விட்டனர். ஆனால் யஜமானர்கள் வந்தால் என்ன செய்வது என்று அவர்கள் சிந்திக்கவே இல்லை. ஆனால் ஹாஸன் மட்டும் கலங்கவில்லை. அவன் சொன்னான்: "நாம் இருவருமே இறந்து விட்ட மாதிரி படுத்திருக்கலாம். அப்புறம் எல்லாம் சரியாகப் போய் விடும்." இப்படி ஹாஸன் சொன்னதும் உடனே இருவரும் படுத்துக் கொண்டனர். தங்கள் சவ அடக்கத்திற்கு அளிக்கப்பட்ட துணிகளைப் போர்த்திக் கொண்டே கண்ணை மூடி விட்டனர்.

இந்தச் சமயத்தில் கலிபாவும் ராணியும் தத் தம் பரிவாரங்களுடன் உள்ளே நுழைந்தனர். அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிட வைத்து விட்டது. கடைசியில் ராணி சொன்னாள்: "பாவம்! இருவரும் இறந்து விட்டனர். கணவனுடைய மரணச் செய்தி தாங்காமல் நெளஷால் இறந்து விட்டாள்."

உடனே கலிபா அதை மறுத்துச் சொன்னான்: "அப்படி இல்லவே இல்லை. நெளஷால் தான் முதலில் இறந்தாள். அவளை இழந்த துக்கத்தால் ஹாஸன் இறந்தான். ஆகையால் நீ வாக்களித்தபடி சித்திரங்கள் நிறைந்த அரண்மனையைக் கொடு!"

ராணி: "அப்படியில்லை. ஹாஸன்தான் முதலில் இறந்தான். நீங்கள் வாக்களித்த நந்தவனத்தைக் கொடுங்கள்!"

இவ்வாறு வாய்ப்பேச்சு முற்றியது. கடைசியில் கலிபா சொன்னான்: "இவ்விருவரில் யார் முதலில் இறந்தது என்று சொல்லுகிறவர்களுக்கு ஆயிரம் பவுன் இனாம்."

'ஆயிரம் பவுன் இனாம்' என்ற சொற்களைக் கேட்டவுடன் ஹாஸன் போர்வையை அகற்றிவிட்டு "ஆஸ்திகர்களின் ரக்ஷகரே! நான்தான் முதலில் இறந்தேன். அந்த ஆயிரம் பொன்னை எனக்குக் கொடுங்கள்" என்று கலிபா முன் வந்து நின்றான். நெளஷாலும் எழுந்து தன் கணவனருகில் நின்றாள்.

செத்தவர்கள் பிழைத்ததைக் கண்டதும் ராணி ஆச்சரியத்தால் அலறி விட்டாள். ஆனால் கலிபா ஹாஸனின் ஹாஸ்ய வெடிகளில் இதுவும் ஒன்று என்று அறிந்து கொண்டு, "என்ன ஹாஸன்! என்ன மறுபடியும் சிரிப்பினால் சாகடிக்கப் பார்க்கிறாயா?" என்று கேட்டு விட்டு, அவர்களுக்கு வேண்டிய பொன்னும்மிதியும் கொடுத்தார்.

(முடிந்தது)

கனிந்த உள்ளம்

எஸ். டி. ஸ்ரீநிவாஸன்

'பூம், பூம்'—தெருவில் மோட்டாரின் ஹாரன் சப்தம் கேட்டது.

நிலைக் கண்ணாடியின் முன் நின்று நெற்றிக்குக் குங்குமம் இட்டுக் கொண்டிருந்த சியாமளா வாசலுக்குச் சென்றாள். அங்கு அவள் கண்ட காட்சியை அவளாலேயே நம்ப முடியவில்லை.

வாசற்படியண்டை ஒரு நீல நிறப் புது மோட்டார்; அதனுள் பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்தான் சிவராமன்—அவள் கணவன். மோட்டாரின் கண்ணாடியில் சந்தனமும், குங்குமப் பொட்டுகளும் காணப்பட்டன. பெரிய ரோஜா மாலை அதை அலங்கரித்தது.

"சியாமளா! என்ன அப்படியே பிரமை பிடித்தவள் மாதிரி நின்று விட்டாய்? வேலைக்காரியினிடம் வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வந்து வண்டியிலே ஏறிக் கொள். கபாலி கோயிலுக்குப் போகணும்..." என்றான் சிவராமன்.

காலையில், நடந்து ஆபீஸுக்குச் சென்ற அவள் கணவன், மாலையில் ஒரு புதுக்காரில் வந்திருப்பதைக் காணச் சியாமளாவுக்கு அதிசயம் தாங்கவில்லை.

அவள் குழந்தையைப் போல் உள்ளே ஓடினாள். முற்றத்தில் காப்பி பாத்திரங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்த வேலைக்காரியிடம், "அடி வள்ளி! நானும் அவரும் கோவிலுக்குப் போகிறோம். வீட்டைப் பார்த்துக்கொள்..." என்று சொல்லிவிட்டு, பீரோவைத் திறந்து ஒரு நல்ல புடவையும், ஜாக்கெட்டும் எடுத்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டு வாசலுக்குச் சென்றாள்.

சிவராமன் மோட்டாரின் பின் பக்கக் கதவைத் திறந்தான். சியாமளா சிவராமன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். மோட்டார் நகர்ந்தது.

"நான் கார் வாங்கினது உனக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கிறதோ?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் சிவராமன்.

"சாதாரண ஆச்சரியமா?...பெரிய ஆச்சரியம். காலையில் நீங்கள் ஆபீஸுக்குப் போகும் போதுகூட இதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லையே! திடீரென்று சற்று முன்பு காரிலே வந்து நீங்கள் இறங்கவே, நான் பார்க்கிறது கனவோ என்றுகூட நினைக்க வேண்டியதாகப் போய்விட்டது!"

"எனக்குக் கார் வாங்க வேண்டும் என்று ரொம்ப நாளாக எண்ணம். ஆனால் திடீரென்று ஒரு புதிய காரைக் கொண்டு வந்து நிறுத்தி உன்னை ஆச்சரியத்திலே ஆழ்த்த வேண்டும் என்பதற்காகத் தான் இத்தனை நாளாக இதைப் பற்றி ஒரு வார்த்தை கூட நான் உன்னிடம் சொல்லவில்லை. இதன் விலை பன்னிரண்டாயிரம் ரூபாய். கம்பெனியிலே பாதிப் பணம் கொடுத்தார்கள். நான் மீதிப் பாதியைப் போட்டேன். இன்னும் இரண்டு மாசத்திலே, எங்கள் பாக்டரிக்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய பங்களா கட்டி, குடிக்கூலி இல்லாமல், நாம் இருக்கிறதற்குக் கொடுக்கப் போகிறார்கள். பத்து வருஷத்துக்கு முன்பு நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட போது இப்படியெல்லாம் நாம் இருப்போம் என்று நீ துளிக்கூட நினைக்கவில்லையே?" என்று குறும்பாகக் கேட்டுவிட்டு, அவளைப் பார்த்தான் அவன்.

"அதையெல்லாம் பற்றி இப்போது என்னத்துக்காக நினைக்க வேண்டும்? இப்போது என்னைப்போல அதிர்ஷ்டசாலி யாரும் இருக்க முடியாது!" என்று கூறி அவள் அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள்.

எதையோ நினைத்துக் கொண்டவன்போல் அவன், "ஆமாம், சியாமளா! நம் சேகர் எங்கே? அவனையும் அழைத்துக் கொண்டு வரக்கூடாதா?" என்று கேட்டான்.

"சேகர் விளையாடப் போயிருக்கிறான். ஏழு மணிக்குத்தான் வருவேன் என்று சொல்லி விட்டுப் போனான். அவன் வந்ததும், மோட்டாரைப் பார்த்து விட்டானானால் ஒரே குதியாய்க் குதிப்பான்......இனிமேல் தினம் அவனையும் அழைத்துக்கொண்டு, சாயங்காலத்தில் காரிலே பீச்சுக்குப் போக வேண்டும்!"

கார் கபாலி கோயிலின் கிழக்கு கோபுர வாசலில் வந்து நின்றது.

சிவராமனும் சியாமளாவும் கீழே இறங்கினர். அர்ச்சனைக்கு வேண்டிய பூ, பழம் எல்லாம் வாங்கிக் கொண்டு கோயிலுக்குள் சென்றனர். ஈசுவரனுக்கும் அம்பாளுக்கும் அர்ச்சனை செய்து விட்டு அவர்கள் வீடு திரும்பும்போது மணி ஏழடித்துவிட்டது. இதற்குள் வீட்டிற்கு வந்திருந்த சேகர், புது மோட்டாரைக் கண்டு குதியாய்க் குதித்தான்.

எட்டு மணிக்குள் எல்லோரும் சாப்பிட்டனர். சேகர் படுத்துத் தூங்கிவிட்டான். சியாமளா சிவராமனுக்குப் பாலும், வெற்றிலை பாக்கும் கொண்டு கொடுத்து விட்டுக் கூடத்துக்குச் சென்றாள். சிவராமன் ஏதோ ஆபீஸ் 'பைல்'களைப் புரட்டிக் கொண்டிருக்கவே, சியாமளா ஹாலில் இருந்த ரேடியோவை மெதுவாகத் திருப்பி விட்டு அதன் முன் உட்கார்ந்தாள்.

ரேடியோவில் யாரோ தோடி ராகத்தை வெகு அழகாக ஆலாபனை செய்து கொண்டிருந்தனர். ஆனால் சியாமளாவின் கவனம் பாட்டின் மேல் செல்லவில்லை. காரில் போகும் போது சிவராமன் சொன்ன வார்த்தைகளில் லயித்திருந்தது அவள் மனம்.

'பத்து வருஷங்களுக்கு முன், நீ என்னை மணந்த போது இப்படியெல்லாம் நாம் இருப்போம் என்று நீ துளிக்கூட நினைக்க வில்லையே' என்று அவன் சொல்லியது ஆயிரத்தில் ஒரு வார்த்தை. அவன் சொன்னது வாஸ்தவம்தான். அப்போது அவன் அப்படியெல்லாம் நினைக்கத்தான் இல்லை.

இந்த வார்த்தைகள், அவள் மனத்தினுள்ளேயே அநேக வருஷங்களாக மங்கி மறைந்திருந்த, ஒரு சோக சம்பவத்தை அவளுக்கு நினைப்பூட்டியது. அவள் தேகம் ஒரு முறை சிலிர்த்தது. அவள் இதயத்தின் ஆழத்திலிருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது.

ஏழைப் பெற்றோருக்குப் பிறந்த குற்றத்தினால் நான்காவது பாரத்துடன் நிறுத்தப்பட்டு விட்டது சியாமளாவின் படிப்பு. ஆனால் அதற்குள்ளேயே அவள் சங்கீதத்தில் அபார ஞானத்தைப் பெற்று விட்டாள். படிப்பு, பாட்டு, நாட்டியம் எல்லாவற்றிலும் அவள் தான் முதல். அவைகளில் அவள் வாங்கி யிருந்த பரிசுகளுக்குக் கணக்கேயில்லை.

படிப்பை நிறுத்திய இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவளுக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்தார் அவள் தந்தை. சென்னையில் ஒரு வரன் ஏற்பாடாகியது. பிள்ளையும் பிள்ளை வீட்டாரும், பெண்ணைப் பார்க்க வேண்டுமல்லவா? அதை உத்தேசித்து, சியாமளாவின் தந்தை—ஆத்மநாதன்—சியாமளாவைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்தார். சியாமளாவின் ஒன்றுவிட்ட மாமா ஒருவர் சென்னையில் இருந்தார். அவருடைய வீட்டில்தான் பிள்ளை வீட்டார் பெண்ணை வந்து பார்க்க ஏற்பாடாகி இருந்தது.

அன்று வெள்ளிக் கிழமை. சாயந்திரம் நாலு மணிக்குப் பிள்ளை வீட்டார் வருவதாக இருந்தது. சியாமளாவுக்கு நன்றாக அலங்காரம் செய்தார்கள். பிள்ளையும் அவனுடைய பெற்றோரும் வந்தனர். பிள்ளை—ராகவன்—பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டு, மத்திய அரசாங்கத்தில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகத்தில் இருந்தான்.

சியாமளா வந்து எல்லோரையும் நமஸ்கரித்தாள். பிறகு வீணையை வைத்துக் கொண்டு வாசித்தாள். பெண்ணைப் பிள்ளைக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. பிள்ளையின் தாய் தந்தையருக்கும் ரொம்ப திருப்தி ஏற்பட்டது. ராஜா மாதிரி இருந்த ராகவனின் உருவமும் சியாமளாவின் மனத்தில் போட்டோ படம் போல் விழுந்து விட்டது. ஆனால் இருவருக்கும் இடையே விதி குறுக்கிட்டு விட்டது.

சீர் வரிசைகளைப் பற்றிப் பேசும்போது, அபிப்பிராய பேதம் ஏற்பட்டு விட்டது. கையில் வரதக்ஷிணையாக ஆத்மநாதன் ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னார். பிள்ளை வீட்டார் இரண்டாயிரம் கேட்டார்கள். தங்கள் ஏழ்மை நிலையை உத்தேசித்துத் திரும்பப் புனராலோசனை செய்யும்படி ஆத்மநாதன், பிள்ளையின் தந்தையிடம் சொன்னார். தானும் ஊருக்குச் சென்று இன்னும் ஒரு ஐந்நூறு ரூபாயாவது கொடுக்க முடியுமா என்று பார்ப்பதாகவும் கூறினார். அநேகமாக இரு தரத்தாரும் சற்று விட்டுக் கொடுத்து, இந்தக் கல்யாணம் நடந்துவிடும் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால் ஆத்மநாதன் ஊருக்கு வந்த சில தினங்களுக்குள்ளேயே அவருக்கு ஒரு முகூர்த்தப் பத்திரிகை வந்தது. அதில் சியாமளாவின் ஒன்று விட்ட மாமா பெண் சாருமதிக்கும் ராகவனுக்கும் கல்யாணம் என்று கண்டிருந்தது. எல்லோரும் ஒரே யடியாகத் திகைப்படைந்தனர்.

அந்தக் கல்யாணத்திற்குப் போனபோது தான் ஆத்மநாதனுக்கு விஷயம் தெரிந்தது. ராகவன் வீட்டார் சியாமளாவைத் தான் முடிப்பதாக இருந்தனர். ஆனால் சாருமதி, எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தவள்—தன்னைக் காட்டிலும் குறைந்த படிப்புள்ள—ஏழையான—சியாமளாவுக்கு அப்படிப்பட்ட ஒரு நல்ல வரன் வருவதைக் கண்டு மனம் பொறாமல் அழுது அமர்க்களம் செய்து, தன் பெற்றோர் மூலம் மூவாயிரம் ரூபாய் வர தக்ஷிணை கொடுத்து அந்த வரனை முடித்துக் கொண்டாள். இதை அறிந்த சியா



ளாவின் மனம் பெரும் ஏமாற்றமும், சாரு மதியின் மேல் கோபமும் அடைந்தது.

அதன்பின் இரண்டு வருஷம்வரையில் சியாமளாவுக்கு எந்த வரனும் நிச்சயமாகவில்லை. இதற்குள் ஆத்மநாதனுக்கும் கைசோர்ந்து விட்டது. சியாமளாவின் தாயும் படுக்கையாகப் படுத்து விட்டாள். எப்படியாவது சியாமளாவின் கல்யாணம் ஆனால் போது மென்ற நிராசைத்துடன் ஆத்மநாதன் தமக்கேற்ற மாதிரியில் ஒரு வரன் பார்த்தார்.

சிவராமன் அப்போது திருச்சியில் ஒரு சைக்கிள் கம்பெனியில் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் வேலையில் இருந்தான். எஸ். எஸ். எல். ஸி. வரையில்தான் படித்திருந்தான். மாநிறம். கல்யாணத்தன்று இரவு சியாமளா தனக்கு இப்படிப்பட்ட ஒரு இடம் கிடைத்ததைக் குறித்து — குலுங்கிக் குலுங்கி அழுதது அந்த அறையில் மாட்டியிருந்த அம்பாள் படத்திற்குத்தான் தெரியும்.

அவளுடைய தாம்பத்ய வாழ்க்கை ஆரம்பமாகியது. கஷ்ட ஜீவனம். சாப்பாட்டுக்கே சிவராமனின் வருவாய் போதவில்லை.



அடிக்கடி சியாமளா ராகவனையும், சிவராமனையும் ஒத்திட்டுப் பார்ப்பாள். ராகவன் உருவத்திலும் ராஜா, படிப்பிலும் ஹானர்ஸ். உத்தியோகத்திலும் சிறந்த, நல்ல சம்பளத்தோடு கூடிய அரசாங்க உத்தியோகம். சிவராமன் மாநிறம்தான். அழகு என்று சொல்ல முடியா விட்டாலும் குரூபியல்ல. குறைந்த படிப்பு, ஐம்பது ரூபாய் சம்பளம் உள்ள நித்தியகண்டமான கம்பெனி உத்தியோகம்.

கல்யாணமான உடனே ராகவனுக்குப் பம்பாய்க்கு மாற்றலாகி விட்டதென்றும் அவன் சாருமதியையும் தன் கூட அழைத்துச் சென்றுவிட்டான் என்றும் அங்கு அந்தத் தம்பதிகள் ஆனந்தமாக இருக்கிறார்கள் என்றும் சியாமளா கேள்விப்பட்டாள். இங்கு தானே, அரை வயிறு சாப்பாட்டுக்குக் கூடக் கதியில்லாமல் திண்டாடுகிறாள். இவ்வளவும்—தனக்கு ஏற்பட்ட இந்தக் கதி — சாருமதியால்தான். தனக்கு வரவிருந்த அதிர்ஷ்டத்தை அவள் தட்டிப் பறித்துக் கொண்டு போய்விட்டாள் என்றெல்லாம் நினைத்துப் பெரிதும் வருந்தினாள்.

இந்தப் பத்து வருஷங்களுக்குள் பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. சாருமதியின் தந்தை ஓய்வெடுத்துக் கொண்டு தன் மனைவியுடன் கிராமத்திற்குச் சென்றுவிட்டனர். சியாமளாவின் பெற்றோர் ஒருவர்பின் ஒருவராக மறைந்து விட்டனர்.

சிவராமன் ஒருவாறு பூடகமாகச் சியாமளாவின் அதிருப்தியை அறிந்திருந்தான். நல்ல சங்கீத ஞானம், சிறந்த அழகு, படிப்பு எல்லாவற்றிலும் மேலாயிருந்தும் ஏழ்மையின் காரணத்தால் அவள் தன்னை மணந்து கொண்டிருக்கிறாள் என்றும் விஷயம் சிவராமனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. ஆகவே அவன் தன்னாலான வரையில் அவளை எல்லா வகையிலும் திருப்தி செய்ய முயன்றான்.

காலதேவனின் அடிச்சுவட்டிலே வருஷங்கள் என்னும் புழுதிப்படலங்கள் எழுந்து மறைந்தன. கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வாழ்க்கையில் தான் அடைந்த ஏமாற்றத்தைச் சியாமளா மறந்து வந்தாள். இதற்குள் அவளுக்குக் குழந்தை சேகரன் பிறந்தான்.

சிவராமன் நல்ல உழைப்பாளி. தன் திறமையினாலும் உண்மை உழைப்பினாலும் முதலாளிகளின் நம்பிக்கைக்கு அவன் வெகு சீக்கிரம் பாத்திரமானான். அவன் சம்பளமும் உயர்ந்து கொண்டே போயிற்று. கடைசியில் அந்தக் கம்பெனியின் கிளைக் காரியாலயத்துக்கு அவன் மானேஜராக நியமிக்கப் பட்டான்.

இப்போது சியாமளா செல்வத்தில் புரண்டாள். அவளைப் பிடிக்க ஒருவருமே இல்லை.

அவளுடைய கனவுகள் ஒவ்வொன்ருக நனவா கிக் கொண்டே வந்தன. சொந்தத்தில் கார் வாங்கியாகி விட்டது. கூடிய சீக்கிரத்தில் கம்பெனி முதலாளிகளே அவர்களுக்குப் பங்களாவும் கொடுத்துவிடப் போகிருர்கள். அவள் மனம் சந்தோஷத்தால் துள்ளியது.

ஆயினும் எப்பொழுதாவது ஒரு சமயம் சாருமதியையோ, ராகவனையோ பற்றி நினைத்துக் கொண்டால், பழைய சம்பவங்கள் எல்லாம் அவள் மனத்தில் விரியும்.

மணி பத்தரை. ரேடியோ நின்றுவிட்டது. சுய உணர்வு பெற்ற அவள் ஸ்விட்சை நிறுத்தி விட்டு, தன் கணவன் அறைக்கு வந்தாள். அவன் ஒரு காகிதத்தில் என்னவோ 'டைப்' அடித்துக் கொண்டிருந்தான். மெது வாகச் சியாமளா பக்கத்தில் வந்து நின்ருள்.

"வீட்டிலே கூடவா ஆபீஸ் வேலை? ஏதேது, உங்களுக்கு வேலை உயர உயர வீட்டையே ஆபீஸாக மாற்றிவிடுவீர்கள் போல் இருக்கிறதே!" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அவள்.

அவன் அவளைப் பார்த்தான்.

"இன்றைக்கு ஆபீஸிலே எனக்கு ஒரு தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இரண்டு நாளைக்கு முந்தி நாங்கள் பேப்பரிலே எங்க பாக்டரிக்கு ஒரு 'லேடி டைப்பிஸ்டும்' ஒரு 'லேடி டெலிபோன் ஆப்பரேட்ட'ரும் வேண்டும் என்று விளம்பரம் பண்ணி இருந்தோம். எத்தனையோ பேர்கள் வந்தார்கள். அவர்களில் இரண்டு பேரைப் பொறுக்கி எடுத்து நேற்றைக்கே அவர்களுக்கு 'ஆர்ட'ரும் கொடுத்தேன். இன்றைக்கு அவர்கள் உத்தியோகத்திலேயும் சேர்ந்தாகிவிட்டது. இன்றைக்கு மத்தியானம் ஒரு பெண் அந்த விளம்பரத்தைப் பார்த்து விட்டு வேலைக்கு வந்தாள். நான், 'இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து விட்டேன்' என்று சொன்னேன். ஆனால் அவள் எழுந்தே போகமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். தான் ரொம்ப கஷ்டப் படுவதாகவும் ஏதாவது ஒரு வேலை தனக்குக் கொடுத்தால்தான் ஆயிற்று என்று பிடிவாதம் பண்ணினுள். அந்தப் பெண்ணின் நிலைமையைப் பார்த்த எனக்கும் மனசு கேட்கவில்லை. ஆகையினாலே, காலி ஏதும் இப்போது இல்லாமல் போனாலும், அவளை எப்படியாவது எங்கள் பாக்டரியிலே வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காகத் திருச்சிராப் பள்ளியிலே இருக்கிற எங்கள் முதலாளிக்கு ஏதோ காரணமெல்லாம் சொல்லி ஒரு கடிதாசு எழுதிக் கொண்டிருக்கிறேன். எங்க முதலாளி ரொம்ப உஷார் பேர்வழி. இருக்கிற வேலைக்கு அதிகமாக ஒரு ஆள் இருப்பதைக் கூட அவர் அனுமதிக்க மாட்டார். அவர் திருப்தியடையும்படியான முறையில் எழுதியிருக்கிறேன். நீ போய்ப் படுத்துக் கொள். எனக்கு இன்னும் ஒரு கால்மணி நேர வேலை இருக்கிறது" என்றான்.

"ஒரு பெண் என்றவுடனே உங்க ஒரு மனசு இளகிப் போய் விட்டது. இதுவே புருஷனாக இருந்தால் நீங்கள் இவ்வளவு தூரம் பாடு படுவீர்களா?" என்று விஷமத்துடன் சொல்லி விட்டு அவள் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

மறு நாள் காலை ஏழரை மணி இருக்கும். சிவராமன் காப்பி குடித்து விட்டுக் கூடத்தில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். சியாமளா குளிக்கச் சென்ருள்.

குளித்துவிட்டு டிரஸ் செய்து கொண்டு அவள் திரும்பும் போது கூடத்தில் அவள் கணவன் யாருடனே பேசிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது. உற்றுக் கேட்டாள். அது ஒரு பெண் குரல். கூடத்துக்கும் அவளுடைய அறைக்கும் இடையேயிருந்த வாசற் படியில் தொங்கிய திரைக்குப் பின்னல் வந்து நின்ருள் சியாமளா.

"எப்படியாவது என் மேல் தயவு வைத்து நீங்கள் எனக்கு உங்கள் கம்பெனியிலே ஏதாவது ஒரு வேலை கொடுத்துத்தான் ஆக வேண்டும்!" இது அந்தப் பெண்ணின் குரல்.

"நான் இன்றைக்குத் திருச்சிக்குத் தபால் எழுதி இருக்கிறேன். எங்க முதலாளி அங்கே தான் இருக்கிருர். என்னுலானதை நான் கட்டாயம் செய்கிறேன். ஆமாம், உங்களுக்கு வேறு புருஷ சகாயம்...?"

"உங்களிடத்திலே என் சோகக் கதையைச் சொல்லுவதிலே எனக்கு அவமானம் ஒன்றுமில்லை. என் கணவர் ஒரு நல்ல உத்தியோகத்திலேதான் இருந்தார். எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஆனால் என் போதாத வேளை, அவருக்கு வேறு ஒரு பெண்ணின் தொடர்பு ஏற்பட்டது. என்னை அடியோடு மறந்து விட்டு, தாம் பார்த்து வந்த உத்தியோகத்தையும் விட்டு விட்டு அந்தப் பெண்ணோடு வேறு எங்கேயோ போய் விட்டார். அவர் இருக்கிற இடமே இப்போது தெரியவில்லை. இந்த கஷ்ட காலத்



பிரயாணி:—கண்டக்டர், பஸ்ஸிலே யாரோ ஒருவர் ஒரு சீப்பு வாழைப் பழத்தை வைத்து விட்டுப் போய் விட்டார்களே! என்ன செய்யப் போகிருய்?

கண்டக்டர்:—என்ன செய்வது? அதுமாதிரி பண்டங்களைப் 'பாஸஞ்சர்' மறந்து வைத்துவிட்டுப் போய் விட்டால், ஆறுமாசம் பார்ப்போம். அப்புறம் அதைத் தூர எறிந்து விடுவோம்!

திலே என் பிறந்த வீட்டுக்குப் போக எனக்கு இஷ்டமில்லை. அங்கே போய் மேலும் அவமானப்படுவதை விட, கண் மறைவாக நானே உழைத்துச் சம்பாதிக்கிறது மேல் என்று தோன்றி விட்டது எனக்கு. அதனாலேதான் நான் இந்த ஊருக்கு வந்து வேலைக்கு முயற்சி பண்ணுகிறேன். நீங்கள் உங்கள் கம்பெனியிலே வேலை இல்லை என்று சொல்லி விட்டால் நானும் என் குழந்தைகளும் நடுத்தெருவிலே பட்டினியாகக்கிடக்க வேண்டியதுதான்!"

அந்தப் பெண் யாரென்று பார்க்க வேண்டும் என்று துடித்தாள் சியாமளா.

ஏதோ ஆபீஸ் விஷயமாகத் தன் கணவரும் அவனும் பேசும்போது திடும்பிரவேசமாகத் திரையைத் தள்ளிக் கொண்டு தான் கூடத்துக்குப் போவது அநாகரிகமாகப்பட்டது அவளுக்கு. ஆகவே அவள் மெதுவாக அங்கிருந்த ஜன்னலண்டை சென்று, ஜன்னல் திரையைச் சற்றுத் தள்ளிவிட்டுப் பார்த்தாள். அவள் தலை கிறுகிறுத்தது. அவள் சந்தேகப்பட்டது சரிதான். நெருப்பை மிதித்து விட்டவள் போல் அவள் துள்ளினாள். தன் கணவனுடன் பேசிக் கொண்டிருந்தவள் அவள் மாமா பெண் சாருமதியேதான். நல்ல காலம், சியாமளாவைச் சாருமதி பார்க்கவில்லை.

'நம் வாழ்க்கையைக் கெடுத்தவள் அவள். இப்போது நம் கணவரிடம் உத்தியோகத்திற்கு வந்திருக்கிறாள். நம் கணவர் இப்போது உத்தியோகம் கொடுக்கவில்லை என்றால் அவள் சாப்பாட்டிற்குக் கூட 'லாட்டிரி' அடிக்க வேண்டியதுதான். நான் இப்போது அவளுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று சொன்னால் என் கணவர் என் சொல்லைத் தட்ட மாட்டார். அப்படித்தான் செய்ய வேண்டும். என்னை அப்போது அழச் செய்தாளே அவள். இப்போது அவளை நாம் நன்றாக அழும்படி செய்ய வேண்டும்' என்று எண்ணினாள் சியாமளா. அடுத்த கணம் 'என்ன பைத்தியக்கார எண்ணம் இது? அவள் எனக்கு அப்போது தீமையா செய்தாள்? இல்லை, நன்மையே செய்தாள். நாம் நம் விருப்பப்படி அப்போது ராகவனை மணந்திருந்தால், இப்போது இவள் மாதிரி நாமும் தானே கம்பெனி கம்பெனியாக வேலை தேடிக் கொண்டு போக வேண்டும்? அந்தக் கதி எனக்கு வராமல் தடுத்தவள் இவள்தானே? அப்பொழுது வேண்டுமானால் சாருமதி போன்ற அதிர்ஷ்டம் நமக்குக் கிட்டவில்லையே என்று நாம் வருத்தப்பட்டோம். ஆனால் நான்தான் உண்மையில் அதிர்ஷ்டசாலி. என்னைப் படுகுழியில் விழாமல் தடுத்த சாருமதிக்குத் துரோகம் நினைக்கக் கூடாது' என்ற நல்ல எண்ணம் தோன்றி அவள் கோபத்தை அடக்கியது.

சற்று முன் சாருமதிமேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மிருக உணர்ச்சியோடு கூட இருந்த சியாமளா, இப்போது மனித உணர்ச்சி பெற்று விட்டாள்.

"சியாமளா......!"

கணவன் குரல் கேட்டு, சுய உணர்வு பெற்றாள் அவள். இதற்குள் சாருமதி எழுந்து போய்விட்டாள்.

"சியாமளா!" என்று கூப்பிட்டுக் கொண்டே சிவராமன் அறைக்குள் வந்தான்.

சியாமளா மெதுவாக அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, "நான் ஒன்று சொல்லுகிறேன். கேட்பீர்களா? இப்போது வந்தாளே அவளுக்கு நீங்கள் எப்பாடு பட்டாவது உத்தியோகமும் கொடுக்க வேண்டும், சம்பளமும் எல்லோரையும் காட்டிலும் ஒரு இருபது ரூபாயாவது அதிகமாகக் கொடுக்க வேண்டும்......" என்றாள்.

"நேற்று ராத்திரி என்னைப் பரிகாசம் பண்ணினாயே? இப்போ பார், நீயே அவள் கதையைக் கேட்டு, அவளுக்காகச் சிபாரிசு பண்ண வந்து விட்டாய். ஒரு பெண் மனசை இன்னொரு பெண்தான் புரிந்து கொள்ள முடியும். கட்டாயம் நான் அவளுக்கு வேலை கொடுக்கிறேன், நீ கவலைப் படாதே!" என்று சொல்லி விட்டுக் குளிக்கச் சென்றான் அவன்.

'அவள் உனக்குத் தெரிந்து தீமை செய்தாள். நீ அவளுக்குத் தெரியாமல் பெரிய நன்மையைச் செய்கிறாய்' என்று கூறியது சியாமளாவின் உள்ளுணர்ச்சி.

நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



ஆமாம். அவள் தனது பற்பசையை நன்கு தேர்ந்தெடுத்திருக்
கிறாள் என்பதை நீங்கள் காணலாம். அவள் புன்னகையின்
மூலம் தனது பளபளப்பான பற்களைக்காட்டிப் பெருமைப்பட்
டுக்கொள்கிறாள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை பற்களை
வெண்மையாக்குவதுடன் விடவில்லை. ஈறுகளுக்கு வலுவும்
ஆரோக்கியமும் அளித்து சுவாசத்தை இனிதாக்குகிறது.
இன்றே மக்ளீன் உபயோகிக்கும் பழக்கத்தை ஆரம்பியுங்
கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையை இன்று முதல்
தினமும் இருமுறை உபயோகியுங்கள்.

இப்போது பெரிய அளவிலும் சிக்கன
மான மாபெரும் அளவிலும்
கிடைக்கிறது.



பற்களை அதிக வெண்மை யாக்குகிறது

வர்த்தக விசாரங்களுக்கு:
ஜே. எல். மாக்லீன், லன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி 6537 பம்பாய், தபால் பெட்டி 387 கல்கத்தா, தபால் பெட்டி 1370 மதராஸ்.

MTY-12 TAM.

அத்தை வந்தாள்

டி. ஜி. எஸ்



"அத்தை அங்கு வந்து உன்னுடன் இரண்டு மாதம் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாள். ஆகையால் நாளை இரவு அவளை ரயில் ஏற்றி விடுகிறேன். ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துக் கொள்ளவும்" என்ற தன் தம்பியின் கடிதத்தைப் படித்துக் கலவரம் அடைந்தான் கோபாலன்.

அக் கடிதத்தைப் பார்த்த அவன் மனைவி கமலாவும், "ஐயோ! உங்கள் அத்தையா வரப் போகிறாள்?" என்று அலறி விட்டாள்.

அப்படி அந்தத் தம்பதிகளை வருத்தத்தில் ஆழ்த்திய அந்த அத்தை கொடூர சுபாவம் உள்ளவளல்ல; ரொம்ப சாதுதான். ஆனால் வயது எழுபதுக்கு மேலாகி யிருந்ததால் அவள் தான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கேட்போரை நரக வேதனையில் ஆழ்த்துவதை வழக்கமாய்க் கொண்டிருந்தாள். அந்த அத்தையின் பேச்சைக் கேளாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பது கொஞ்சங்கூட இயலாத காரியம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கடிதம் வந்த மறுநாள் காலை தூக்கம் தோய்ந்த முகத்துடன் ஸ்டேஷனுக்குப்போய் அத்தையை அழைத்து வந்தான் கோபாலன். அத்தை வீட்டுக்கு வந்து சேர்ந்ததும், 'சௌக்கியமா அத்தை? பிரயாணம் எப்படி யிருந்தது?" என்று பேச்சுக்குக் கேட்டு வைத்தாள் கமலா.

"கமலா, சௌக்கியமா யிருக்கிறாயா, அம்மா? கொஞ்சம் பார்வை மங்கிப் போயிருக்கிறது. நீ கட்டிக் கொண்டிருக்கிற புடவை இளிப் பச்சை நிறமா, அல்லது ஆகாசக் கலரான்னு தெரியவில்லை. மற்றப்படி சௌக்யத்திற்கு ஒன்றும் குறைச்சலில்லை. வண்டியிலே அசாத்தியக் கும்பல். போதுமடியம்மா போதும்! அந்தக் காலத்தைப் போல நாயாக மாட்டு வண்டியிலே போகிறதே தேவலை. சிரமம் மட்டும் இல்லாமே இந்தக் காலத்தில் பொருள் நஷ்டமும் வேறே! என் கூஜா ஒன்று ரயிலில் காணாமல் போச்சு!" என்றாள் அத்தை.

'எந்தக் கூஜா அத்தை?' என்று தான் கேட்க வந்ததை அடக்கிக் கொண்டாள் கமலா. ஆனால் அதற்காக அத்தை அந்த விவரத்தைச் சொல்லாமலிருக்க வில்லை.

'கல்லுமாதிரி கூஜா! இந்த நாளிலும் கூஜா என்று விற்கிறார்களே! உங்க அத்திம்பேர் ஒரு நாள் கூஜாவைத் தீர்த்தத்துடன் கீழே போட்டுவிட்டார். இந்த நாள் கூஜாவா யிருந்தால் நூறத்தில் அள்ளவேண்டியிருந்திருக்கும். அது மூடியில் கொஞ்சம் விரிந்து போனதுடன் நின்றது. வயிற்றுப் பக்கமாய்ப் பழைய அரையணா அளவுக்குச் சொட்டை விழுந்திருக்கும். அந்தப் பாவி அம்புஜம் இருந்தாளே, அவள் சிரிக்கிற போதெல்லாம் அப்படித்தான் கன்னத்திலே குழிவிழும். என்னவோ சொல்ல வந்தேன், என்னவோ சொல்லிக் கொண்டு போகிறேனே! அந்தக் கூஜா 'ஆதி' வந்த கூஜா. ஹூம், போச்சு!" என்று அங்கலாய்த்தாள் அத்தை.

'சரி; புராணம் தொடங்கி விட்டது!' என்று எண்ணினான் கோபாலன்.

'நீங்களாவது பத்து மணிக்கு ஆபீஸுக்குப் போய்விடப் போகிறீர்கள். நான் நாள் பூராவுமல்லவா அத்தையுடன் கழிக்க வேண்டும்!' என்ற அர்த்தம் தொனிக்கும் பார்வையில் கணவனைப் பார்த்தாள் கமலா.

அன்று மாலை கோபாலன் ஆபீஸிலிருந்து திரும்பியதும் காப்பியைக் கொடுத்துவிட்டு, "உங்கள் அத்தை நல்ல அத்தை!" என்று ஆரம்பித்தாள் கமலா.

"ஏன்? புதிதாக ஏதாவது சொன்னாளோ!" என்று கேட்டான் கோபாலன்.

"புதிதாக ஏதையாவது சொன்னால் பாதகம் இல்லையே! ஒன்றைப் பிடித்துக் கொண்டால் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லும் வழக்கம்தானே உங்கள் அத்தைக்கு! இன்றைக் கெல்லாம் அந்தக் கூஜாவைப் பற்றியேதான் பேச்சு. என்னுடன் சொன்னது போதாது என்று அடுத்த வீட்டு அம்மாமியிடமும், எதிர் அகத்துப் பாட்டியிடமும் அந்தக் கல்லுப் போன்ற 'ஆதி'வந்த கூஜாவைப்பற்றி ஒப்பாரி வைத்து விட்டாள்!" என்றாள் கமலா அலுப்புடன்.

அச்சமயம், "ஆபீஸிலே யிருந்து வந்து விட்டாயா கோபாலா?" என்று கேட்டபடி உள்ளே வந்தாள் அத்தை.

"இப்போதுதான் வந்தேன், அத்தை!" என்றான் கோபாலன்.

பாட்டியின் பார்வை கமலாவின் கையிலிருந்த பிளாஸ்கின் மேல் விழுந்தது.

'இப்பத்தானே இந்தமாதிரி நூதன சாமான்க ளெல்லாம் வந்திருக்கிறது! உங்கள் அத்திம்பேர் காலத்திலே கூஜாவில் தான் காப்பி கொட்டி வைப்பேன். அந்தக் கூஜா போனது எனக்கு வலது கை ஒடிந்து போனாற்போல இருக்கிறது. கல்லு மாதிரி கூஜா! மூடியில் கொஞ்சம் விரிந்திருக்கும். வயிற்றுப் பக்கம் அரையணா அகலத்திற்கு ஒரு சொட்டு. அந்தப் பாவி அம்புஜம் இருந்தாளே, அவள் சிரிக்கிறபோது......!"

கமலாவுக்குத் தலை சுற்றியது. அத்தை அதற்கு மேல் என்ன சொல்வாளென்பது அவளுக்கு மனப்பாடமாயிருந்தது. இன்னும் ஒரு முறை அந்த விவரத்தைக் கேட்டால் தனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் என்று எண்ணினாள் அவள். ஆதலால் விடுவிடென்று அங்கிருந்து கிளம்பிப் போய் விட்டாள்.

அன்றிரவு கணவனும் மனைவியும் நீண்ட நேரம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர். அத்தையின் தொணதொணப்பை நிறுத்துவதற்கு அவள் ரயில் பிரயாணத்தில் தொலைத்தது போன்ற பழைய கூஜாவொன்றை வாங்கி அவளுக்குக் கொடுத்து விடுவது என்பதுதான் அந்த முடிவு.

மறுநாளே ஒரு மார்வாடி கடைக்குப் போய் அடகு வைத்து மூழ்கிப் போன சாமான்களில் வயிற்றுப் பக்கம் சொட்டை விழுந்ததாய்ப் பார்த்து ஒரு கூஜாவை வாங்கி வந்தான் கோபாலன். அதன் மூடியைக் கீழே போட்டு ஒரு விரிசலையும் ஏற்படுத்தினான்.

“அப்பாடி! இன்றோடு அத்தையின் கூஜாத் தொந்தரவு விட்டது!” என்று மிகவும் சந்தோஷப்பட்டாள் கமலா.

“அத்தை, முந்தா நாள் ரயிலிலே உன் கூஜாவை அடித்துக் கொண்டு போனவன் இன்றைக்கு மார்வாடி கடையிலே அதை விற்க வந்தான். அகஸ்மாத்தாய் அந்தப் பக்கம் போனவன் நீ சொன்ன அடையாளம் நினைவிருந்ததால் அப்படியே அவனை லபக்கென்று பிடித்துக் கொண்டு விட்டேன். இந்தா, கூஜா!” என்று அத்தையிடம் கூஜாவைக் கொடுத்தான் கோபாலன்.

“என்னடா! நான் கேக்கிக்கு எங்கேடா போச்சுன்னு சொன்னேன்? அது இருபது வருஷத்துக்கு முன்னாடி நான் ஊருக்குப் போனபோது அல்லவா காணாமல் போச்சு! அந்தக் கல்லுப் போல கூஜா மறுபடி கிடைக்குமா என்ன? இது ஏதோ ஓட்டைக் கூஜா மாதிரி அல்லவா இருக்கிறது! அந்தக் கூஜா வயிற்றிலிருந்த சொட்டையே ஒரு அழகாயிருக்குமே! அந்தப் பாவி அம்புஜம் இருக்காளே, அவள் சிரிக்கிறபோது......”

கோபாலனும் கமலாவும் அசடு வழிய ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அத்தையிடமிருந்து அவ்வளவு சுலபத்தில் விடுதலை பெற முடியாது என்பது இப்பொழுது அவர்களுக்குத் தெரிந்து போயிற்று.

படித்துப் பாருங்கள்!

ஒற்றை ரோஜாப் பூ

பி. ஏ. பரீட்சைக்கு மூன்று தடவையும் தவறிப்போன மாணவன் வாழ்க்கையில் மனங்கசந்து, துணிகரமானதோர் காரியம் செய்யத் துணிகிறான்; அதாவது பாபநாசம் அருவியில் விழுந்து சாக எண்ணுகிறான். ஆனால் இரண்டு காரணங்களை உத்தேசித்துக் கடைசி நிமிஷத்தில் தான் செய்யத் துணிந்த காரியத்தைக் கைவிட்டுச் சென்னைக்கு இரண்டாம் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயில் வண்டியில் ஏறுகிறான். ஆகா! அதற்கப்புறம் ரயில் வண்டி நிற்கும் ஒவ்வொரு ஜங்ஷனிலும் எத்தகைய மர்மமான சம்பவங்கள்! அந்த ஒற்றை ரோஜாப்பூ அணிந்த மங்கை எத்தனை பேருடைய இதயங்களைக் கொள்ளை கொண்டு வாட்டி வதைக்கிறாள்! கதையில் வரும் பாத்திரங்களை மட்டுமல்ல, கதையை வாசிப்பவர் அத்தனை பேருடைய இதயங்களையும் அல்லவா சூறையாடுகிறாள்! ரொம்பப் பொல்லாதவள் இந்த ஒற்றை ரோஜாப் பூ அணிந்த இலங்கை மனோகரி!

இத்தொகுதியில் சேர்ந்துள்ள 'தீப்பிடித்த குடிசைகள்' என்ற கதை கல்கி ஆசிரியரின் சிறந்த ஹாஸ்யக் கதைகளுள் ஒன்றாகும். பாராவுக்குப் பின் பாரா ஆசிரியரின் ஹாஸ்யம் ஆரோகண கதியில் செல்கிறது. கதை, ஸ்ரீமான் மாவடி கோவிந்தப் பிள்ளை 1926-ம் வருஷத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ரகசியத்தை ஆராய்கிறது.

புது ஓவர்ஸியர்-ஒரு லட்சிய ஓவர்ஸியர். காந்தி மகானின் அடிச்சுவட்டிலும் ருஷிய ஞானி டால்ஸ்டாயின் போதனைப்படியும் நடக்க விரும்புகிறவர். ஆனால் கபடமும் சூதும் நிறைந்த இந்த உலகில் அவருடைய லட்சியம் ஆட்டம் காண்கிறது. ஆனால் அவர் தம் உத்தியோக வாழ்க்கையைத் துறந்து லக்ஷியத்தினின்று பிறழாமல் நிற்கிறார். அவருடைய அருஞ்செயல் எப்படிக் கல்லையும் கனியச் செய்து பாபியையும் புனிதப் படுத்தியது என்பதை இக்கதை விவரிக்கிறது.

இது தவிர வஸ்தாது வேணு என்கிற மற்றோர் ஹாஸ்யக் கதையும் இதில் அடங்கியிருக்கிறது. பிரசுரம்: பாரதி பதிப்பகம் தியாகராய நகர், சென்னை—17; விலை: ரூ. 1-12-0.

உலகத்துச் சிறு கதைகள்

ஒரு காலத்தில் உலகத்தைச் சுற்றி வருவது என்பது மிகவும் சிரம சாத்தியமான காரியமாக இருந்தது. ஆனால் இப்பொழுது இருபத்து நாலு மணி நேரத்தில் உலகத்தை ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வந்து விடலாம். ஆனால் உலகத்தை அறிந்ததாகச் சொல்லிவிட முடியுமா? அந்த அந்த நாட்டு மக்களின் உள்ள எழுச்சிகளையும் வாழ்க்கை முறைகளையும் அறிந்ததாக ஆகிவிடுமா! இவை யாவும் உணர்த்துவது அந்த அந்த நாட்டு இலக்கியங்களே யல்லவா! காலஞ்சென்ற புதுமைப் பித்தன் ருஷ்ய நாட்டில் ஆரம்பித்து அமெரிக்கா வரையுள்ள ஒவ்வொரு மேலை நாடாக நம்மை அழைத்துச் செல்கிறார். ஒரு தேசத்துக் கதை நம் கண்களில் உதிரம் வரச் செய்தால் இன்னொரு நாட்டுக் கதை மனத்தில் மகிழ்ச்சி அலைகளை எழுப்பி விடுகின்றது. மொத்தத்தில் மேல் நாட்டு மக்களும் நம்மைப் போலவே இன்ப துன்பம், ஆசை நிராசை இவற்றிடையே உழல்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

பிரசுரம்: நவயுகப் பிரசுராலயம் 185, பவளக்காரத் தெரு, சென்னை; 1. விலை: ரூ. 3—8—0.

தீபாவளி...




...கோடிக்கணக்கான மங்கள தீபங்கள் இரவை பகலாகப் பிரகாசமாக்கும் திருநாள். உங்கள் குடும்பத்தினருடன் உல்லாசமாகக் காலம் கழித்து சிற்றுண்டிகளை விருந்தினர்களுக்கு அளித்து இன்புற வேண்டிய சமயம்

சிறந்தவைகளையே விரும்புவர்களுக்கு பிரிட்டானியா பிஸ்கோத்துகளே எப்பொழுதும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் அதை அநுபவிக்கிறார்கள்.

சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா




ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இருமையான நறுமணத்தை
நீங்களும் விரும்புவீர்கள்
Himalaya Bouquet
Himalaya Bouquet
HBP. 5-X30 TM

பெருந்தன்மை

எஸ். வி. நாதன்

பிரபல ஹோட்டல் முதலாளியான ஈசுவரன் வீட்டில் அன்று ஒரே பரபரப்பு. அவருடைய செல்வக் குமாரியான சாந்தாவைப் 'பெண் பார்ப்பதற்கு' அன்று வருவதற்கிருந்தார்கள். ஈசுவரன் வாயில் ஈ புகுந்தது கூடத் தெரியாமல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

எதிர்பார்க்கப் பட்டவர்கள்-வரனும் அவன் தாயாரும் - வந்து சேர்ந்தார்கள். ஆசார உபசாரங்கள் பலமாக நடந்தன. சிற்றுண்டி, பெண் வந்து நமஸ்கரித்தல், பாட்டுப் பரீட்சை முதலியவை முறையே நடந்தேறின.

இதற்குள் "வந்து விட்டார்களா? இவர் தான் பிள்ளையாண்டானா?" என்று கேட்டுக் கொண்டே ஈசுவரனுடைய ஹோட்டல் மானேஜர் ஹரிஹரன் உள்ளே வந்தார்.

"வாருங்கோ! இவர்தான் பிள்ளையாண்டான். அதோ இருப்பது தாயார்" என்று ஈசுவரன் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த பெண்மணியைச் சுட்டிக் காட்டினார்.

அத்திசையில் பார்த்த ஹரிஹரனின் கண்கள் வியப்பினால் விரிந்தன. "சிவகாமுவா? நான் காண்பது உண்மைதானா?" என்றார்.

"சிவகாமுவேதான். நீங்கள் ஹரிஹர மாமாதானே? இங்கேயா இருக்கிறீர்கள்? இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு இப்படி எதிர்பாராமல் உங்களைச் சந்திப்பேன் என்று நினைக்கவேயில்லை" என்றாள் அந்த ஸ்திரீ மகிழ்ச்சி பொங்க.

"ஆமாம், அம்மா! இது தெய்வ சங்கல்பந்தான். உன்னைப் பார்த்தது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது, தெரியுமா?" என்று சொன்னவர், பையன் பக்கம் திரும்பி. "அப்பா! உன் அம்மா என் குழந்தை மாதிரி!" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார். நடந்தவைகளை ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டிருந்த ஈசுவரன் "என்ன ஹரிஹரன்! இவர்களை உங்களுக்குத் தெரியுமோ?" என்று கேட்டார்.

"தெரியுமாவாவது! இவள் தகப்பனார் எனக்கு மிகவும் ஆப்தர், ஸார்! பாபநாசத்தில் நான் ஒரு மிராசுதாரிடம் 'காரியம்' பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது பத்து வருஷம் இவர்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில்தான் குடியிருந்தேன். அப்புறம் அவ்வூரை விட்டுக் கிளப்பும் படியாகி விட்டது; நான் வேலை பார்த்துவந்த மிராசுதாரின் கை நொடித்து விட்டது. அதெல்லாம் இருபத்தைந்து வருஷத்துக்கு முந்திய கதை. அப்போது அதாவது நான் பாபநாசத்தை விட்டுக் கிளம்பும் போது சிவகாமுவுக்குப் பன்னிரண்டு, பதின்மூன்று வயதிருக்கும். இப்போது சட்டென்று அடையாளங் கண்டு பிடிக்க முடியவில்லை. இருந்தாலும் முகஜாடையிலிருந்து ஊகித்துக் கேட்டு வைத்தேன்" என்றார் ஹரிஹரன்.

"இவர்களுக்குப் பாபநாசமா? பாபநாசத்தில் யார்?"

"பாபநாசத்தில் மிகச் செல்வாக்குடன் விளங்கிய மிராசுதார் முத்துஸ்வாமி அய்யருடைய பெண் இந்தச் சிவகாமு."

"முத்துஸ்வாமி அய்யருடைய பெண்ணா?" என்று கேட்ட ஈசுவரனின் குரலில் கலவரம் தொனித்தது. அவர் முகம் வெளிறி விகாரமடைந்தது.

இம்மாறுதலைக் கவனித்த ஹரிஹரன் வியப்புடன், "உங்களுக்கு முத்துஸ்வாமி அய்யரைத் தெரியுமா?" என்று கேட்டார்.

"உம்......வந்து......நேரே பழக்கமில்லை! அவரைப் பற்றியும் அவர் பெருமையைப் பற்றியும் ரொம்பக் கேள்விப் பட்டிருக்கிறேன்" என்று கூறிச் சமாளிக்க முயன்றார் ஈசுவரன். எனினும் அவருடைய முகத்திலிருந்து விடை பெற்றுக்கொண்ட பொலிவு மீண்டும் திரும்பி வரவில்லை!

ஹரிஹரனும் சிவகாமுவும் பழைய கதைகளைப் பேசுவதிலும், குசலப்ரச்னங்களிலும் ஈடுபட்டனர்.

சிறிது நேரங்கழித்து, "நம் வீட்டுக்கு வர வேண்டாமா, சிவகாமு? ராத்திரி ரயிலில் ஊருக்குப் போகணும் என்கிறாய். அப்புறம் பொழுதிருக்காது. கிளம்பு. இப்போதே போய்விட்டு வந்து விடுவோம்" என்று அவளிடம் கூறிய ஹரிஹரன் ஈசுவரனிடம் அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போய் வருவதாகத் தெரிவித்தார்.

"போய்விட்டுச் சீக்கிரம் வந்துவிடுங்கள்" என்று உத்தரவு கொடுத்தார் ஈசுவரன்.

தாயாரையும் புதல்வனையும் அழைத்துக் கொண்டு ஹரிஹரன் கிளம்பிச் சென்றார்.

மிக்க வியாகூலத்துடன் ஈஸிசேரில் சாய்ந்தார் ஈசுவரன். அடுத்த கணம் பற்பல யோசனைகளும் கவலைகளும் அவரைப் பிடித்தன.

* * *

ஈசுவரன் பி. ஏ. பரீக்ஷை எழுதியிருந்தான். பெண்ணைப் பெற்றவர்கள் பலர் அவனுக்குப் பெண் கொடுக்க முன் வந்தனர். எவ்வளவோ பெண்களைப் போய்ப் பார்த்து விட்டு வந்தான் ஈசுவரன். இறுதியில் பாபநாசம் முத்துஸ்வாமி அய்யருடைய பெண் சிவகாமு தான் தன் மனைவியாக வரத் தகுந்தவள் என்று தேர்ந்தெடுத்தான். அவர்கள் செய்வதாகச் சொன்ன சீர் வகையறாக்கள் கொடுப்பதாக வாக்களித்த வரதக்ஷிணை முதலியவை ஈசுவரனின் பெற்றோர்களுக்குப் பரிபூர்ண திருப்தியை அளித்தன. ஆகவே,

கல்யாணம் நிச்சயமாகி முஹூர்த்தத் தேதியும் குறித்தாகி விட்டது.

புதன் கிழமை மத்தியானம் கல்யாணத்துக்குக் கிளம்புவதாகத் திட்டமிட்டிருந்தார்கள் ஈசுவரன் வீட்டார். செவ்வாயன்று மாலை வெகு பரபரப்புடன், புகாபாக் கிராந்தனாக வீட்டில் நுழைந்தான் ஈசுவரன். "அப்பா" என்று தகப்பனாரை இரைந்து அழைத்தான். "ஏண்டா?" என்றார், அவன் துர்வாஸத் தோற்றத்தைக் கண்டு, என்னவோ ஏதோ என்று பயந்த அவன் தந்தை.

"அந்த முத்துஸ்வாமி அய்யரின் யோக்கியதை தெரியுமா, உங்களுக்கு?"

"எதற்காக இப்படிக் கத்துகிறாய்? அமைதியாக விஷயத்தைச் சொல்லேன்!"

"அவர் ஹோட்டல்காரராம்!"

"அதனால் என்ன? எப்போதோ பத்து வருஷத்துக்கு முந்தி அவர் ஹோட்டல் நடத்திக் கொண்டிருந்தாராம். நிறையச் சம்பாதித்தாராம். அப்புறம் வேறு யாரிடமோ ஹோட்டலைக் கொடுத்து விட்டு, நிலபுலன்கள் வாங்கிக் கொண்டு ஊரோடு வந்து விட்டாராம். அதற்கு இப்போது என்ன?"

"ஓஹோ! உங்களுக்குத் தெரிந்துதான் கல்யாணம் நிச்சயம் செய்தீர்களா? சீ! பேஷ்!"

"என்னடா கிடந்து குதிக்கிறாய்? விஷயத்தைப் புரியும்படி சொல்லேன்!"

"நான் அந்த முத்துஸ்வாமி அய்யரின் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை. ஹூம், தெரிந்ததா?"

திடுக்கிட்டு மூர்ச்சையடைவதற்கிருந்த அவன் தந்தை தம்மைச் சுதாரித்துக் கொண்டு நிலைமையை யுணர்வதற்கு இரண்டு நிமிஷம் பிடித்தது. "என்னடா கூத்தடிக்கிறாய்? நாளைக்குப் பொழுது விடிந்தால் கிளம்பணும் கல்யாணத்துக்கு. இப்போ வந்து திடீரென்று கல்யாணம் செய்து கொள்ள முடியாதென்றால் என்னடா அர்த்தம்?"

"ஹோட்டல்காரரின் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை. அந்த அவமானத்துக்கு உட்பட நான் தயாரில்லை. மாமனார் 'கரண்டி ஆபீஸ்'காரர் என்று நாலு பேர் சொன்னால் ரொம்பக் கௌரவமா யிருக்கும். இல்லையா? எனக்குப் பெண் கொடுப்பவர்களுக்கா பஞ்சம்? எத்தனையோ உத்தியோகஸ்தர்கள் போட்டியிட்டுக் கொண்டு முன் வருவார்கள். செத்தாலும் எனக்கு இந்தப் பெண் வேண்டாம்" என்றான் ஈசுவரன்.

தந்தை எவ்வளவோ விதமாக அவனுக்கு எடுத்துக் கூறினார். ஹோட்டல்காரர் என்றால் அகௌரவமில்லையென்றும் மற்றத் தொழில்களைப் போல் அதுவும் ஓர் கண்ணியமான தொழில்தானென்றும் கூறினார். அப்படியே அகௌரவமென்று வைத்துக் கொண்டாலும் அவர் தற்சமயம் அத்தொழில் செய்யவில்லையென்றும் கௌரவமுள்ள மிராசுதாராகத் தான் விளங்குகிறாரென்றும் அவனுக்கு அறிவுறுத்தினார். மேலும் கல்யாணத்துக்கு மிக்க விமரிசையான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு மறுநாள் முஹூர்த்தம் என்ற நிலைமையில் முதல் நாள் கல்யாணம் வேண்டாம் என்றால் பெண் வீட்டார்களுக்கு எவ்வளவு பண விரயமும் மனக் கஷ்டமும் உண்டாகும் என்பதையும் ஆலோசிக்கும்படி தனயனைக் கேட்டுக் கொண்டார். அவன் செய்யப் புகுந்தது மகத்தான பாபச் செயல், பெருந் தவறு என்பதைப் பலமுறை எடுத்துக் கூறினார்.

அனைத்தும் வியர்த்தமாயிற்று; செவிடன் காதில் ஊதின சங்காயிற்று. "நீங்கள் முன்பே அவர் ஹோட்டல்காரர் என்பதை ஏன் என்னிடம் கூறவில்லை? இப்போதுதான் நான் கேள்விப்பட்டேன். விஷயம் தெரிந்ததும் வேண்டாம் என்கிறேன். எனவே அவர்களுடைய நஷ்டத்துக்கோ மனக் கஷ்டத்துக்கோ நான் ஜவாப்தாரியல்ல. நீங்கள் என்ன சொன்னாலும் அந்தப் பெண்ணை நான் மணக்க முடியாது. இனியும் வற்புறுத்தினால் இப்போதே கிளம்பி எங்காவது கண்



காணாத இடத்துக்கு ஓடிப் போய் விடுவேன்" என்று மிரட்டினான் ஈசுவரன்.

தந்தை என்ன செய்வார், பாவம்! துயரத்துடன் கல்யாண ஏற்பாடுகளை நிறுத்திவிடும்படி முத்துஸ்வாமி அய்யருக்குத் தந்தி கொடுத்துவிட்டு, அவரிடமிருந்து தாம் வாங்கியிருந்த பணத்தையும் மறுநாள் தபால்மூலம் திருப்பி அனுப்பிவிட்டார்.


கல்யாணம் நின்றுவிடவும் ஊரார் சிவகாமுவுக்கு வித விதமான தோஷங்களையும் குறைகளையும் கற்பித்து மனம்போனபடி யெல்லாம் கயிறு திரிக்கலானார்கள். எனவே ஒரு குற்றமும் அறியாத பேதைப் பெண் சிவகாமுவுக்கு அப்புறம் மூன்று வருஷத்துக்குக் கல்யாணம் ஆகவில்லை. முத்துஸ்வாமி அய்யர் எவ்வளவோ சிரமப்பட்டு, பகீரதப் பிரயத்தனம் செய்து கடைசியில் கம்பெனியொன்றில் டைப்பிஸ்டாக இருந்த ஏழைப் பையன் ஒருவனைப் பிடித்துச் சிவகாமுவைக் கல்யாணம் செய்து கொடுத்தார்.

சக்கரம் சுழன்றது. பத்து வருஷங்களுக்குள் சிவகாமுவின் கணவன் அந்தக் கம்பெனியின் மானேஜராகிவிட்டான். அந்தஸ்தும், செல்வமும், செல்வாக்கும் அவனைத் தேடி வலுவில் வந்தன.

இதற்கிடையில் ஈசுவரனுடைய வாழ்க்கையில் பல மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. அவன் மனோராஜ்யம் செய்தபடி எந்தப் பெரிய உத்தியோகஸ்தரும் அவனைத் தேடி வந்து தம் பெண்ணை ஏற்றுக்கொள்ளும்படி அவனைக் கேட்டுக் கொள்ளவில்லை! ஒருதரம் நிச்சயமான பெண்ணைத் திடீரென்று கல்யாணத்துக்கு முதல்நாள் வேண்டாம் என்று மறுத்துவிட்ட செய்தி எங்கும் பரவி விடவே யாரும் அவனுக்குப் பெண்ணைக் கொடுக்கப் பயந்தார்கள். ஆகவே, நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு நாலைந்து பெண்களுக்குத் தகப்பனாரான ரிஜிஸ்திரார் ஆபீஸ் குமாஸ்தா ஒருவரின் கடைசிப் பெண்ணுக்கு மாலையிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது ஈசுவரனுக்கு.

தபால் இலாகாவில் வேலையாயிருந்த ஈசுவரன் ஒரு அவசரத்துக்கு ஆபீஸ் பணத்தில் நூறு ரூபாயை எடுத்துச் செலவழித்து விட்டான். அவனுடைய துரதிர்ஷ்டம் மறுநாளே அவன் ஆபீஸுக்குக் கணக்குகளைப் பரிசோதனை செய்யும் அதிகாரி திடீரென்று வந்துவிட்டார். ஈசுவரனுடைய குற்றம் கண்டு பிடிக்கப்பட்டுக் கேஸ் நடந்தது. கடைசியில் ஈசுவரன் வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டான்; ஜெயிலுக்குப் போகாமல் தப்பித்துக் கொள்வதே பெரும்பாடாகி விட்டது.

வேறு எங்கும் வேலை கிடைப்பதாயில்லை ஈசுவரனுக்கு. பணத்தைக் கையாடியதாக வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவனுக்கு யாரும் வேலை கொடுக்கத் தயங்கினார்கள். ஒரு வருஷம் வரை வாழ்க்கை நடத்தவே மிக்க சிரமப்பட்டான் அவன். கடைசியில் நண்பன் ஒருவனிடம் ஒரு சிறு



தொகை கடன் வாங்கிக் கொண்டு சிறிய அளவில் ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்தான். வியாபாரம் பெருகிற்று. நல்ல லாபம் கிடைத்தது. சில ஆண்டுகளில் ஈசுவரன் பெரிய ஹோட்டல் முதலாளி ஆகிவிட்டான்.

*   *   *

சிவகாமுவை முதலில் அடையாளங் கண்டு கொள்ளவில்லை ஈசுவரன். ஹரிஹரன் மூலம், தான் பல வருஷங்களுக்கு முன் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டுக் கடைசி நிமிஷத்தில் முடியாதென்று நிராகரித்து விட்ட அதே சிவகாமுதான் இவள் என்று தெரிந்ததும் பெருத்த கலக்கமும் அச்சமும் அடைந்தார். அவர் பெண் சாந்தாவின் ஜாதகத்தில் ஏதோ பெரிய தோஷமிருந்ததால் எந்த வரனின் ஜாதகமும் அவளுக்குப் பொருந்துவதாயில்லை. மூன்று வருஷங்களாக நூற்றுக்கணக்கான ஜாதகங்களைச் சல்லடை போட்டுச் சலித்ததில் இந்த ஜாதகம்—சிவகாமுவின் பிள்ளை ஜாதகம்—ஒன்றுதான் பொருத்தமுள்ளதாக அகப்பட்டது. மேலும் பையன் படிப்பு, அழகு, அந்தஸ்து, செல்வம் எல்லாவற்றிலும் சிறந்தவனாக இருந்தானாகையால், அவனை எப்பாடு பட்டாயினும், எவ்வளவு செலவானாலும் சரி, தம் மாப்பிள்ளை யாக்கிக் கொண்டு விடுவது என்று தீர்மானித்தார் ஈசுவரன். தாம் முட்டாள் தனமாக அந்தக் காலத்தில் சிவகாமுவுக்குச் செய்துவிட்ட அநீதி காரணமாக அந்தக் கல்யாணம் நடைபெறாமல் போய் விடுமோ என்று பெரிதும் அஞ்சினார் அவர்.

அஸ்தமித்து விட்டது. அப்போதும் சிவகாமு ஹரிஹரன் வீட்டிலிருந்து திரும்பா ததைக் கண்டு ஈசுவரனுடைய கலவரம் அதிகரித்தது. ஒருவேளை விஷயம் வெளியாகி, சிவகாமு தம் வீட்டுக்குத் திரும்பிவரக் கூட இஷ்டப்படாமல் அங்கிருந்தே அதாவது ஹரிஹரன் வீட்டிலிருந்தே, ரயிலுக்குப் போகத் தீர்மானித்து விட்டாளோ என்று சந்தேகித்தார். கணத்துக்குக் கணம் அந்த ஐயம் அதிகரிக்கவே, அவர் ஹரிஹரன் வீட்டிற்குக் கிளம்பினார்.

ஹரிஹரன் வீட்டு ரேழியில் ஈசுவரன் நுழைந்தபோது உள்ளே கூடத்தில் ஹரிஹரனிடம் சிவகாமு பேசிக் கொண்டிருந்த மொழிகள் அவர் காதில் விழுந்தன. தம்மைப் பற்றிய பேச்சுதான் அது என்பதை அறிந்த ஈசுவரன் ரேழியில் இருட்டிலேயே உள்ளே செல்ல மனமில்லாமல் தயங்கி நின்றார்.

"மாமா! நீங்கள் இப்போது அவருடைய பூர்வீகம் கணபதி அக்ரஹாரம் என்று கூறியதும், அவரைப்பற்றிச் சொன்ன தகவல்களும் இதே ஈச்வரன்தான் எனக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தவர் என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன. நீங்கள் அவரிடத்தில் நான் பாபநாசம் முத்துஸ்வாமி அய்யருடைய பெண் என்று கூறியபோது அவர் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்தீர்களா? நான் கவனித்தேன்; ஏன் அவர் முகம் இப்படிப் போகிறது என்று அதிசயித்தேன். இப்போதுதான் புரிகிறது" என்றாள் சிவகாமு.

"அவருடைய அந்தச் செய்கைக்கு பழி தீர்த்துக் கொள்ளும் முறையில் நீ இப்போது ஒன்றும் செய்துவிடாதே, சிவகாமு!"

"அதற்கு உங்கள் சிபாரிசே தேவையில்லை, மாமா! அவர்தான் தொழிலின் மேன்மை தெரியாமல் அக்காலத்தில் தெரியாத்தனமாக அப்படிச் செய்தார் என்றால் நானும் அற்பத்தனமாய் நடப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஒரு நாளும் மாட்டேன். யோக்யமாகச் செய்யும் எந்தத் தொழிலும் கௌரவமுள்ளதுதான். அதை ஈசுவரனும் இப்போது உணர்ந்திருப்பார் என்று நம்புகிறேன்.

"பெண் நல்ல லக்ஷணமாயிருக்கிறாள். பையனுக்கும் பிடித்திருக்கிறது. எப்போதோ நடந்த விஷயத்துக்காக, அந்தப் பெண் பொறுப்பாளியாக இல்லாத ஒரு செயலுக்காக அவளை நிராகரிப்பானேன்? ஈசுவரன் ஒன்றும் எனக்குத் தெரியாது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். திறமையாக என்னிடமிருந்து சமாசாரத்தை மறைத்து விட்டதாக நினைத்துக் கொண்டிருப்பார். அப்படியே இருக்கட்டும். எனக்குத் தெரிந்ததாக நான் காட்டிக்கொள்ளப் போவதில்லை. நீங்களும் அவரிடம் சொல்லவேண்டாம். சுமுகமாகக் காரியம் நடக்கட்டும்" என்றாள் சிவகாமு.

இரேழியில் நின்ற ஈசுவரன் ஆனந்தமும் அவமானமும் ஒருங்கே அடைந்தார். "இந்தப் பெண்மணியின் முன் நான் எவ்வளவு தாழ்ந்தவன்! இவ்வளவு பெருந்தன்மையுள்ளவளா இவள்!" என்ற எண்ணம் அவர் மனத்தில் ஓடியது.



பையன் (மிருகக் காட்சி சாலையில்):—அம்மா, இந்த மனிதக் குரங்கைப் பார்த்தால் நம்ம மாமாவின் ஞாபகம் வருகிறது, இல்லையா?

அம்மா (கோபத்துடன்):—சீ, அப்படியெல்லாம் சொல்லக் கூடாது! தெரியுமா?

பையன்:—ஏன் அம்மா, நான் சொன்னதுதான் குரங்குக்குப் புரியாதே!

கோலினாஸ்

இயற்கையின் அற்புதப் பச்சை க்ளோரோபில் சேர்ந்தது

...உங்கள் பல் சுத்திகரிப்பில் இதுவரை ஏற்படாத மாபெரும் அபிவிருத்தி!

செடிகொடிகளை பசுமையுடன் வைத்திருக்கும் பொருளாகிய இயற்கையின் சிருஷ்டி க்ளோரோபில் உதவியால் நாள் முழுதும் வாய் துர்நாற்றத்தை அகற்றுங்கள்....பல் சிதைவும் சாதாரண ஈறுக்கோளாறுகளும் ஏற்படாமல் தடுங்கள்!

உங்கள் பல் பராமரிப்புக்கு இதுவரை இல்லாத முறையில் மிகப் பயன்படக்கூடிய மார்க்கம் இதுவே, சந்தேகமில்லை. க்ளோரோபில் சேர்ந்த அற்புதமான கோலினாஸ் பல் சிதைவையும் கேடு விளைக்கும் கிருமிகளையும் நேரடியாகத் தாக்குவது மட்டுமின்றி, வாய்த் துர்நாற்றத்தையும் நாள் முழுவதிலும் ஒழித்து விடுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பச்சை க்ளோரோபில் தான் — தாவரங்களை பசுமையுடன் வைத்திருக்க இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட அற்புத ரசாயனப் பொருள்!

க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் விசேஷ பலனளிப்பது தவிர, சிக்கனமானதுங்கூட—ஈரமில்லாத பிரஷ் மீது அரையங்குலமே போதுமானது. பச்சை அட்டைப் பெட்டியில் எல்லா ஸ்டோர்களிலும் கிடைக்கும். இன்றே வாங்கி, தந்த விஞ்ஞானத்தில் இதுவரை இல்லாத இப்பெரும் அபிவிருத்தியின் பயனை அடையுங்கள்!

புதிய பச்சை அட்டைப் பெட்டியை கவனியுங்கள்
ஸ்டாண்டர்ட் கோலினாஸ் (மஞ்சள் லேபில்) கூட கிடைக்கும்

2000 அமெரிக்க பல் நோயாளிகள் க்ளோரோபில்லின் குணாதிசயங்களை நிரூபிக்கின்றனர்

நான்கு வருட ஆராய்ச்சி மற்றும் சுமார் 2000 அமெரிக்க பல் நோயாளிகளைக்கொண்டு நடத்தப்பட்ட மிக விரிவான சோதனைகள்....இவைகளின் பயனாக நிரூபணமானதென்னவெனில், க்ளோரோபில்லுடன் கூடிய டெண்டல் க்ரீம்:—

- வழக்கமான சகல வகை ஈறுக் கோளாறுகளையும் நிறுத்துகிறது.
- நாள் பூராவும் வாயில் துர்நாற்றம் ஏற்படாமல் தடுக்கிறது.
- பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்துக்கட்டுகிறது.

உங்கள் பல் டாக்டர் இச்சோதனைகளைப்பற்றி அறிவார்....அவற்றின் பலன்களையும் ஊர்ஜிதம் செய்வார்.





கோலினாஸ் புன்னகையில் ஆரோக்யம் ததும்புகிறது!

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய் 1. கிளைகள்: கல்கத்தா — மதராஸ் — டில்லி



8. இதென்ன வம்பு?

வாழ்வு என்னும் நாடகத்தில் திரை தூக்கப்படுவதும் இறக்கப்படுவதும் போல இரவும் பகலுமாகப் பதினேழு வருடங்கள் ஓடி மறைந்தன. குன்னத்தூர் பட்டக்காரரின் மாளிகையும் அதைச் சுற்றியிருக்கும் அழகான தோட்டமும் மாறுதல் ஏதும் இன்றி அப்படியேதானிருந்தன.

அந்த அழகான கட்டிடத்தின் வெளித் தோட்டத்திலுள்ள மேடையில் இரு வாலிபர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்களிருவரும்பார்வைக்குப் பெரியமனிதர் வீட்டுப்பிள்ளைகள் மாதிரிதான் தோற்றமளித்தனர். அவர்களிருவரையும் பார்ப்பவர்கள் இருவரும் சம வயதை உடையவர்கள் என்று மதிப்பிடுவார்களே தவிர ஒருவரைவிட ஒருவர் வயதில் குறைந்தவரென்றோ கூடுதலானவரென்றோ சொல்ல மாட்டார்கள். அவர்களில் ஒருவன் பெயர் ஆனந்தன். மற்றொருவன் பெயர் கோவிந்தன். இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். குன்னத்தூர் பட்டக்காரர் திருவேங்கிட உடையாரின் சகோதரிகளின் குமாரர்கள். அவருடைய மூத்த சகோதரியின் மகன் கோவிந்தன். இளைய சகோதரியின் மகன் ஆனந்தன். பட்டக்காரரைப் போல் அவருடைய சகோதரிகளின் குடும்பங்கள் செல்வ நிலையில் கொழிக்கா விட்டாலும் சிரமமில்லாமல் சுகமாக ஜீவிக்கக்கூடிய பூஸ்திதியை உடையவைதான்.

ஆனந்தனும் கோவிந்தனும் உருவில் ஒரே மாதிரியாக இருந்தாலும் குணத்தில் வேறுபட்டவர்கள். குணத்திலும் கொள்கைகளிலும் அவர்கள் மாறுபட்டவர்களாயிருந்தாலும் சகிப்புத் தன்மையோடும் சகோதர வாஞ்சையோடும் நேசம் பாராட்டி வந்தனர். ஒருவரை ஒருவர் பிரிய முடியாதபடி சகோதர வாஞ்சைதான் அவர்களை இணைத்து வைத்திருந்தது. ஆனந்தன் எப்பொழுதும் துடிதுடிப்பும், சுரு சுருப்பும், கல கல வென்று எல்லோருடனும் பேசும் சுபாவமும் உள்ளவன். கோவிந்தன் கர்வமும், முன் கோபமும் உள்ளவன். இவர்களுடைய குணங்கள் எப்படி இருந்தாலும் இவர்களிடம் சமதையாகவே அன்பு பாராட்டி வந்தார் பட்டக்காரர். இவர்களில் யாராவது ஒருவனுக்குத் தன் பேத்தி மாதவியை விவாகம் செய்து வைத்து விடவேண்டுமென்பது அவருடைய அபிப்பிராயம். இதைப் பற்றி அவர் யோசித்துப் பார்த்துத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆகவே, அவர் பொறுத்துப் பார்த்து முடிவு செய்யத் தீர்மானித்தார். அவருடைய முடிவு யாருக்கு அதிர்ஷ்டமாக முடியுமோ! ஊரில் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். பட்டக்காரர் எப்படி முடிவு செய்தாலும் அந்தப் பெண்ணிற்கு ஏற்ற கணவன் இவர்கள் இல்லை என்பது ஊராரின் முடிவு. மாதவி இவர்களைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தாளா என்பது கேள்வியாகவே இருந்தது.

கோவிந்தன் ஆனந்தனின் தோளைத் தட்டி, "நீதான் அதிர்ஷ்டக்காரன். மாதவியை உனக்குத்தான் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறதாக ஊரிலே எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் மாதவி உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பாளா என்பது தான் தெரிய வேண்டிய விஷயம்..." என்றான் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கிண்டலாக.

"நீ சொல்லுவதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவள் சம்மதித்தாலும் சரி, சம்மதிக்காவிட்டாலும் சரி, அவளைப் பார்த்தால் எனக்கு என்னவோ பல சந்தேகங்கள் தோன்றுகின்றன. அவளுடைய துணிச்சலும், முரட்டுக் குணமும், ஒருவரையும் லட்சியம் செய்யாமல் அவள் நடக்கும் தோரணையும், பார்த்தால் இந்தப் பெண் நமக்குத் தகுதியா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. இப்போது நீயும் நானும் நினைக்க வேண்டியதெல்லாம் மாமாவின் சொத்துத்தானே!" என்றான் ஆனந்தன் சிரித்துக் கொண்டே.

"மாமாவினுடைய சொத்திலே எப்பொழுது உனக்குக் குறியிருக்கிறதோ, அப்பொழுது துணிந்து மாதவியைக் கல்யாணம் செய்து கொண்டு தான் ஆக வேணும்.—மாதவியைக் கல்யாணம் செய்து கொள்ள எனக்குப் பூரண சம்மதம். மாதவிக்கும் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமிருக்கலாம். இந்த மாதிரி முரட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறதிலே தான் சுகம் இருக்கிறது..." என்று கோவிந்தன் சொல்லிக் கொண்டு வரும்போது ஆனந்தன் இடைமறித்து "உஸ்...அதோ மாதவி வருகிறாள். பேசாதே!" என்றான்.

அந்தக் கட்டிடத்திற்குள்ளிருந்து ஒரு பெண் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு வயது பதினேழு இருக்கும். நல்ல உயரம். கட்டான சரீரம். சிறிது கருப்பாக இருந்தாலும் அழகாகவும் மிடுக்காகவும் இருந்தாள். அவளுக்குப் பின்னால் சுமார் நாற்பது வயது மதிக்கக்கூடிய தாதி ஒருத்தி வந்து கொண்டிருந்தாள். அந்தப் பெண்தான் குன்னத்தூர் பட்டக்காரரின் பேத்தி மாதவி. பட்டக்காரர் வம்சத்தில் தோன்றிய

பெண்களின் அழகிற்கு ஈடாக அவளுடைய அழகு இல்லா விட்டாலும் அவளுடைய அழகிலும் பிறரை வசீகரிக்கக்கூடிய சக்தி இருந்தது. அவளுடைய விழிகள் இரண்டும் பெரிதாகவும் எப்பொழுதும் குறும்புத்தனம் நிறைந்தவைகளாகவும் காணப்பட்டன. கரு கரு வென்று வளர்ந்திருந்த கேசத்தைச் சுற்றிச் சொருக்கு முடியாகப் போட்டிருந்தாள். அவள் அணிந்திருந்த நகைகள் அவள் அழகை உயர்த்தவுமில்லை; குறைக்கவுமில்லை.

அவள் கோவிந்தனும் ஆனந்தனும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து, "நீங்கள் எனக்காகத்தானே காத்திருக்கிறீர்கள்! இப்போது நான் ஒரு இடத்திற்கு போகப் போகிறேன். நீங்களும் என்னுடன் வருகிறீர்களா!" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"எங்கே......!" என்றான் ஆனந்தன்.

"இன்று மத்தியானம் இங்கே சில கழைக் கூத்தாடிகள் வந்து வித்தை செய்து காட்டினார்களே, உங்களுக்குத் தெரியுமா!"

"தெரியுமே! அவர்கள் வித்தை செய்து காட்டும் போது தான் நாங்களும் இருந்தோமே!" என்றான் கோவிந்தன்.

"ஆமாம். மாமா கூட அவர்களுக்கு ஒரு ரூபாய் கொடுத்தார். இல்லையா!" என்றான் ஆனந்தன்.

'ஒரு ரூபாய் என்ன, அவர்கள் படுகிற சிரமத்துக்கு எத்தனை ரூபாய் கொடுத்தாலும் தகும். உயரமான கொம்பிலே ஏறி, எவ்விதப் பிடிப்பும் இல்லாமல் உடலை வளைத்துத் தலைகீழாகக் கீழே இறங்குகிறது என்றால் அது சாமான்யக் காரியமா, என்ன!" என்றாள் மாதவி.

"ரொம்பக் கடினம்தான்......" என்று ஆமோதித்தான் ஆனந்தன்.

கோவிந்தனுக்கு அதை மிகவும் கஷ்டமான வித்தை யென்று ஒப்புக் கொள்ள இஷ்டமில்லை. அவன் எதையுமே லேசாக ஒப்புக் கொள்வதில்லை. ஆகவே, "இதென்ன பிரமாதம்! நான் மகாமகத்தின்போது கும்பகோணத்திலே பார்த்தேன். நூறடி உயரத்திலே இருந்து ஒருவன் தன்மேலே பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தனக்குத்தானே நெருப்பும் வைத்துக் கொண்டு அப்படியே கீழே குதித்தான். இவர்களெல்லாம் சுத்தக் காட்டு மிராண்டிகள். இப்படித்தான் ஏதாவது செய்து ஜனங்களை ஏமாற்றுவார்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் மாதவிக்கு ஆத்திரமும் கோபமும் பொங்கி எழுந்தன. "அவர்களெல்லாம் ஏதாவது செய்துதான் ஜனங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உங்களைப்போல ஒன்றுமே செய்யாமல் ஒருவரையும் ஏமாற்றப் பார்க்கவில்லை" என்றாள்.

கோவிந்தன் இதற்கு எதிரிடையாக ஏதாவது பேசி விவாதத்தை விபரீதமான முடிவிற்குக் கொண்டுவந்து விடப் போகிறானே என்ற பயம் ஆனந்தனுக்குத் தோன்றவே, அவன் மெதுவாகப் பேச்சைத் திருப்ப எண்ணினான். "அதிருக்கட்டும், மாதவி! எங்கேயோ போகப் போகிறேன் என்று சொன்னாயே, எங்கே!" என்று கேட்டான்.

"அந்தக் கழைக்கூத்தாடிகளெல்லாம் ஏரிக் கரை மைதானத்திலேதான் தங்கியிருக்கிறார்களாம். வேடிக்கையாக அவர்களைப் போய் பார்த்துப் பேசி விட்டு வரலாம் என்று ஆசைப்படுகிறேன்..." என்றாள் மாதவி.

"அப்படியா!...எங்களுக்கும் அவர்களைப் போய் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. நாங்களும் வரலாமா!" என்றான் ஆனந்தன்.

"தாராளமாக வாருங்கள். எனக்கும் துணையாக இருக்கும்" என்றாள் மாதவி.

பிறகு மாதவி தனக்குப் பின்னால் நின்ற நடுத்தர வயதுள்ள ஸ்திரீயிடம் தலையை ஆட்டி விடை பெற்றுக் கொண்டாள். அவர்கள் மூவரும் ஏரிக்கரை மைதானத்துக்குப் புறப்பட்டனர்.

"மாதவி, பத்திரம்! இருட்டுவதற்கு முன்னால் வந்துவிடு. அவர்களோடெல்லாம் அதிகமாய் வாய் கொடுக்காதே. நீ என் வார்த்தையைக் கேட்காவிட்டால் தாத்தாவிடம் சொல்லி விடுவேன்" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினாள் அந்த ஸ்திரீ.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும் கோவிந்தன் மாதவியைப் பார்த்து, "மாதவி! நீ அந்த வேலைக்காரிக்கு ரொம்ப இடம் கொடுக்கிறாய். அவள் உன்னை இப்படி அதிகாரம் செய்யும்படியாக வைத்துக்கொள்ளக் கூடாது..." என்றான்.

மாதவி கேலியாகச் சிரித்துக் கொண்டே, "ஆமாம்! வள்ளியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும், அத்தான்! அவளைப்போல என்னிடம் பிரியமாக யார் இருப்பார்கள்! அவள்தானே என்னைச் சிறு குழந்தை முதல் வளர்த்திருக்கிறாள்! என் தாயாரே உயிரோடு இருந்தால்கூட என்னிடம் இவ்வளவு அன்பும் பாசமும் வைத்திருக்க மாட்டாள். அப்படி இருக்கும்போது அவளுடைய அதிகாரத்துக்கு நான் கட்டுப்பட்டு நடந்தால் அதில் என்ன பிசகு!" என்றாள்.

கோவிந்தன் அதற்குமேல் அவளிடம் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் மூவரும் ஏரிக் கரையை அடைந்தனர். அந்த ஏரிக்கரைக்கு அருகிலிருந்த மைதானத்தில் பத்துப் பன்னிரண்டு குடிசைகள் இருந்தன. "அதோ, அங்கேதான் அவர்கள் தங்கியிருப்பார்கள் போலிருக்கிறது" என்று கையை நீட்டிச் சுட்டிக் காட்டினாள் மாதவி.

அதற்குள் ஆனந்தன், "அதோ பார். அந்தப் பெண் யார்!" என்று வேறு திசையில் கையைக் காட்டினான். கோவிந்தனும் மாதவியும் அவன் காட்டிய திசையில் தங்கள் கவனத்தைத் திருப்பினர். சுமார் பதினாறு பதினேழு வயது மதிப்பிடக் கூடிய பெண் ஒருத்தி ஏரித் தண்ணீரைக் காலால் துழாவியபடி நின்று கொண்டிருந்தாள். அவள் உடுத்தி இருந்த உடையிலிருந்து அவளும் அந்த நாடோடிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவள் என்பது எளிதாக விளங்கியது.

"இவ்வளவு அழகான பெண் இந்தக் கூட்டத்தில் இருப்பது அதிசயம்தான்" என்றான் ஆனந்தன், சிறிது தூரத்தில் நின்று கொண்டிருக்கும் அந்தப் பெண்ணையே கண் கொட்டாமல் பார்த்தவாறு.

"என்ன அதிசயம்! இவர்களெல்லாம் எங்கேயாவது நல்ல குழந்தைகளைப் பார்த்தால் களவாடிக் கொண்டு போய்விடுவார்களாம். அப்படித் திருடிக் கொண்டு வந்த குழந்தைகளில் ஒன்றாக இருக்கலாமோ இந்தப் பெண்!" என்றான் கோவிந்தன்.

இதைக் கேட்டதும் மாதவிக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தன. 'அவர்களெல்லாம் திருட மாட்டார்கள். நம்மைப்போல் இருக்கிறவர்கள் எல்லாம் எங்கேயாவது குழந்தையை அனாதையாய் விட்டு விட்டு வந்தால் அதை எடுத்து வளர்ப்பார்களாம்" என்றாள்.

"அப்படித்தானிருக்கும்" என்றான் ஆனந்தன்.

"வள்ளிகூட என்னிடம் கதை கதையாகச் சொல்லியிருக்கிறாள். அவர்களுக்குள்ளே ராஜா ராணி எல்லாரும் உண்டாம்" என்றாள் மாதவி.

"அப்படியா! ஒரு வேளை இவள் அவர்களுடைய ராணியாக இருப்பாளோ!"

"அந்த ராணியையே தான் போய்க் கேட்போமே. அவள் தனியாய் இருந்து அரசாளுகிறாளா! அவளுக்கு ஒரு ராஜா உண்டா? அந்த மன்னாதி மன்னன் எங்கே இருக்கிறான் என்று!" என்றான் கோவிந்தன்.

கோவிந்தனும் ஆனந்தனும் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே பேசிக் கொண்டிருக்கும் போது மாதவி அவர்களுக்குச் சமீபத்தில் இல்லை. ஆனந்தன் திரும்பிப் பார்த்த பொழுது மாதவி அங்கிருந்த குடிசைகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். அவள் அங்கு எதற்காகப் போகிறாள் என்று ஆனந்தனுக்குப் புரியவில்லை. அவன் அவளுக்குப் பாதுகாப்பாக அவளைப் பின் தொடர்ந்தான். கோவிந்தன் மாத்திரம் நின்ற இடத்தை விட்டு அசையவே இல்லை.

ஆனந்தன் தனக்குப் பாதுகாப்பாக வருவதை எண்ணிச் சிரித்துக் கொண்டே மாதவி, "நான் அவர்களுக்குப் பயப்படவில்லை. அவர்களெல்லாம் அவ்வளவு கெட்டவர்கள் இல்லை என்று வள்ளி சொல்லியிருக்கிறாள்" என்றாள்.

ஆனந்தன் அவளுக்கு எவ்விதமான பதிலும் சொல்லாமல் அவளைப் பின் தொடர்ந்தான். மாதவிக்கு உள்ள துணிச்சல் அவனுக்கு எப்பொழுதும் ஆச்சரியத்தை அளித்ததில்லை.

மாதவி அங்கு முதன் முதலாக இருந்த குடிசை வாசலில் போய் நின்றாள். அந்தக் குடிசை மற்றவைகளைப் போலில்லாமல் சிறிது பெரிதாகவும், சுத்தமாகவும் வர்ணக் கொடிதாள்கள் ஒட்டப்பட்டு அலங்காரத்துடனும் காணப்பட்டது. அந்தக் குடிசையின் சிறிய மூங்கிற் கதவு அரை குறையாக மூடப்பட்டிருந்தது. மாதவி மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக முயற்சித்தாள். திடீரென்று பின்னாலிருந்து, "யாரம்மா நீங்கள்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

மாதவியை அப்படி வழி மறித்து நிறுத்தியவன் பெத்தண்ணன் தான். பதினேழு வருடங்களுக்கு முன் வள்ளியை விடை கொடுத்து அனுப்பும் போது எப்படி இருந்ததோ, அப்படித்தானிருந்தது இப்பொழுதும் அவன் முகத்தோற்றம். ஆனால் வயதானதின் காரணமாகத் தலை நரைத்து உடல் கூனல் விழுந்திருந்தது. "எதற்காக அம்மா இந்தக் குடிசைக்குள்ளே நீங்கள் போறீங்க! இதற்குள்ளே நீங்கள் போகக் கூடாது. இது எங்கள் ராணியின் குடிசை!" என்றான்.

"ராணியின் குடிசையா! நான் உங்கள் ராணியைப் பார்க்கத்தான் வந்தேன். அவளோடு ஒரு வார்த்தையாவது பேசவேண்டும் என்று எனக்கு ஆசை" என்றாள் மாதவி பெத்தண்ணனை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டே.

"ராணி இப்போது இங்கே இல்லை. ஏரிக்கரைப் பக்கம் உலாவப் போயிருக்கிறாள். நீங்கள் வரும் போது பார்த்திருக்கலாமே!" என்றான் பெத்தண்ணன்.

"பார்த்தீர்களா. அத்தான்! அந்தப் பெண் தான் இவர்களுடைய ராணியாம். நான் அவளைக் கண்டு இரண்டு வார்த்தை பேசி விட்டுத்தான் வருவேன். எனக்கு இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ரொம்ப ஆசை" என்றாள் மாதவி ஆனந்தனைப் பார்த்து.

அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது ஏரிக்கரைப் பக்கத்திலிருந்து பெரிய கூக்குரல் கேட்டது. சட்டென்று அம் மூவரின் பார்வையும் கூக்குரல் வந்த பக்கம் திரும்பியது.

"அங்கே ஏதோ கலாட்டா. ஏதாவது எங்கள் ராணிக்கு ஆபத்தோ என்னவோ!" என்று சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தான் பெத்தண்ணன். மாதவியும் ஆனந்தனும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

ஏரிக்கரை ஓரமாக இருந்த மரத்தடியில் கூட்டமாக இருந்தது. அந்தக் கூட்டத்தினர் சூழ்ந்து நின்று ஆரவாரம் செய்வதிலிருந்து அங்கு யாரோ இருவர் ஆக்ரோஷமாகச் சண்டை போடுகின்றனர் என்பது எளிதாக விளங்கியது. "அடி, குத்து, அப்படித்தான்" என்ற ஆரவாரம் பெரிதாக இருந்தது. பெத்தண்ணன் அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே சென்று பார்த்தான். ஆனந்தனும் மாதவியும் அவனோடு சென்றனர். என்ன விபரீதம்! கோவிந்தனைக் கீழே தள்ளி அந்த நாடோடிக் கூட்டத்திலேயே பலசாலியான வாலிபனொருவன் முகத்திலும் மார்பிலும் மாறி மாறிக் குத்திக் கொண்டிருந்தான். அந்தக் கூட்டத்திற்கிடையே ஏரிக் கரையில் கண்ட அந்த அழகான பெண்ணும் நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் வெட்கக் குறியும் வருத்தமும் தோய்ந்திருந்தது. கோவிந்தனைக் கீழே தள்ளி மனம் போனபடி அடித்துக் கொண்டிருந்த வாலிபன் பெத்தண்ணனைக் கண்டதும் எழுந்து நின்றான். அந்த வாலிபனுக்கு வயது இருபது இருக்கும். அங்கிருந்த எல்லா வாலிபர்களையும் விட அழகாகவும் கட்டமைந்த தேகத்தோடும் அவன் காணப்பட்டான். கோபத்தினால் பொருமிக் கொண்டிருந்த அவன் முகத்தில் சட்டென்று ஒரு தெளிவு ஏற்பட்டது. ஒரு புறம் பய



அவர் :—ஓரே மழையாக இருக்கிறதே, ஸார்! நீங்கள் ராத்திரி இங்கேயே தங்கிவிடுங்கள். வீட்டுக்குப் போக வேண்டாம்!

நண்பர் :—சரி, ஸார்!

அவர் (சற்று நேரம் கழித்து) :—ஸார், எங்கே போயிருந்தீர்கள்? சொட்டச் சொட்ட நனைந்து விட்டீர்களே!

நண்பர் :—ராத்திரி இங்கேயே தங்கச் சொன்னீர்கள் அல்லவா? வீட்டுக்குப் போய் என் கம்பளிப் போர்வையை எடுத்துக் கொண்டு வந்தேன்!

மென்று உயர்ந்து நிற்கும் கிராப்புத் தலை, அகன்ற நெற்றி, அடர்ந்த புருவம், கறுக்கி விடப் பட்ட கரிய மீசை, சிமிழ்போன்ற மூக்கு, அகன்ற மார்பு, திரண்ட புஜம், உடம்போடு ஒட்டினாற் போல் ஒரு 'மூண்டா' பனியன், கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு. அவனைப் பார்த்தால் பரம்பரையாக வந்துள்ள வீரர் பரம்பரையில் தோன்றியவன் போல் இருந்தது. வண்டியில் கட்டினால் ஓடுவதற்குத் தயாராக இருக்கும் இளங்காளைக் கன்று போன்றிருந்தது அவன் நின்று கொண்டிருந்த அந்தத் தோற்றம். அவனை எதிர்க்க முடியாமல் கோவிந்தன் பல அடிகளை வாங்கிக் கொண்டானென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிப் பட்ட வஜ்ர தேகமுள்ள ஒரு வாலிபனை எதிர்க்க அந்த வட்டாரத்திலேயே ஒருவரும் அகப்படமாட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

''சிங்காரம்! இங்கே என்ன நடந்திச்சு! இந்த மனுசன் யாரு!'' என்று கேட்டான் பெத்தண்ணன் அந்த வாலிபனைப் பார்த்து.

''இவன் யாரோ! இவன் வந்து நம் ராணிகிட்டே ஏதோ பைத்தியக்காரத்தனம் செய்திருக்கிறான். இரண்டு தட்டுத் தட்டினேன்'' என்றான் அந்த வாலிபன் அலட்சியமாக.

கீழே கிடந்த கோவிந்தன் மெதுவாக எழுந்து தன் சட்டையில் படிந்துள்ள மண்ணைத் தட்டிக் கொண்டே அந்த வாலிபனைச் சுட்டு விடுவது போல் பார்த்தான். அங்கு ஏதோ ரசமில்லாத சம்பவம் நடந்திருக்க வேண்டுமென்று அந்தக் கூட்டத்தினரின் கோபத்தையும் அந்த அழகிய யுவதியின் கலவரம் நிறைந்த முகத்தையும் பார்த்தவுடனே எளிதில் உணர்ந்து கொண்டான் ஆனந்தன். அதுவரையில் பின்னால் நின்றுகொண்டிருந்த அவன் முன்னே வந்து கோவிந்தனைப் பார்த்து, ''இதென்ன வம்பு!'' என்று மிகவும் கடுமையான குரலில் கேட்டான்.

''ஒரு வம்பும் இல்லே. உன்னையும் மாதவியையும் போல நான் இந்தப் பிச்சைக்காரப் பயல்களை லட்சியம் செய்யவில்லே. நான் இந்தப் பெண்ணோடு பேசலாம் என்று அவள் அருகில் போனேன். அவள் என்னைக் கண்டதும் ஓடினாள். நான் அவளைத் தடுத்து நிறுத்திப் பேச நினைத்தேன். அவ்வளவுதான். அவன் வேண்டுமென்றே கூச்சல் போட்டான். இந்தத் தடியன் மிருகம்போல வந்து என்னை அடித்துக் கீழே தள்ளினான்'' என்றான் கோவிந்தன் பதைபதைப்போடு.

''நான் ஒன்றும் மிருகம்போல வந்து இவனை அடிக்கவில்லே. இவன்தான் மிருகம் போல ராணியைத் தூக்கிக் கொண்டுபோய் அவள் கையைப் பிடித்து இழுத்தான். இதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா! இவனுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தேன்'' என்றான் சிங்காரம் என்ற அந்த வாலிபன்.

''ஏய்! நாடோடிப் பயலே! மரியாதையாகப் பேசு. நான் அப்படியே உன் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவேன்!'' என்று கோவிந்தன் குரலில் கோபம் பொங்கச் சீறினான்.

''என்ன சொன்னே!'' என்று மறுபடியும் கைகளை உதறிக் கொண்டு சிங்காரம் சண்டைக்குத் தயாரானான்.

ஆனந்தன் அவனைத் தடுப்பது போல் இடையில் வந்து நின்று கோவிந்தனைப் பார்த்து, ''இதோ, பார்! இப்போது இவர்களுக்கு இருக்கக்கூடிய ஆத்திரத்தில் உன்னை எது வேண்டுமானாலும் செய்துவிடுவார்கள். அதை யாராலும் தடுக்க முடியாது. இதை நீயே யோசித்துத் தக்கபடி நடந்து கொள்!'' என்றான் கடுமையாக.

ஆனந்தனின் கடுமையான எச்சரிக்கைக்குப் பிறகுதான் கோவிந்தன் அங்குள்ள சூழ்நிலையை உணர்ந்து கொண்டான். அந்தச் சமயத்தில் அவன் உள்ளம் கொதிப்படைந்திருந்தாலும் அதை அடக்கிக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

மாதவி சிங்காரத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவனுடைய தோற்றமும், கட்டமைந்த உடலும், அவள் மனத்தை வசீகரித்தன. அப்பொழுது அங்கு நடந்த தகராறுகளெல்லாம் அவள் மனத்தில் பதியவேயில்லை. அவள் பார்வை முழுவதும் சிங்காரத்தினிடமே லயித்திருந்தது.

கோவிந்தன் தன் தோளை உலுக்கிக் கொண்டே, ''இவர்களுக்கு இவ்வளவு ரோசம் வர என்ன நடந்து விட்டது! நான் எப்பொழுதும் போக்கிரிகளுக்கும் திருடர்களுக்கும் இடம் கொடுக்கவே மாட்டேன். நான் மாத்திரம் இந்தப் பெண்ணுக்கு ஏதாவது காசு கொடுத்து ஆசை வார்த்தை காட்டி இருந்தால் இவன் இப்படிச் சப்தம் போட்டிருக்க மாட்டான்'' என்று சொல்லிக்கொண்டே அந்த இடத்தை விட்டுச் செல்ல முயற்சித்தான்.

கோவிந்தனின் வார்த்தையைக் கேட்டதும் பெத்தண்ணனுக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கி வந்தது. அவன் சட்டென்று கோவிந்தனின் தோளைப் பிடித்து நிறுத்தி, ''நாக்கை அடக்கிப் பேசு, ஐயா! இவள் யாரு தெரியுமா! எங்கள் ராணி. மனிதத் தன்மை இல்லாமல் பேசும் உன்னுடைய கேவலமான கையால் அவளை நீ தொட்டதற்கு என்ன நேர்ந்தது என்பது உனக்கு அதற்குள்ளே மறந்துடுத்தா! சிங்காரத்திடம் ஒரு கத்தி இருந்தால் அந்தக் கையையே இத்தனை நேரம் வெட்டி இருப்பானே! எங்களை அவ்வளவு மட்டமாக நினைக்கவிடாதே, ஐயா! ஜாக்கிரதையாகப் பேசு!'' என்றான்.

''உன் கையை அப்பாலே எடு. நீ என்னை அப்படியெல்லாம் மிரட்டிப் பயமுறுத்திவிட முடியாது. இன்னும் பன்னிரண்டு மணி நேரத்துக்குள்ளே நீங்கள் இந்த இடத்தைவிட்டு ஓட ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் போகாவிட்டால் போலீசை வைத்து உங்களை விரட்டச் சொல்லுகிறேன். நீங்கள் நல்லபடியாக இங்கே இருக்க வேண்டும் என்றால் என்னிடம் ரொம்ப மரியாதையாக நடந்து கொள்ள வேணும். இல்லாவிட்டால் உங்கள் குடிசை ஒன்று இருந்தாலும் அதைக் கொளுத்தி விடச் சொல்லுவேன். புரிந்ததா!'' என்று எச்சரித்தான் கோவிந்தன்.

இவ்வளவு நேரமும் சிங்காரத்தையே பார்த்துக் கொண்டு நின்ற மாதவி கோவிந்தனின் வார்த்தைகளைக் கேட்டதும் சட்டென்று திரும்பி கோபத்துடன், ''முட்டாள்தனமாகப் பேசாதீர்கள், அத்தான்! இந்த ஊர் முழுவதும் எங்கள் தாத்தாவின் சொந்தம். இங்கே இவர்கள் இருக்கலாமா கூடாதா என்பதெல்லாம் எங்கள் தாத்தா முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஏழை நாடோடி என்பதற்காக இவர்களைக் கீழ்த்தரமாக நினைத்துவிடக் கூடாது. நீங்கள் செய்த தவறான காரியத்துக்குத் தகுந்த தண்டனை கிடைத்தது. உங்களுடைய விஷமத்தனத்தையெல்லாம் இந்தப் பெண்ணிடமா காட்டுவது! இவர்கள் எத்தனை நாள் வேணுமானாலும் இங்கேயே தங்கி இருக்கலாம் என்று நான் சொல்லுகிறேன். நான் இந்த ஊருக்குச் சொந்தக்காரரான பட்டக்காரரின் பேத்தி'' என்றாள் அதிகார தொனியில். (தொடரும்)

என் துணைவர்

நாகன்

அன்புடைய பங்கஜம்,

எங்களுடைய கல்யாணத்துக்கு நீ அன்புடன் அனுப்பிய பரிசும் கடிதமும் கிடைத்தன. அதற்கு என் சார்பிலும் 'அவர்' சார்பிலும் எங்கள் இருதயம் கனிந்த நன்றி.

'இந்த வருஷம் தனக்குக் கல்யாணம் இல்லை' என்று போன கடிதத்தில் கூட எழுதியிருந்தாளே, அதற்குள் இவள் எப்படிக் கல்யாணத்துக்குச் சம்மதித்தாள் என்று உனக்கு ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? அதைச் சொல்லத்தான் இந்தக் கடிதம்.

போன மாதம் வழக்கமாக அப்பா யாரோ ஒருவரை அழைத்துக் கொண்டு வந்தார், என்னைப் பெண் பார்க்க. நானும் அந்தப் பிள்ளையைப் பார்க்காமலேயே வழக்கம் போலப் பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டேன். அப்பாவுக்குக் கோபம் வந்து விட்டது. "இனிமேல் அவளுக்குப் பிள்ளை பார்க்க என்னால் ஆகாது" என்று அம்மாவிடம் கோபித்துக் கொண்டார். "எப்படியும் அவள் இஷ்டப்படித்தானே அப்பா பார்த்தாகணும்?" என்றான் என் அண்ணா. "இந்தப் பிள்ளைக்கு எதில் குறைச்சல்? பையன் நன்றாக இல்லையா? உத்தியோகம் இல்லையா?" என்று அப்பா வாதாடினார். இவைகளை எல்லாம் நேரே என்னிடம் கேட்க இஷ்டப்படாத அப்பா அண்ணாவிடம் கேட்டார். இவைகளுக்குப் பதில் சொல்லத் தெரியாத அண்ணா என்னைத் தனியாக அழைத்து, "ஏன், காமு! உன் மனசில் என்னதான் இருக்கிறது? ஒருகால் நீ வேறு யாரை யாவது விரும்புகிறாயா?" என்று கேட்டான்.

"உன் தங்கையைப் பற்றி அப்படியெல்லாம் நினைக்கிறாயா, அண்ணா? அப்படியெல்லாம் என் அறிவு விசாலித்து விடவில்லை" என்று துடுக்காக நான் பதில் அளித்தேன்.

"பின் ஏன் இப்படி அப்பாவை அலைக்கழிக்கிறாய்?" என்று கேட்டான் அண்ணா.

"இன்னும் என் புத்தியே ஸ்திரப்படவில்லை, அண்ணா. பள்ளிக்கூடத்திலே படித்துக் கொண்டிருக்கும் போது வாத்தியார் சொன்னார், 'பெண்கள், குறைந்தது பதினேழு வயதாவது ஆன பிறகுதான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு ஒரு ஸ்திர புத்தி ஏற்பட்டு வாழ்க்கையில் பொறுப்பறிந்து நடந்து கொள்ளக்கூடிய மனப் பக்குவம் ஏற்படும்' என்று. எனக்கும் அதுதான் சரி என்று தோன்றுகிறது" என்றேன்.

"சபாஷ், காமு! நான் உன் கட்சி!" என்று அண்ணா என்னை உற்சாகப் படுத்தினான்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து எங்கள் வீட்டுக்கு ஒரு கல்யாணப் பத்திரிகை வந்தது. என் அத்தையின் பெண்ணுக்குச் சிதம்பரத்தில் கல்யாணம். அவள் என்னைவிட இரண்டு வயது சிறியவளாக இருந்தாலும் சற்றுப் பழைய காலத்து முறைகளை அநுசரிக்கும் அவளுடைய பெற்றோர் அவளுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து விட்டார்கள். அப்பாவுக்கு ஆபீஸ் தொந்திரவு. அதனால் நானும் அம்மாவும் அண்ணாவும் சிதம்பரத்திற்குப் போனோம் கல்யாணத்துக்கு.

ஏதாவது ரகசியமான சமாசாரம் என்றால் 'சிதம்பர ரகசியமோ?' என்று கேட்கிறோம் அல்லவா? அந்தச் சிதம்பர ரகசியம் என்னவென்று உனக்குத் தெரியுமோ? எனக்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். சிதம்பரத்துக்குப் போனவுடன் அண்ணாவைக் கேட்டேன். 'எனக்குத் தெரியாது' என்று சொல்லிவிட்டான் அவன். அம்மாவைக் கேட்டேன். அவள் விவரமாக ஒன்றும் சொல்லவில்லை. ஒரு விஷயம் ரகசியம் என்றதும் தானே அதை அறியவேண்டும் என்ற ஆவலும் அதிகரிக்கிறது? ஆகவே, அந்தச் சிதம்பர ரகசியத்தைத் தெரிந்து கொள்ளச் சாயங்காலம் கோயிலுக்குப் போவது என்று தீர்மானித்தேன். அண்ணா, அண்ணாமலை யூனிவர்ஸிடியைப் பார்க்கப் போகிறேன் என்று கிளம்பிவிட்டான். அம்மாவோ நலுங்கு வைபவத்தில் ஈடுபடும் ஆவலில் 'எல்லாம் இருட்டின பிறகு போய்க் கொள்ளலாம்' என்று சொல்லி விட்டாள்.

அம்மாவுக்குத் தெரியாமல் நான் வீட்டு வாசற்படிகூட இறங்கியதில்லை. ஆனால் கல்யாண வீடு, கோயிலின் தெற்கு வாசற்படியிலேயே இருந்தது. எவ்வளவோ பெண்கள் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அதனால் அன்று அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமலேயே நான் தனியாகக் கிளம்பி விட்டேன், சிதம்பர ரகசியத்தை அறிந்து கொள்ளும் ஆவலில்.

கோயிலின் தெற்கு வாசற்படியால் உள்ளே நுழைந்து பிராகாரத்தைச் சுற்றி வந்தேன். அங்கே மூலவரின் விக்கிரகம் இருந்தது. ஆண்கள் ஒரு வரிசையாகவும் பெண்கள் ஒரு வரிசையாகவும் நின்று சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். அதிகக் கூட்டம் இல்லை. பெண்கள் நின்று கொண்டிருந்த வரிசையில் நானும் கோடியில் நின்றுகொண்டு தரிசனம் செய்தேன். அங்கேதான் எங்கேயாவது சிதம்பர ரகசியம் இருக்கும் என்று தோன்றிற்று. இதைப் பற்றி யாரிடமாவது கேட்பதற்கும் முதலில் சற்றுக் கூச்சமாக இருந்தது. இருந்தாலும் ஆவல் உந்தித்

தன்னவே, பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு ஸ்திரீயிடம் மிகவும் மெதுவான குரலில் அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டேன்.

அப்பொழுது ஒரு அதிசயம் நடந்தது. 'கணீர்' என்ற குரலில் "ஏன் ஸார், சிதம்பர ரகசியம் என்கிறீர்களே, அது என்ன, எங்கே இருக்கிறது?" என்ற கேள்வி ஆண்கள் வரிசையிலிருந்து எழுந்தது. இவ்வளவு ஆவல் ததும்பக் கேட்கும் அந்த ஆத்மா யார் என்று பார்த்தேன். ஒரு இளைஞர் நெற்றியில் விபூதியுடன் கைகூப்பிப் பயபக்தியுடன் நின்று கொண்டிருந்தார், எனக்குச் சரியான நேர் எதிர் வரிசையில்.

நான் கேள்வி கேட்ட ஸ்திரீ ஒரு கணம் என்னைப் பார்த்தாள். என் கேள்வியைத் தொடர்ந்த அந்த வாலிபரின் கேள்வியும் கிளம்பவே, அவரையும் ஒரு கணம் உற்று நோக்கினாள். பிறகு இரண்டு பேருக்கும் படும்படியான பொதுவான குரலில், "உள்ளே வாருங்கள், சிதம்பர ரகசியம் என்கிறது அங்கேதான் இருக்கிறது" என்றாள்.

அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும் அவளுடைய கணவர் போல் தோற்றம் அளித்த ஒருவர் அவளுடன் சேர்ந்து கொண்டார். எல்லோரும் பிராகாரத்தின் வழியே நடந்து நடராஜாவின் சந்நிதிக்குச் சென்றோம். நடுவழியில் அந்த ஸ்திரீயின் கணவர் என்னையும் அந்த வாலிபரையும் நோக்கி, "நீங்கள் இரண்டு பேரும் சந்நிதிக்குப் போங்கள். நான் போய் அர்ச்சனைச் சாமான்கள் வாங்கி வந்து விடுகிறேன்" என்றார்.

எனக்கு 'சுருக்' கென்றது. யாரோ ஒருவருடன் அவர் என்னைச் சேர்த்துப் பேசவே, என் மனம் இனம் புரியாமல் தவித்தது. அவரைத் தொடர்ந்து அந்த அம்மாள் "ஏன்? அவர்களும் அர்ச்சனை செய்கிறார்களோ என்று கேளுங்களேன்!" என்றாள்.

எதிரில் அர்ச்சனைச் சாமான்கள் விற்கும் கடையில் உட்கார்ந்து கொண்டிருந்த சுமங்கலிக் கிழவி, "வாங்க, சாமி! என்ன யோசனை செய்கிறீங்க? நடராஜாவுக்கு அர்ச்சனை செய்யுங்க! ராஜாமாதிரிக் குழந்தை பிறக்கும்!" என்றாள் அவர்கள் பேச்சுக்கு அநுசரணையாக.

பங்கஜம், எனக்கு எப்படி இருந்திருக்கும் அப்போது? என் கைகளும் கால்களும் வெட வெடவென்று நடுங்க ஆரம்பித்து விட்டன. ஆத்திரமும் கோபமும் முகத்தில் கனல் தெறிக்க அந்த வாலிபரை நோக்கினேன். அவருடைய முகத்திலும் வேதனைக் குறி தாண்டவமாடியது. எதேச்சையாக மூலவரின் சந்நிதியில் எதிரும் புதிரும் நின்று கொண்டு நாங்கள் கேட்ட அக் கேள்வி அந்தத் தம்பதிகளின் மனத்தில் எங்கள் இருவரையும் கணவன் மனைவியாக்கி விட்டது! இந்தப் பைத்தியக்காரத்தனம் போதாதென்று அர்ச்சனைச் சாமான்கள் விற்கும் கிழவி வேறு அதை ஊர்ஜிதப்படுத்தி விட்டாள்! அப்பொழுது நான் என்ன செய்திருக்க முடியும்? செய்வதறியாமல் செயலற்று நின்று கொண்டிருந்தேன்.



அர்ச்சனைச் சாமான்கள் விற்கும் அந்தக் கிழவி ஒரு தட்டில் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியவைகளை வைத்து நீட்டினாள். 'அவர்' சில்லறை எடுக்கப் பர்ஸைத் திறந்தார். "தட்டை வாங்கிக்கொள்ளேன், அம்மா!" என்றாள் என்னுடன் இருந்த ஸ்திரீ.

அந்தத் தட்டைத் தொடவே எனக்குப் பிடிக்கவில்லை. யாரோ செய்யும் அர்ச்சனைக்கு நான் தட்டுத் தூக்க வேண்டுமா என்று என் ரத்தம் கொதித்தது.

நடராஜாவின் சந்நிதிக்குச் சென்ற எனக்கு அங்கே நிற்கும் ஒவ்வொரு கணமும் முள்ளின்மேல் நிற்பதுபோல் இருந்தது. அந்த ஸ்திரீயோ சிதம்பர ரகசியத்தைப் பற்றி ஏதேதோ சொன்னாள். ஆனால் அவள் சொன்னது என் காதில் ஏறினால்தானே?

நாங்கள் வெளியே வந்தோம். அந்த ஸ்திரீயின் கணவர் 'அவரைப்' பார்த்து-



சாப்பிடுபவர் :—இந்தக் காப்பியில் என்ன கழுநீர்வாசனை அடிக்கிறதே!

ஹோட்டல் காரர் :—தேவலையே ! ரொம்பப் பேர் நம்ம ஹோட்டல் காப்பியில் வாசனையே கிடையாது என்றல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் !

"நீங்கள் எல்லைக் காளியம்மன் கோயிலைத் தரிசனம் பண்ணி விட்டீர்களா ?" என்றார்.

"இல்லையே ! அந்தக் கோயில் எங்கே இருக்கிறது ?" என்று கேட்டார் 'அவர்'.

"அடாடா ? சிதம்பரத்திற்கு வந்து விட்டு அந்தக் கோயிலைப் பார்க்காமல் போகலாமா ?"

"இல்லை. எங்களுக்கு வேலை இருக்கிறது. அப்புறம் பார்த்துக் கொள்கிறோம்" என்று மெல்ல நழுவப் பார்த்தார் 'அவர்'. எனக்கு அவர்மீது நன்றி உணர்ச்சி உண்டாகியது. ஆனால் அந்தத் தம்பதிகள் விடவில்லை. "நன்றாக இருக்கிறது ! சிதம்பரத்துக்கு வந்துவிட்டு எல்லைக்காளியம்மனைத் தரிசிக்காமல் போனால் பிரயோசனமே இல்லை. பக்கத்திலேதான் இருக்கிறது" என்று கூறி எங்களைக் கட்டி இழுக்கத் தொடங்கி விட்டனர்.

'அவர்' எங்கேயோ பார்ப்பது மாதிரிப் பார்த்துக் கொண்டே, அருகிலிருந்த அந்தத் தம்பதிகளுக்குக்கூடக் கேட்காத குரலில், "உங்களுக்கு அந்தக் கோவிலைப் பார்க்க வேண்டுமா ?" என்று என்னைக் கேட்டார்.

நான் பதில் சொல்லாமல் மௌனமானேன். அவர்கள் நடந்தார்கள். 'அவர்' தொடர்ந்தார். நானும் நடந்தேன். வேறு வழி ?

கோயிலின் வடக்குப் பிராகாரத்து வழியாக வெளியேறி ஊரின் வடக்கு எல்லையில் இருக்க கோயிலை அடைந்தோம். உக்கிரம் தாங்காமல் இருக்க அம்மனுக்கு உடல் முழுவதும் குங்குமத்தினால் அபிஷேகம் செய்து உக்கிரத்தைத் தணித்திருந்தார்கள். எதிரில் நின்று பேசும் தெய்வமாகக் காட்சி அளித்தாள் எல்லைக் காளி அம்மன்.

கோயிலை விட்டு வெளியில் வந்து, வடக்கு வீதியில் திரும்பியதும் அந்தத் தம்பதிகள் பிரிந்தார்கள். அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு நாங்களும் நகர்ந்தோம்.

இத்தனை நாழிகையாக அடக்கிவைத்துக் கொண்டிருந்த என் கோபம் பீறிட்டெழுந்தது. அவரிடம் வெறுப்புடன் வார்த்தைகளைக் கொட்டத் தயாரானேன். அப்பொழுது அவர் மிகவும் உருக்கமான குரலில் குழைந்து குழைந்து, "நான் மிகவும் வருந்துகிறேன். தயவுசெய்து நீங்கள் மன்னிக்க வேண்டும். வேறு வழியில்லாமல் போய் விட்டது. உங்களுக்குத்தான் நமது இக்கட்டான நிலைமை தெரியுமே !" என்றார்.

என் கோபம் எல்லாம் ஒரே கணத்தில் ஓடி மறைந்தது. அவர் முகத்தை நோக்கினேன். உண்மையாகச் சொல்கிறேன், அவர் முகம் களங்கமற்றுத் துல்யமாக இருந்தது.

"நடந்தது என்னவோ அசம்பாவிதம் தான். அதற்கு யார் யாரை மன்னிப்பது ? சரி, நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு நகர்ந்தேன்.

"உங்கள் வீட்டுக்கு நான் வரக்கூடாது. ஆனால் உங்கள் வீடு எங்கே என்று சொல்லி நீங்களும் அநுமதித்தால் அதுவரை நான் உங்களுக்குத் துணை வரமுடியும்" என்றார்.

"எனக்குத் துணை வேண்டியதில்லை. தெற்குக் கோபுர வாசல்படியில்தான் என் வீடு !" என்று சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

"தெற்குக் கோபுர வாசற் படியிலேயா ? எங்கே......?" என்றார் அவர்.

மறைந்திருந்த என் கோபம் மறுபடியும் திரும்பியது. "அங்கே கல்யாணம் நடக்கிற வீட்டில் !" என்றேன் எரிச்சலுடன்.

"கல்யாண வீடா ? கல்யாண. வீட்டில் நீங்கள் யார் ? பெண் வீட்டைச் சேர்ந்தவர்களோ ?" என்று கேட்டார் அவர்.

"நான் கல்யாணப் பெண்ணுக்கு மாமாவின் பெண்" என்றேன். என் ஊர், உறவு எல்லாவற்றையும் முன்பின் தெரியாத ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருப்பதற்கு எனக்கு என்ன ஆத்திரம் வந்தது. தெரியுமா ?

"நான் அந்தக் கல்யாணப் பிள்ளையின் மாமா பிள்ளை !" என்றார் அவர் ! அவர் முகத்தில் ஆச்சரியம் ததும்பிற்று. குறும்பு தாண்டவமாடிற்று. மகிழ்ச்சி பொங்கியது.

நான் அப்படியே ஸ்தம்பித்து நின்றேன்.

"சரி ! போகலாம், வாருங்கள் !" என்றார் அவர். கோவிலின் கீழ்ப் பிராகாரம் வழியாக வீட்டுக்கு வந்தோம்.

வீட்டுக்குத் திரும்பியதும் என் அண்ணா "ஏன், காமு ! சிதம்பர ரகசியத்தைத் தெரிந்து கொண்டாயோ ?" என்று கேட்டான்.

"தெரிந்து கொண்டு விட்டேன் அண்ணா. ஆனால் அதை ரகசியமாகத்தான் உன்னிடம் சொல்லுவேன்" என்றேன்.

அப்புறம் என்ன ? என் கலியாணம் நடந்தது. இதுதான் நான் கல்யாணத்துக்குத் திடீரென்று சம்மதித்த ரகசியம்.


உன் அன்புள்ள,
காமு.

உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...





சிறந்த பொருள் வாங்கினால்தான் சீரிய பலனைப்பெறலாம் என்பது வெற்றிபெற்ற மனிதர்களுக்குத் தெரியும். அதனாலேயே மிக மிருதுவானதும், நேர்த்தியானதுமான க்ஷவரத்திற்கு மிகவும் கூராகத் தீட்டப்பட்ட ப்ளு ஜில்லெட் பிளேடுகளை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த பிளேடுகள் மிகவும் கூராயிருப்பதோடு நல்ல உறுதியாயிருக்கின்றன. பல நேர்த்தியான க்ஷவரங்களை அளித்து நீண்ட காலம் உழைக்கின்றன. அதனால் உலகத்திலேயே சிறந்த சுகபோக க்ஷவரத்தை குறைந்த செலவில் யாவரும் பெற முடிகிறது.

சிறந்தவைகளுக்கிடையே மிகச் சிறந்ததைப் பெறுங்கள்:—

அதற்காக தயாரிக்கப்பட்ட ரேசரையும் பிளேடையும் தான் எப்பொழுதும் உபயோகிக்க வேண்டும். ப்ளு ஜில்லெட் ரேசரும் ப்ளேடும் ஒன்றோடொன்று பொருந்த அமைந்து உங்களுக்கு மிக நேர்த்தியான க்ஷவரத்தை அளிப்பதற்காகவே செய்யப்பட்டிருக்கின்றன.

ஜில்லெட் ரேசர் செட் ரூ. 1-8-0 லிருந்து

ப்ளு ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு அணா 14

இவளும் அவளும்

த. நா. குமாரஸ்வாமி

நிச்சிந்தபுரம் ஒரு சின்ன ரெயில்வே ஸ்டேஷன். ஒரு பக்கம்தான் அதற்கு 'பிளாட்பாரம்'. ஒற்றை லைனில் உள்ள ஸ்டேஷன். பிளாட்பாரமெங்கும் வரிசையாகப் புங்க மரமும் வேப்ப மரமும் கலந்து இருண்ட நிழலைப் பரப்பின. ஸ்டேஷன். ஓர் ஏரியின் எதிர்வாய்க்கருகில் இருந்ததால் நல்ல காற்றோட்டம். ஒரு சின்ன தங்கும் அறை; டிக்கட் கொடுக்குமிடம், இவைதாம் ஸ்டேஷனில் உள்ள கட்டடங்கள்.

அந்த ஸ்டேஷன் படிகளை விட்டு இறங்கினால், இரண்டே அறைகள் உள்ள, சின்னஞ் சிறு வீடு. சற்று எட்டிப் போர்ட்டரின் குடிசை. சமீபத்திலேயே, அரை பர்லாங்கிற்குள். தோப்புக்கிடையே நிச்சிந்தபுரம். சரியான பெயர்தான் அதற்கு வாய்த்தது. மனத்திற்கு நிச்சயம் தரும் இடமே. ஒரு நாளைக்கு நாலு தடவையே ரெயில் வண்டி அந்த ஊர்ப்பக்கம் போகும். காலையில் ஒரு பாஸெஞ்சர் வரும். மத்தியானம் ஒரு 'லோக்கல்'. சாயங்காலம் சுமார் நாலு மணிக்கு ரோட்டு கூட்ஸ் ஒன்று போகும். சாமான் இறக்க வேண்டியிருந்தால் நிற்கும். ஏற்றுமதிதான் கிடையாதே! இல்லாவிட்டால் ஸ்டேஷனை உலுக்கிக்கொண்டு பெருத்த ஓசையுடன் போய்விடும். ஸ்டேஷனில் போர்ட்டர் கை விளக்கைக் கொளுத்துவதற்கும் பாஸெஞ்சர் வண்டி வருவதற்கும் சரியாக இருக்கும். இரண்டொரு பிரயாணிகள் இறங்கினால் அதிசயம். கரும் புகையைக் கக்கிக்கொண்டு ஏரி லைனில் வண்டி மறைந்து விடும். அப்புறம் நிசப்தந்தான். ஸ்டேஷன் விளக்கையெல்லாம் அணைத்து விடுவார்கள். இப்போதெல்லாம் மண்ணெண்ணெய் மிச்சப்படுத்த வேண்டுமென்று உத்தரவு.

இரவு ஒன்பது மணிக்குமேல் ஸ்டேஷன் கட்டடம் அதிர ஆரம்பிக்கும். கடுவேகமாக 'மெயில் வண்டிகள்' தண்டவாளத்தின் மீதுள்ள சருகு-இலைக் கிளப்பிக் கொண்டு ஓடும். ஸ்டேஷன் அறையில் ரயில் வண்டி வருவதைத் தெரிவிக்கும் யந்திரம் டிணி டிணி என்று ஒலிக்கும். இந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டரை பாக்கியசாலி என்றே சொல்ல வேண்டும். வேலை அதிகமே இல்லை. ஒரு நாளைக்கு இருபது ரூபாய்க்கு டிக்கட் விற்கும். தொல்லை ரொம்பக் கிடையாது. சாயங்காலந்தான் சில டிக்கட் இல்லாத பிரயாணிகள் வண்டியின் மறுபுறமாக இறங்கி ஓடிவிடுவார்கள். சாஸ்திரத்துக்காக மாதம் இரண்டு டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தவர்களைப் பிடித்தால் போதும்.

சிவராமன் இந்த ஸ்டேஷனுக்கு வந்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. அவனுக்கு உதவி ஸ்டேஷன் மாஸ்டர் அந்தஸ்து கிடைப்பதற்கு எட்டு வருஷ காலம் பிடித்தது. இருபத்திரண்டாம் வயதில் ரெயிலில் உத்தியோகமாயிற்று. நான்கு வருஷப் புக்கிங் கிளார்க்கு. எத்தனையோ ஸ்டேஷன்களில் டிக்கட் அடித்து அடித்து அவனுடைய கையே மரத்துப் போய்விட்டது. அப்புறம் ஐந்து வருஷம் காய் படும் பாடாக ஓர் இடம் விட்டு ஓர் இடம் 'ரிலீவிங்' ஸ்டேஷன் மாஸ்டர் வேலை. இதற்கிடையே கடினமான பரீட்சை ஒன்று. அதிலும் தேறினான். மற்றுமொரு கண்டம். மீண்டும் உடல் நிலை சம்பந்தமாக டாக்டர் பரீட்சை செய்து பார்த்தார். இப்படியாக மேல் அதிகாரி, எவ்வளவோ சூழ்ச்சியெல்லாம் செய்தார். சிவராமனுடைய கல்லான உடல், லஞ்சமின்றியே அந்தப் பரீட்சையில் வெற்றியுடன் வெளியேறியது. இப்போது சிவராமனுக்கு வயது முப்பது ஆகிறது. வாழ்க்கையில் இன்னும் தெம்பு குறையவில்லை. மேல் வரும்படிக்கு அவன் ஆசைப்படாதவன். சற்று ஏகாந்தப் பிரியன். நிச்சிந்தபுரத்துக்குத் தன்னை மாற்றிய செய்தியைக் கேட்டதும் சந்தோஷம் பொங்கியது.

தன் இளம் மனைவி காமாட்சி, நாலு பெட்டி, இரண்டு படுக்கை, சில தட்டுமுட்டு சாமான்கள் இவற்றுடன் ஒருநாள் காலை நிச்சிந்தபுரம்வந்து அங்கிருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம் வேலையை ஒப்புக் கொண்டான். ஸ்டேஷன் மாஸ்டர் வீடு ரொம்ப சின்னதுதான். குழந்தை குட்டியிராத தங்களுக்கு இது போதுமென்று திருப்தி அடைந்தார்கள். ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே ஒரு பெரிய கிணறு. ரயில்வேக்காரன் எங்கே கைவைத்தாலும், நல்ல நீரோட்டம் கிடைத்து விடுகிறது. வீட்டைச் சுற்றி வெறும் தரை. இரண்டு செடி கொடிகள் போடுவதற்கு வசதி இருந்தது. போர்ட்டர் கந்தசாமிக்குச் சற்று கண் ஊனம். மெடிகல் ஆபீஸர் அவனை வேலைக்கு லாயக்கற்றவன் என்று சொன்ன போதிலும். ஏதோ 'தட்டு கெட்டு தட்டி' வேலையை நிரந்தரமாக்கிக் கொண்டான். அவனுக்கு இரண்டு மனைவிகள். ஜங்ஷனில் கூட்ஸ் டிப்போவில் வேலைக்கு எவ்வளவோ அடிபோட்டான் பாவம். அந்தப் பாழும் கண்கோளாறு அவனை நிச்சிந்தபுரத்திலேயே நிறுத்திவிட்டது. ஸ்டேஷன் வேலை ரொம்ப இராது. காமாட்சி தோட்டம் போடுவதற்குப் போர்ட்டர் கந்தசாமி மிகவும் உதவியாக இருந்தான்.

இரண்டே அறையானாலும், காமாட்சி அதை ஒழுங்காக வைத்துக் கொண்டாள். கொட்டிச் சிந்திப் பாழாக்காமல் அவளுக்குச் செட்டாகக் குடித்தனம் நடத்தத்தெரியும். ரொம்பவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்ததால், இந்தப் பயிற்சி இவளுக்கு ஏற்பட்டது. ஏழு பெண்களுக்கிடையே நடுவள் ஒருத்தி. நல்ல துணி தப்பு அறியாதபோதிலும், இவள் நோய்நொடி இல்லாமல் வளர்ந்தவள். ஓஹோ என்ற இடத்தில் வாழ்க்கைப் படாது போனாலும் சிவராமன் இவளுக்குக் கிடைத்ததோர் அரிய பாக்கியம். சிவராமனும் பரம ஏழை. அவன் குழந்தையாய் இருக்கும்போது தந்தை கண்ணை மூடிக்கொண்டார். அவன் அம்மா, உடலை ஓடாக உழைத்து அவனை ஒரு மனிதனாக்கினாள். காமாட்சியின் வீட்டாரை அவனுக்கு நன்றாகத் தெரியும். அந்த வீட்டுப் பெண்களைப் பற்றிப் புகார் எதுவும் கிடையாது. காமாட்சி அவன் கண்ணுக்குப் பிடித்திருந்தாள். வரதட்சணை வாங்காமல் சிவராமனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள்.

சிவராமனுக்கும் அவளைப்பிடித்திருந்தது. ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறான். ஆனால் பாவம் சிவராமனுடைய தாயார்; இவர்கள் நிம்மதியாக வாழ்வதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. சிவராமனுக்கு உதவி ஸ்டேஷன்மாஸ்டர் வேலை கிடைத்தது. அவளும் சிவலோகம் சென்றாள். பிள்ளையைவிடக் காமாட்சியின் பேரில்தான் அவளுக்கு ஆசையெல்லாம். காட்டுப் பெண்ணுக்கு

ஒரு கஷ்டமான வேலையும் வைக்க மாட்டான். பட்டாக வைத்துக் கொண்டு போஷித்தான். கண்டி வறண்டிருந்த ரங்கத்தின் பெண் காமு, நல்ல ரத்தம் ஏறி ரதிமாதிரி விளங்கினுள்.

நித்தியம் ஒரே மாதிரியாக வாழ்க்கையின் சகடம் சுழன்றது தம்பதிகளுக்கு. காலு மணி கூட்ஸ் சென்றதும், ஸ்டேஷன் நாற்காலியை வெளியே இழுத்துப் போட்டுக்கொண்டு சிவராமன் புங்கமரத்து நிழலில் அமருவான். காமாட்சி அவன் காலடியில் இருப்பாள். எத்தனையோ ரஸமான விஷயங்கள், கதைகள், விஞ்ஞானப் புதுமைகள், ரயில்வே உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமான வேடிக்கை வம்புகள், இதையெல்லாம் மனைவிக்கு எடுத்துச் சொல்லுவான். காமாட்சிக்கு இவையாவும் ஓர் அளவுதான் பிடிக்கும். சிவராமன் ரொம்ப நன்ருகப் பாடுவான். ஆனல் காமாட்சி அவனைப் 'பாடு' என்று எப்படிச் சொல்லுவாள்! கூச்சம் வந்து அவள் கண்களைக் கவ்விக் கொள்ளும். ஸ்டேஷன் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டே சிவராமன் என்றைக் காவது குஷால் பிறந்து அற்புதமாக ஆலாபனம் செய்து பாடுவான். இன்னிசைக்கு மயங்கி விழும் மானைப்போல் காமாட்சி, ஸ்டேஷன் அறை ஜன்னலண்டை மறைவாக நின்றுகொண்டு அது ரஸிப்பாள். உருக்கமான ராகமாயிருந்தால் அவள் கண்களில் தாரை தாரையாக நீர் வழியும். தன் சொந்தத் தாயைவிட, இறந்துபோன மாமியாரின் சோக நினைவே எழும் அவளுக்கு. 'அவள் பெற்ற பிள்ளையல்லவா இப்படி நன்ருகப் பாடுவது. அவர் என் நாயகன்' என்று பெருமிதம் அடைவாள். மலர் மலிந்த மரக்கிளையில், கிளி இரண்டு ஒன்றை யொன்று அலகால் கோதிக் கண்ணை மூடிக் கொண்டு இன்பத்தில் ஊசலாடுவது போலவே இருந்தது நம் காதலரின் போக்கும்.

சிவராமன், மனசை விட்டு எதையும் வெளியே விடாதவன். காமாட்சியிடம் அவன் காட்டிய காதல், பாலி ஆற்று மணலில் கசியும் ஊற்று போன்றது. இது வரை காமாட்சி, தனக்கு இது வேண்டும், இதன் மேல் ஆசை யென்று எப்போதுமே தன் கணவனிடம் சொன்னதே கிடையாது. அவள் இப்போது இரண்டு மாத கர்ப்பிணி. அவள் மூடி வைத்தாலும் இந்தப் பரம ரகசியம், சிவராமன் கண்ணுக்குப் புலப்படாமல் போகவில்லை. அவள் அங்கங்களில் பூரிப்பும், மேனியில் பசலையும் அந்த ரகசியத்தை வெளிப் படுத்தி விட்டன. விடுமுறை எடுக்காமலே வீணுகப் போகிறது. சிவராமனுக்கு என்னவோ தோன்றியது. காமாட்சியை இந்தச் சமயத்தில் திருப்தி செய்ய ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவனை உறுத்தவே, இரண்டு நாளுக்கு 'லீவ்' போட்டான். பட்டணத்தில் ஏதோ முக்கியமான வேலை யென்று காமுவிடம் சாக்கு சொல்லி விட்டு, ரயில் ஏறி விட்டான். காமு தனியாக இருப்பாளே என்ற பயமே இல்லை அவனுக்கு. நாட்டுப் புறத்துப் பெண்களில் அவளுக்கு எத்தனையோ பேர் தெரியும். யாரையாவது துணைக்கு வைத்துக் கொள்வாளென்ற தைரியம். சாயங்காலம் பாஸஞ்சரில் ஏறி விட்டான். கையில் கொஞ்சம் பணம் சேரவே அந்தத் துணியில் காலு பவுனில் கைக்கு இரண்டு வளையல்கள் புது மோஸ்தரில் வாங்கினுன். 'பூ' என்ருல் ஊதிப் பறக்கும் வாயில் வகையில் அழகிய பூப் போட்ட ஒரு புடவையும் வாங்கினுன். இரண்டு ரூபாய்க்குக் கொஞ்சம் காபேஜ் நிறுக காய் கறி முதலியவைகளையும் பழ வகைகளையும் வாங்கிக் கொண்டான். ஒரு நாள் முன்னதாகவே திரும்பி விட்டான்.



அவன் காலைப் பாசஞ்சருக்கு வருவானென்று காமாட்சி எதிர் பார்க்க வில்லை. வீட்டுக் காரியங்களை வழக்கம்போல் கவனிக் கச் சென்ருள். ஸ்டேஷனில் வண்டி கிளம்ப மணியும் அடித் தது. 'குப் குப்' என்று ரயில் வண்டியும் நகர்ந்தது. கார்டு வாயில் பிகிலை வைத்துக் கொண்டு, பச்சைக் கொடியை அசைத்தான். இது தினம் தினம் அவள் பார்க்கும் காட்சி தானே! கணவனுடைய துணிக் கெல்லாம் சோப்புப் போட்டாள். அதைத் துவைத்தால் தும்பைப் பூ மாதிரி. வெய்யில்

காயும் இடத்தில் விரித்து உலர்த்தினாள். பிரத்தியேகமான குளிக்கும் அறை கிடையாது; மூங்கில் தட்டி வளைத்த மறைவு இந்தக் காரியத்துக்கு உதவியது. ஈரப் புடவையுடன் காமாட்சி குளிக்கச் சென்றாள். அப்போது சிவராமன் பையும் கையுமாக உள்ளே நுழைந்தான். 'காமு! காமு!' என்று கூப்பிட்டான். தட்டி மறைவிலிருந்து "இதோ வருகிறேன். இந்த வண்டிக்கா வந்தீர்கள்" என்றாள் குளித்துக் கொண்டே.

"உனக்குப் பிடித்தமான வஸ்து கொண்டு வந்திருக்கிறேன். சீக்கிரம் வந்தால் போச்சு..." என்றான் சிவராமன்.

இன்னும் புடவையைக் கூட நன்றாக உடம்பில் சுற்றிக் கொள்ளவில்லை அவள். ஓடி வந்தாள். தலை மயிர் முகம் எல்லாம் ஈரம். உள்ளே நுழைந்தாள். ரவிக்கை கூட இல்லை. உடம்பு தெரியப் போகிறதே யென்று ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டு நின்றாள்.

"இப்படி வெளிச்சம் இருக்கிற பக்கமாக வாயேன், அப்படி ஏன் நாணிக் கோணிக் கொள்கிறாய். வா, கையை நீட்டு" என்றான். ஒரு கையால் மார்பிடையே உள்ள புடவைச் சுற்றை விடாமலே, பிடித்துக் கொண்டு மறு கையை நீட்டினாள். சின்ன அட்டைப் பெட்டியைத் திறந்தான் சிவராமன்.

சிகப்பு கிளேஸ் காகிதத்தில் சுற்றியிருந்த தங்க வளையலை எடுத்து ஒரு கையை மெல்ல மாட்டினான். "அந்தக் கை" என்றான். காமு கையை மாற்றிக் கொள்வதற்குள், சிவராமனே அதைத் தொட்டு இழுத்து மற்ற ஜோடி வளையலையும் போட்டான். "திருப்தியா?" என்றான்.

"நான் கேட்டேனா என்ன?" என்றாள் காமு.

"எனக்குத் தெரியாதா, நீ தாயாகப் போகிறாய் என்று!" என்றான் சிவராமன்.

காமு ஒரு துள்ளுத் துள்ளிக் கொண்டு சமையலறைக்குள் விர்ரெனப் பாய்ந்தாள். "காமாட்சி, அந்தப் பையில் புதுப் புடவை வைத்திருக்கிறேன். அதை எடுத்துக் கட்டிக்கொள்" என்றான்.

காமு உடம்பில் நன்றாக சின்னத் துணியைச் சுற்றிக்கொண்டே அதை வெளியே எடுத்தாள். அந்த மாதிரி வாயில் சேலையை அவள் பார்த்ததே இல்லை. "எத்தனை கஜம்!" என்றாள் காமு. "எட்டு கஜம் உனக்குப் போதாதா!" என்றான் சிவராமன். "ஏழு கஜமே வேண்டாம். மீதி இருந்தால் என்ன, இரண்டு ரவிக்கைகளுக்கு ஆயிற்று" என்றான். சேலையிலுள்ள பூவைத் தடவித் தடவிப் பார்த்தாள். 'எப்படி இந்த மாதிரி பார்த்து வாங்கினீர்கள்...? புருஷர்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரிகிறது!" என்றாள் காமு.

"நான் வாங்கின கடையில் இதேமாதிரி ஒரு புடவை ஒரு காலேஜ் பெண் பொறுக்கினாள். அதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். பிறகு தான் வாங்கினேன்" என்று சொன்னான்.



புதுச்சேலையை அணிந்துகொண்டு, காமு வந்து நின்றாள். சற்று நேரம் அவள் சிந்தனை பெரியவர்கள்மீது சென்றது. ஆனால் மாமனார், மாமியார் இவர்களுடைய போட்டோ ஒன்றுகூட வீட்டில் இல்லை. தனக்குச் சந்தோஷம் தர வந்த தெய்வம் எதிரிலேயே நிற்கும்போது அப்புறமென்ன! கணவனை வணங்கினாள். "ஐயோ பிரமாதம். இந்தப் புடவையும், வளையலும் உனக்கு வாங்கித் தந்து விட்டேனே...அடிக்கடி குனிந்து வேலை செய்யாதே காமு" என்றான் சிவராமன்.

சிவராமன் குளிப்பதற்குத் துண்டை எடுத்துக் கொண்டு ஏரிக்குப் போய் விட்டான். போர்ட்டர் கந்தசாமியைக் கூப்பிட்டாள் காமாட்சி. அவனிடம் ஒரு ரூபாய் தந்து நல்ல புத்துருக்கு நெய்யாகப் பார்த்து வாங்கிவரச் சொன்னாள். சிவராமனுக்குக் காரெட் கிழங்குகள் என்றால் பிடிக்கும். அதுவும் 'காரெட்' ஹல்வா என்றால் அவ்வளவு ஆசை. ஒருதரம் மாமியார் பண்ணிப் போட்டிருக்கிறாள். அன்று அந்த ஹல்வா கிளறத்தான் நெய் வாங்கிவரச் சொன்னது. இது அவள் சிவராமனுக்குத் தெரியாமல் நடத்தும் சில்விஷமம். அவனைத் தூக்கிப் போகும்படி ஏதாவது செய்ய வேண்டுமென்பது அவள் அவா.

சிவராமன் ரசம் சாதம் சாப்பிட்டவுடன், அவன் இலையில் ஹல்வா விழவே, நிமிர்ந்து காமுவைப் பார்த்தான். "எப்போ செய்தாய்!" என்றான் வியப்பினால் கண்கள் விரிய. "அம்மா, பண்ணு

வான்,..." என்றதும் விரலால் எடுத்து அதை நாக்கில் நக்கி 'கொட்டை விட்டுக் கொண்டே, "ரொம்ப ஜோர், திராக்ஷைப் பழம் கூடப் போட்டிருக்கிறாயா!" என்றான். திராக்ஷைப் பழம் உள்ள பாகமாக அல்வாவை எடுத்து இன்னும் ஒரு கொஞ்சம் அவன் இலையில் இட்டாள் காமு. "நான் கைக்கு நகை போட்டேன் என்பதற்கு இது பரிசா காமு!" என்றான் சிவராமன். அப்போது காமாட்சியின் முகத்தில் படர்ந்த மலர்ச்சியை, சங்க காலத்து ஒரு புலவன்தான் வர்ணித்திருக்கிறான்—'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்' என்ற பாட்டில்.

சாயங்காலம் சிவராமன், வந்திருக்கும் ஆர்டர் 'பினிஷ்' செய்துவிட்டு, ஸ்டேஷன் வேலையைக் கவனிக்கச் சென்றான். அன்று முழு நிலா. ஆனந்தம் குமிழ்த்தெழுந்தது சிவராமனுக்கு. இரவெல்லாம் பிரவாகம்போல் ராகங்கள் அவன் தொண்டையிலிருந்து எழுந்து காமாட்சிக்கு அமுதூறலைத் தந்தது. சிலுங்கென்று வளையல் ஓசை கேட்டது. ராக ஆலாபனம் நூறு சுக்கலாக உடைந்தது. "மணி பத்தாகிறதே......இரண்டாவது மெயில் கூடப் போய் விட்டதே, படுத்துக் கொள்ள வரவில்லையா!" என்றாள் காமு மதுரக் குரலுடன்.

* * *

இரண்டு நாள் கழிந்தது. அன்று நாலு மணி 'கூட்ஸ்' வண்டி ஒன்று ஸ்டேஷனில் வந்து நின்றது. கூட்ஸுக்குப் பின்னால் ஒரு 'ஆபீஸர் ஸலூன்' சேர்த்திருந்தது. அந்த ஸலூனிலிருந்து சூட்டுக் கோட்டெல்லாம் அணிந்து கொண்டு ஒரு பெரிய ரயில்வே அதிகாரி இறங்கினார். நேராக ஸ்டேஷன் அறைக்குள் நுழைந்தார். சிவராமன் டிக்கட்டு எண்களைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தான். காமாட்சி வீட்டு வாசலில் உள்ள சின்னஞ்சிறு திண்ணையில் உட்கார்ந்து முல்லைப் பூ தொடுத்துக் கொண்டிருந்தாள். 'ஸலூன்' வண்டியிலிருந்து ஊர்வசியைப் பழிக்கும் எழிலுடன் ஒரு யுவதி இறங்கினாள். பிளாட்பாரம் வழியாக இறங்கிக் காமுவை நோக்கி நடந்தாள். காலில் அதி நாகரிகத்தைக் காட்டும் உயரமான பாதம் பொதிந்த பூட்ஸ் அணிந்திருந்தாள். பால் போன்ற மேனி போகும் இடம் எல்லாம் ஒளியைப் பரப்புவது போல் இருந்தது அவள் கண்கள். 'டக் டக்'கென்று மெதுவான பூட்ஸ் சத்தம் கேட்கவே காமாட்சி தலையைத் தூக்கினாள். அவள் கையில் முல்லைச் சரம் தொங்கிக் கொண்டிருந்தது. யுவதி அவளைப் பார்த்து முல்லை முறுவல் செய்தாள்.

காமாட்சியின் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். "இதுதான் உங்கள் இடமா. இந்த ஸ்டேஷனுக்கும் சரியான பெயர். நிம்மதியாக இருக்கிறீர்கள். குழந்தை குட்டிகள் உண்டா!" என்று விசாரித்தாள். காமாட்சி தலை அசைத்தாள். "எனக்கும் பூ தொடுப்பதென்றால் ஆசை......" என்று இழுத்தாள் வந்தவள். "உங்கள் கணவருக்குக் குறைந்த சம்பளம் போலிருக்கு. இருந்தால் என்ன. திருப்தியாகக் காலம் கழிக்கிறீர்கள். இங்கே கிணற்று ஜலந்தானா? குடிப்பதற்கு நன்றாக இருக்குமா!" என்று அவள் கேட்டதும் உள்ளே சென்று வெள்ளி டம்ளரில் பானைத் தண்ணீர் எடுத்து வரும்போது, அந்த யுவதி சமையலறைக்கே வந்து விட்டாள்.

"பயப்படாதே! நாங்களும் ஆசாரமுள்ளவர்கள்" என்றாள். தண்ணீரை அருந்தினாள். "அம்மாமா" என்று பெருமூச்சு விட்டாள்.

காமாட்சியின் கண் வந்தவளை கேசாதிபாதாந்தம் வரை பார்த்துக் கொண்டது. அந்த யுவதி அணிந்திருக்கும் சேலையைப்போல் அவள் பார்த்ததே இல்லை. கையில் குட்டித் தங்கக் கடிகாரம் அணிந்து கொண்டிருந்தாள். கழுத்தில் மெல்லிய வைரச் சங்கிலி. "சின்ன இடமாயிருந்தாலும், சௌகரியமானதுள்ள குட்டிக் குடித்தனமானாலும் நீங்கள் சொர்க்க வாழ்க்கை நடத்துகிறீர்கள்" என்றதும் யுவதியின் முகத்தில் நிழல் ஒன்று படிந்தது. காமாட்சிக்குப் பேசத் தெரியவில்லை. வந்தவளின் அழகும், ஐசுவரியத்தின் பகட்டும், அவளைச் செயல் இல்லாமல் செய்து விட்டது.

யுவதி கைக்கடியாரத்தைப் பார்த்தாள். "ஐயோ. மணி ஐந்து ஆகிவிட்டதே. வண்டி புறப்பட்டு விடும். நான் போய் வருகிறேன். என்னை ஞாபகம் இருக்கட்டும். உன்னைப்போல் இருக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று எனக்குப் பொறாமையாய் இருக்கிறது. வரட்டுமா!" என்று கேட்டு அவள் திரும்பும்போது. காமு அவளை அணுகி, "என் நினைவாக இருக்கட்டும் இந்த முல்லைப்பூ" என்று சொல்லி முடிப்பதற்குள் அவளை உலகத்திலுள்ள லஜ்ஜை யெல்லாம் சுற்றிக் கொண்டது.

அந்த யுவதி, சந்தோஷத்துடன் அதை வாங்கித் தன் தலையில் சூடிக் கொண்டாள். சரசரவென்று நடந்துபோய் ஸலூனில் ஏறிக் கொண்டாள். அங்கே இருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டே முகத்தில் 'பவுடரை'ப் பூசிக் கொண்டாள். முல்லைப் பூச்சரத்தைச் சரியாகச் சூடிக் கொண்டோமா என்று பின்புறம் திரும்பிக் கண்ணாடியில் ஒருதரம் நோக்கினாள். பளிச்சென்று மாலை வெய்யில் அவள் பளபளக்கும் சேலைமீது படிந்தது. இதற்குள் வண்டியும் நகர்ந்தது. யுவதி ஒருமுறை ஸலூன் ஜன்னலிலிருந்து தலையை வெளியே நீட்டிக் காமுவைக் கவனித்தாள். காமாட்சியும் அவளையே பார்த்தாள். துரை வந்து அதில் ஏறிக்கொண்டார். வண்டியும் விலகி ஸ்டேஷனும் வெறிச்சென்றாகியது.

சிவராமன் ஓடி வந்து காமாட்சியிடம் "காமாட்சி, இன்னிக்கு ஒரு அதிசயம். பெரிய ஆபீஸர் வி. எம். ஏ வந்திருந்தார். நல்ல காலம் என் வேலையைச் சுத்தமாகச் செய்து வைத்திருந்தேன். எதிர்பாராமல் திடீரென்று வருவார் என்று நான் நினைக்கவே இல்லை. என்னைப் பற்றி நல்ல அபிப்பிராயமாக எழுதுவார் என்று நினைக்கிறேன். இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்" என்றான்.

"துரை என்கிறீர்களே, அவருடைய ஸம்ஸாரம் என்னைப் போலவே நல்ல தமிழ்ப் பெண். நம் வீட்டுக்கு வந்து எல்லாவற்றையும் பார்த்தாள். இந்த இடம் ரொம்ப நிம்மதியான இடமென்று சொன்னாள். அவளை நீங்கள் பார்த்தீர்களா!... எந்த மாதிரி புடவை அவள் உடம்பில்!"

"நம் வீட்டுக்கா வந்தாள் அவள்!" சிவராமன் முகத்தில் ஒரே ஆச்சரியத்தின் குறி.

"வண்டி போய் எத்தனையோ நாழிகை ஆயிற்று. அந்த யுவதி. அவள் உடுத்தியிருந்த அற்புதச் சேலை, வெயிலில் அவள் கை பளிச்சென்று மின்னிய காட்சி யாவும் காமாட்சியின் கண்ணை விட்டு அகலவே இல்லை. அந்த ஐசுவரியத்திற்கு எதிரே இவள் ஐசுவரியம் மங்கலாகத் தென்பட்டது.

ஆனால் காமாட்சிக்கு மனநிம்மதி உண்மையான சந்தோஷம் கணவனின் பரிபூரண அன்பு எல்லாம் கிடைத்திருக்கிறதே! அதுதான் நிரந்தரச் செல்வம், என்றும் அழியாச் செல்வம்.



ROBINSON'S
PEARL
BARLEY
சிறந்தது
சகல உபயோகங்களுக்கும்
கஞ்சி, கூழ், பாயசம், கறி, பார்லித் தண்ணீர் இவை களுக்கு புதிய ருசிகரமான சத்துள்ள பெர்ல் பார்லி மிகச் சிறந்தது.
இப்போது எங்கும் கிடைக்கும்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
தபால் பெட்டி 664, கல்கத்தா-1.



10 Saridon
BRAND ANALGESIC TABLETS
ஸாரிடன்
ரோஷ்
ஸாரிடன்
உதவி புரியும்

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

37. மண்ணீரலின் மகாத்மியம்

மண்ணீரல் என்று ஒன்று நம் உடலில் இருக்கிறது என்பதை அனேகர் மறந்து விடுகின்றனர். மண்ணீரல் என்பது என்ன? அதன் செயலாற்றும் திறன் என்ன? அது எங்கே யிருக்கிறது? எவ்வாறு இருக்கிறது என்பதை அனேகர் சிந்தித்துக் கூடப் பார்ப்பதில்லை. ஆனால் இக் காலத்தில் அநேகர் மண்ணீரல் கோளாறுகளினால் நலிகின்றனர் என்று சொன்னால் மிகையாகாது. அத்தனைக்கும் மண்ணீரலானது எளிதில் நோய் கொள்ளக் கூடிய தன்மை வாய்ந்ததல்ல. மிகவும் பத்திரமான இடத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது.

மண்ணீரலை நமது உடலின் உக்கிராண அறை என்று சொல்லலாம். நாம் சாப்பிடும் உணவுச் சத்து குடல்களிலிருந்து உறிஞ்சப் பட்டதும் ரத்தமாக மாறி இங்கு வருகிறது. இங்கு பல விதப் பொருள்களாகப் பிரிக்கப் பட்டு சேகரிக்கப் படுகிறது. அமினோ ஆஸிட்டுகளாகவும், சர்க்கரைப் பொருளாகவும், மாவுப் பொருளாகவும், கொழுப்பாகவும் இங்கு பிரிக்கப் பட்டு எப்பொழுது, எது தேவையோ அதை அவ்வப்போது தந்து உதவுதலே இதன் வேலையாகும். மற்றும் கல்லீரலில் வைடமின்கள், தாதுப் பொருள்கள் புஷ்டியைத் தரும் பொருள்கள் இவைகளெல்லாம் சேகரிக்கப்படுகின்றன. இவைகளெல்லாம் உடலுக்குக் குறையும்போது கொடுத்து உதவுகிறது. இத்தனை சேவைகளுடன் மற்றும் ஒரு முக்கியமான சேவையும் புரிகிறது. நமது உடலில் சதா ஆக்க வேலையும் அழிவு வேலைகளும் நடக்கின்றன. அழிவு வேலைகளில் ஏற்படும் கழிவுகளை வெளியேற்றவும் மண்ணீரல் சிறிது உதவி செய்கிறது. இரத்தத்திலுள்ள அணுக்களுக்குத் தீர்க்க ஆயுள் கிடையாது. அதன் ஓட்டம் தீர்ந்ததும் அது இறந்து விடும். இந்த இறந்த ரத்த அணுக்களை வெளியேற்றும் பணியிலும் பெரும் பங்கு மண்ணீரலுக்கு உண்டு. மண்ணீரலிலிருந்து வரும் சில ரசாயனச் சத்துக்களைக் கல்லீரல் எடுத்துக் கொண்டு, அதைப் பித்த நீராக மாற்றி உணவை ஜீரணமாக்கக் குடலுக்குள் பாய்ச்சுகிறது. மற்றும் இதைப் போன்ற மகா முக்கியமான நாற்பது வித வேலைகளை மண்ணீரல் மேற்கொண்டு செய்து வருகிறது என்று இது வரை கண்டு பிடித்திருக்கின்றனர்.

நமது வீட்டுப் பண்டகசாலையை நாம் எவ்வளவு பத்திரமாய் ஒழுங்காய்ப் பாதுகாத்து வைத்திருக்கிறோமோ அவ்வளவு பத்திரமாய் உடலின் பண்டகசாலையான மண்ணீரலும் பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருக்கிறது. நுரை ஈரல்களுக்குக் கீழே சற்று வலது புறமாக ஒதுங்கி இருக்கிறது. அதில் இரண்டு அறைகள் இருக்கின்றன. பெரிய அறை வலது பக்கமாகவும், சிறிய அறை இடது பக்கமாகவும் இருக்கிறது. இந்தச் சேமிப்பு அறைகளை எவ்வளவுக் கெவ்வளவு சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கும் நமது உடல் ஆரோக்கியமாகவும் நோய் கொள்ளாமலும் இருக்கும். அந்த அறைகள் எதனாலாவது நோய் கொண்டால் உடலின் ஆரோக்கியம் அடியோடு பாதிக்கும். நமது வீடுகளிலும் அம்மாதிரி தானே நடக்கிறது! உக்கிராண அறையில் எல்லாச் சாமான்களும் நிறைந்திருந்தால் அன்றாடம் வேண்டிய சாமான்களை எடுத்து உபயோகிக்கலாம். உக்கிராண அறையில் சாமான்கள் சரிவர இல்லாமலிருந்தால் வீட்டிலும் வறுமையின் சின்னங்கள் தோற்றமளிக்கும். அதைப் போலவே, மண்ணீரலும் சக்திகளெல்லாம் நிறைந்ததாக இருந்தால் தான் உடலும் ஆரோக்கியமாய் இருக்க முடியும். வேண்டிய சத்துக்கள் சேகரிக்க முடியாமலும், விநியோகிக்க முடியாமலும் இருந்தால் உடலின் ஆரோக்கியத்தில் வறுமையின் சின்னங்கள் தோற்றமளிக்கும். அதைத் தவிர, உக்கிராண சாமான்கள் எப்படி எலிகளினால் சேதமேற்படாமலும் வண்டு, புழு பூச்சிகளினால் கெட்டு விடாமலும் அவ்வப்போது சுத்தமாக்கப்பட்டு வெய்யிலில் உலர்த்திக் காப்பாற்றுகிறோமோ அவ்வாறு மண்ணீரலிலுள்ள சத்து கெடாமலும் இருக்கவும், அதைச் சரிவர உபயோகப்படுத்தவும் நோய் எனும் எலி புகாமலிருக்கவும் மற்றும் காமாலை, புற்று நோய், வீக்கம், பலவீனம் முதலிய வண்டுகள், புழு பூச்சிகளினால் தொந்தரவு ஏற்படாமல் இருக்கவும் பார்த்துக் கொள்ளவேண்டும். உக்கிராண அறைகளிலிருந்து சாமான்கள் வெளியில் எடுத்துச் சுத்தப் படுத்துவதுபோல், இதை வெளியில் எடுத்துச் சுத்தப்படுத்த முடியாது. வீட்டுச் சாமான்கள் கெட்டுவிட்டால் அதைத் தூர எறிந்துவிட்டு வேறு வாங்கிவிடலாம். மண்ணீரலிலிருந்து எந்தச் சாமானை எந்தப் பக்கம் என்று கழிக்க முடியும்? அப்படிக் கழிக்க வேண்டுமானால் அது அவனுடைய ஆயுளோடு முடியுமே தவிர வேறு வழிகளே கிடையாது.

மண்ணீரல் பலவீனப்பட்டுச் சரிவர வேலை செய்யாவிட்டாலும் சாதாரணமாக ஆகும் ஜீரணம் ஆகாது; பசிக்காது. ரத்த சோகை ஏற்படும். ஆயாசம், பலவீனம், ஏற்படும். மற்றும் எது வேண்டுமானாலும் ஏற்படும். சிலருக்கு இருதயக் கோளாறினாலும், ரத்தோட்டக் கோளாறினாலும் மண்ணீரல் வீங்கி விடும். அப்படி வீங்கினால் நுரையீரலில் வந்து முட்டும். மூச்சை சரிவர இழுத்து விட முடியாது. நுரை ஈரல் தாராளமாகக் காற்று இழுத்து விரிய இடமில்லாமல் போவதால் மார்பு வலிக்கும்; வலது பக்கம் அதிகம் வலிக்கும். மண்ணீரலும் வலிக்கும். சிலருக்கு அசையக்கூட முடியாது. எந்த வலியை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்ளலாம். நன்றாய் மூச்சு வாங்கி விடக் கூட முடியவில்லை யென்றால் எவ்வளவு சித்திரவதையாய் இருக்கும்! இதைவிட எமவாதனை வேறு வேண்டுமா? சிலருக்குச் சிறிது சிரமப் பட்டு வேலை செய்தாலும் மண்ணீரல் வலிக்கும்.

மஞ்சள் காமாலை நோயினாலும் மண்ணீரல் பாதிக்கப்படும். மஞ்சள் காமாலையைப் பற்றி முன் அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஆரம்பத்தில் கவனித்துச் சுகப்படுத்தினால் நல்லது. முற்ற விட்டால் அது மண்ணீரலையும் பாதிக்கும். உடல் சிவப்பு நிறம் இழந்து பழுப்பு நிறமாய்விடும். கண்களின் வெள்ளைக் கரு லேசான மஞ்சள் நிறமாய்விடும். பார்க்குமிடமெங்கிலும் பசுமையான தோற்றமளிக்கும்; எல்லாமுமே மஞ்சள் நிறமாய்த் தென்படும். இவைகளெல்

வரம் பித்த நீர் நோய்க் குடலுக்குள் சேராமல் ரத்தத்தில் சேர்க்கப்படுவதனால் உண்டாகிறது.

இம்மாதிரி மற்றும் பல வியாதிகளுக் கெல்லாம் மண்ணீரல் காரணமாய் இருக்கிறது என்பதை அறிந்து சில காலமாகவே அதைப் பற்றி அதிக கவனம் செலுத்துகின்றனர். மண்ணீரலில் உண்டாகும் வியாதிகளுக்குத் தக்க மருந்துகளும் பல இருக்கின்றன. அனேகமாய் அம் மருந்துக ளெல்லாம் பிறசில ரசாயனச் சேர்க்கையுடனிருந்தாலும் அனேகமாய் மண்ணீரல் சத்துக்களைக் கொண்டதாய்த்தான் இருக்கின்றன. இன்று இந்த மண்ணீரல் சத்து உபயோகப்படாத மருந்தே யில்லை எனலாம். காட்லிவர் ஆயில், ஷார்க் லிவர் ஆயில் முதலிய மீன் எண்ணெய்களை உபயோகிக்காத குடும்பமே இல்லை எனலாம். சைவர்கள் முதல் எல்லோரும் இதைச் சர்வ சாதாரணமாய்ச் சாப்பிடுகின்றனர். மற்றும் டானிக்குகள், மாத்திரைகள், ஊசிகள் மூலமாய் இதை உபயோகிக்கின்றனர். மற்றும் சில மண்ணீரல் நோய்க்கு ஆளாவது சிலருக்கு மண்ணீரலே வேலை செய்யாமல் நின்று விடுகிறதாம். அப்பேர்ப்பட்டவர்களுக்கும், மண்ணீரல் வேலை செய்ய மறுத்தவர்களுக்கும் நேராகவே ஆட்டின் மண்ணீரலையே சாப்பிடும்படியாகவும் சூப் வைத்துச் சாப்பிடும் படியாகவும் டாக்டர்கள் சொல்லுகின்றனர். ரத்த சோகை கொண்ட தாய்மார்களுக்கும் கர்ப்ப ஸ்திரீகளுக்கும் மண்ணீரல் சத்தை ஊசி மூலமாகச் செலுத்துவது தற்காலத்தில் சர்வ சகஜமாய் இருக்கிறது. சிறு குழந்தைகள் புஷ்டியாக எடையோடு நன்கு வளர மண்ணீரலிலிருந்து வடித்த சத்துக்கள் பல கணக்கில்லாமல் வழங்கப்படுகின்றன. எங்கு பார்த்தாலும், இன்று இந்த மண்ணீரல் சத்து மயமாகவே காணப்படுகின்றன.

இதற்காக நடக்கும் கொலைகள் எத்தனை! முயற்சிகள் எத்தனை! இது ஒரு தொழிலாகவும் பெருகி விட்டது நாட்டில். காட் என்ற மீனின் ஈரல் மிகப் பலம் பொருந்தியதாம். அதைப் போல சுறா மீனின் ஈரலில் சத்து அதிகம் இருக்கிறதாம். மீன்களை வேட்டையாடிப் பிடித்து இதற்கென்றே தொழிற்சாலைகள் பல ஏற்படுத்திப் பலவித மண்ணீரல் மருந்துகளைத் தயார் செய்கின்றனர். இத்தனையும் போதாதென்று மிருகங்களிலிருந்தும் ஆடு மாடுகளிலிருந்தும் தயார் செய்கின்றனர். ஆட்டை விட மாட்டிலிருந்து நிறைய சத்து கிடைக்கின்றதென்று மேல் நாடுகளில் மாட்டின் மண்ணீரலில் இருந்துதான் மருந்துகளைத் தயார்செய்து அனுப்புகின்றனர். நமது நாட்டில் உருத்தெரியாமல் அழகான புட்டிகளில் அடைத்து வந்ததும் அதை நாம் உணவுடன் கலந்து உண்கின்றோம். இவைகளை எல்லாம் பார்க்கும்போது நாம் இனி இந்த மண்ணீரல் மருந்து இல்லாமல் ஆரோக்கியமாக வாழவே முடியாது போலும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இத்தனையும் எத்தனை காலமாக நமக்குப் பழக்கம்! தலை முறை தலை முறைகளாக நாம் இப்படித்தான் மண்ணீரலைச் சாப்பிட்டு வளர்ந்தோமா! நமது பெரியோர்கள் எல்லாம் இந்த லிவர் எக்ஸ்ட்ராக்ட் இல்லாமல் வாழவில்லையா! அவர்கள் சிறு குழந்தைகளாயிருக்கும் போது இந்தக் காட்லிவர் ஆயில்தான் சாப்பிட்டு வளர்ந்தார்களா! அதன் நாமரூபம் கூட அவர்களுக்குத் தெரியாதே! அவர்கள் நம்மைவிட ஆரோக்கியமாக வல்லவரா யிருந்திருக்கிறார்கள்! பின் ஏன் நாம் இத்தனை உபயோகித்தும் இப்படி நலிகிறோம்! ஆம், நாம் இயற்கை வழி விடுத்துச் செயற்கை வழி புகுந்ததாலேயே இப்படி நலிகின்றோம். நமது முன்னோர் வைத்துச் சென்ற யோகக்கலையை மறந்தோம். செயற்கை வழியாகிய மருந்துகளைத் துணை கொண்டோம். துரும்பைத் துணைகொண்டு வாழ்க்கைச் சாகரத்தைக் கடந்துவிடத் திட்டமிட்டு விட்டோம். துரும்பு துணை செய்யுமா! நம்மை யெல்லாம் வாழ்க்கைச் சாகரத்தில் இன்பக் கரை சேர்க்க யோக ஆசனப் படகு வந்துவிட்டது. வாருங்கள் எல்லோரும் யோகாசனப் படகேறி இன்பக் கரை சேர்ந்து சுகமாய் வாழ்வோம்.

அர்த்த மத்ஸ்யேந்திராசனம் இயற்கை வழியில் அழுக்கப்பட்டு மண்ணீரலை இளக்குவிக்கிறது. முதுகுத் திருகப் படுவதால் அதனைச் சார்ந்த நரம்புகள், சதை நாளங்கள் எல்லாம் புத்துயிர் பெறுகின்றன. இத்துடன் சர்வாங்க, சிரசாசனமும் செய்தால் தைராய்ட், பிட்யூட்டரி கோளங்கள் புத்துயிர் பெறுகிறது. அதன் ரசங்களினால் மண்ணீரல் மறு ஜென்மம் எடுக்கிறது. அதனால் மண்ணீரல் சம்பந்தமான சகல நோய்களும் மறைகின்றன. (தொடரும்)




புதிய கௌன்ஸிலர்

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் காங்கிரஸ் ஜய பேரிகை கொட்டி முழங்கியிருக்கிறது. சமீபத்தில் நடந்த சென்னை நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் பெருவாரியாக வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதில் வட சென்னையில் காங்கிரஸ் அடைந்த வெற்றியை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். வடசென்னை, காங்கிரஸ் எதிரிகளின் கோட்டை என்று சொல்லி வந்தனர். அது வெறும் பொய்ப் பிரசாரம் என்பதை நகரசபைத் தேர்தலில் வட சென்னை மக்கள் நிரூபித்து விட்டனர். வட சென்னையில்—ஒன்பதாவது வார்டு, ஏழுகிணறு தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற ஸ்ரீ ஜி. உமாபதி அவர்களுக்குத் தங்கள் வாக்குகளை அளித்துத் தேர்ந்தெடுத் திருக்கின்றனர். வெற்றி பெற்ற ஸ்ரீ ஜி. உமாபதி சிறந்த தேச பக்தர். ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த இளைஞர். அவர் தமக்கு வாக்களித்த வடசென்னை மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்றி வருவார் என்று எதிர்பார்க்கிறோம். காங்கிரஸுக்கு வெற்றி அளித்த வட சென்னைப் பொது மக்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.



CBG/12R
அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் - நாள் முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பளவென்று
ஜொலிக்கும் புதுமைக்கு
காஷ்மீர் புக்கே டால்கம்
பவுடரை உங்கள் மேல் தாரா
ளமாகத் தூவுங்கள். அது அதிக
க்கசிவை உறிஞ்சுகிறது . . . எரிச்சலையும் அறிப்பை
யும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக் குளிமை
யுடனும் இனிய வாசனையுடனும், நாள்முழுவதும்
புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மாணிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806லிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்குப் பெயர்போனது.



SISTA'S—J—276 A—TAM.

தாய்ப்பால் மறக்கும் சமயம் மிகுந்த கவனிப்பு அவசியம்

உங்கள் குழந்தையின் ஜீவியகால ஆரோக்யம் அது தன் சிறுவயதில் அடையும் பராமரிப்பை பொறுத்துள்ளது. அவ்வயதிலேயே கொடுமையான ஈரல், குலைநோய் ஆரம்பிக்கலாம். உடனே கவனித்து தக்க சிகிச்சை செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது. கவனிக்காவிடில் குழந்தை நீண்டகால அவஸ்தைக்கு ஆளாகிவிடலாம்.

ஜம்பியின் "லிவர்க்யூர்" குழந்தைகளின் ஈரல் குலைநோய்களுக்கு தகுந்த பாதுகாப்பு. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான குழந்தைகளை இவ்வியாதியினின்று மீட்டு ஆரோக்கியத்தை அளித்து வருகின்றது.

ஜம்பி வெங்கட்டரமணய்யா & ஸன்ஸ்
மைலாப்பூர் — மதராஸ்-4.

பிராஞ்சுகள் :

பெரியகடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி ; பெரிய தெரு, கும்பகோணம் ; ஆர்காட ஸ்ரீனிவாசாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

சைகிள்களும், தையல் மெஷின்களும்

தவணைச் சலுகையில்

○●○

மாதம் ரூ. 10/- விதமே மட்டும் தவணையில் செலுத்தி பிலிப்ஸ் சைகிள்களும், உஷா தையல் மிஷின்களும் தற்சமயம் நீங்கள் வாங்கலாம். இந்த நல்ல சமயத்தை உபயோகித்துக்கொண்டு இன்றே உங்கள் ஆர்டர்களை அனுப்பி வையுங்கள்.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும்.

○●○

PHILIP TRADING CO. (India)

QUEEN'S ROAD, DELHI - 6

அவள் பாக்கியசாலி

வசு



தீபாவளிப் பண்டிகை வருவதற்கு இன்னும் இருபது நாட்கள் இருந்தன. அப்பொழுதுதான் அனந்த கிருஷ்ணனின் மாமனார் ராமசாமிக்குச் சஷ்டி அப்த பூர்த்தி நடக்க ஏற்பாடாகிக் கொண்டு வந்தது. மதுரையிலிருந்த ராமசாமி சென்னையில் உத்தியோகத்திலிருந்த அவர் மாப்பிள்ளை அனந்த கிருஷ்ணனுக்கு அவன் ஆபீஸ் விலாசத்துக்கு ஒரு அழைப்புக் கடிதம் அனுப்பி வைத்தார். அவர் பெண் பத்மாவுக்கும் விவரமாகக் கடிதம் எழுதியிருந்தார்.

கடிதத்தை ஆவலுடன் பிரித்து வாசித்தாள் பத்மா. அந்தக் கடிதத்தில் ராமசாமி அவர் சஷ்டியப்த பூர்த்திக்கு மாப்பிள்ளை அனந்த கிருஷ்ணனும் அவளும் ஒரு வாரத்துக்கு முன்பே புறப்பட்டு வந்துவிட வேண்டுமென்றும், அதோடு பத்மாவின் தலை தீபாவளியையும் அங்கே கொண்டாடி விட்டு சென்னைக்கு அவர்கள் இருவரும் போகலாமென்றும் எழுதியிருந்தார். மாப்பிள்ளை அனந்த கிருஷ்ணனுக்குத் தனியாக அழைப்பு அனுப்பியிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். கடிதத்தை வாசித்து முடித்ததும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

ஆமாம். அனந்த கிருஷ்ணன் ஒரு மாதிரியான ஆசாமி. முரண்டும் சுபாவம் அவனுக்கு இயற்கை. எதற்கெடுத்தாலும் அவன் மனம் போன போக்கிலேயே தான் போய்க் கொண்டிருப்பான். பத்மாவை அவன் விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. பத்மாவை இளையாளாக ஏற்றுக் கொள்ளுவதற்கு இரண்டு வருஷத்துக்கு முன்பு தான் அவனுடைய மூத்த மனைவி லலிதா காலமாகி யிருந்தாள். லலிதா இறந்து போனது முதல் தன்னுடைய வாழ்க்கையே சூன்யமடைந்து விட்டதாக எண்ணினான் அனந்த கிருஷ்ணன். அத்துடன் மறுதடவை மணம் புரிந்து கொள்ளக் கூடாது என்ற தீர்மானத்துக்கு வந்திருந்தான். ஆனாலும் விதி வேறு விதமாக இருந்தது. பத்மாவின் ஒன்றுவிட்ட சித்தப்பா, அனந்த கிருஷ்ணனுக்கு ஒரு காலத்தில் கல்லூரிப் பேராசிரியராக இருந்தார். அவரிடம் அனந்த கிருஷ்ணனுக்கு எப்போதுமே ஒருவித அலாதியான மரியாதை உண்டு. அனந்த கிருஷ்ணனின் மூத்த மனைவி இறந்து போன தகவல் தெரிந்ததும், அவர் பத்மாவை அனந்தகிருஷ்ணன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த ஆரம்பித்தார். இத்துடன் அனந்த கிருஷ்ணனின் நெருங்கிய உறவினர்களின் தவிர்க்க முடியாத நிர்பந்தமும் சேர்ந்து கொள்ளவே அனந்தகிருஷ்ணனின் பாடு தர்ம சங்கடமாகி விட்டது. வேறு வழியின்றிப் பத்மாவை விவாகம் செய்து கொண்டான். ஆனால் கலியாணத்தின் போதும் அதைத் தொடர்ந்தும் அவன் நடந்து கொண்ட விதம் அவன் பத்மாவை மனம் விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று நிரூபித்தது. கலியாணத்தின் போது கடைசி நிமிஷத்தில் ஊர்வலம் வேண்டாமென்று கூறிவிட்டான். அங்கே கூடியிருந்தவர்கள் எல்லாரும் எவ்வளவோ எடுத்துரைத்தும் அனந்த கிருஷ்ணனின் மனம் மாறவில்லை.

பெண்ணைப் பெற்ற ராமசாமி மனம் கலங்கினார். இவ்வளவு இங்கிதம் தெரியாதவனுடன் எப்படி தம்முடைய பெண் பத்மா குடித்தனம் செய்யப் போகிறாள் என்று கவலைப்பட்டார். பத்மாவுக்கு அவர் தைரியம் சொல்லுவதற்குப் பதிலாக அவருக்குப் பத்மா ஆறுதல் கூறும் அளவுக்கு அசந்து போய்விட்டார். அனந்தகிருஷ்ணன் கூட சென்னைக்கு வந்து குடித்தனம் செய்ய ஆரம்பித்ததும் அனந்தகிருஷ்ணனின் பிடிவாத குணமும் சித்தாட்சண்யமும் பத்மாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தன. இருந்தாலும் பத்மா அறிவுள்ள பெண். தன் நிலைமையின் தன்மையை நன்றாகப் புரிந்து கொண்டு நல்ல காலத்தை எதிர்பார்த்த வண்ணம் அனந்தகிருஷ்ணன் மனம் கோணாமல் நடந்து வந்தாள். அவள் வயதை ஒத்த மற்றப் பெண்கள் அவர்கள் கணவன்மார்களுடன் இன்பமயமாய் இல்வாழ்க்கை நடத்துவதைப் பார்க்கும் போதெல்லாம் பத்மாவின் மனம் சஞ்சலமடையும். அதுவும் ஒவ்வொரு சமயம் அனந்தகிருஷ்ணன் காலஞ்சென்ற அவனுடைய மூத்த மனைவி லலிதாவைப் பற்றிப் பத்மாவிடம் பெருமையாகக் கூறுவான். பத்மாவின் சில குறைகளையும் மிகைப் படுத்திக் கூறி 'லலிதாவாக இருந்தால் இப்படிச் செய்திருக்க மாட்டாள்' என்று குத்திக் காட்டுவான். அப்போதெல்லாம் பத்மாவின் உள்ளம் வெதும்பும். ஆனாலும் அதை அவள் வெளிக்குக் காட்டமாட்டாள். அதனால் ஏற்படும் விளைவுகள் ஏற்கெனவே இருக்கும் குடும்பச் சிக்கல்களை இன்னும் அதிகரிக்கச் செய்து விடும் என்று அவள் அறிந்திருந்ததுதான் அதற்குக் காரணம்.

பத்மாவின் நல்ல காலம் அவளும் அவள் கணவனும் குடியிருந்த வீட்டின் பின் கட்டில் வசித்து வந்த ராகவனின் மனைவி சகுந்தலா, பத்மாவுக்கு உற்ற தோழியாக இருந்து வந்தாள். வயதில் பத்மாவைவிடச் சகுந்தலா சற்று மூத்தவள். ராகவனும் அனந்த கிருஷ்ணனும் ஒதுங்கிய சுபாவமுடையவர்கள். ஒருவருக்கொருவர் அவசியமின்றி அதிகமாகப் பேசிக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாகப் பத்மாவும் சகுந்தலாவும் ஓயாது பேசித் தீர்த்து விடுவார்கள். பத்மாவின் ஆதங்கத்தை நன்றாக அறிந்து கொண்டிருந்த சகுந்தலா பத்மாவின் நிலைமைக்கு இரங்கினாள். ஆனாலும் அதைச் சீர்படுத்துவதற்கு என்ன வழி என்று சகுந்தலாவும் அடிக்கடி நினைத்துப் பார்த்து அலுத்துப் போவது உண்டு.

இந்த நிலைமையில்தான் அன்றைக்குத் தகப்பனார் ராமசாமியிடமிருந்து பத்மாவுக்குக் கடிதம் வந்திருந்தது. கடிதத்தைப் படித்ததும் கடந்த கால வாழ்வில் அவள் மனம் லயித்தவாறு சிந்தனை வசப்பட்டிருந்தாள் பத்மா. அவள் பக்கத்தில் நிமிஷக்கணக்காக நின்று கொண்டிருந்த சகுந்தலா "பத்மா, என்ன ஒரே அடியாக யோசனையில் ஆழ்ந்து விட்டாய்!" என்று கேட்டதும் தான் சுயநினைவு பெற்றுத் திரும்பிப் பார்த்தாள்.

சகுந்தலாவிடம் தனக்கு வந்திருந்த கடிதத்தைக் காட்டினாள். அதைச் சகுந்தலா படித்து

முடிந்ததும் "அக்கா, என் அப்பாவுக்கு என்னுடைய தலை தீபாவளியை விமரிசையாகக் கொண்டாடவேண்டும் என்று எண்ணம். ஆனால் இங்கே என்னை இஷ்டமாகக் கலியாணம் செய்து கொண்ட அவருக்குத் தலை தீபாவளி கொண்டாடுவது கட்டோடு பிடிக்கவில்லை. இதை என்னிடம் மறைமுகமாக வேறு சொல்லி விட்டார். அப்பாவுக்கு என்ன பதில் எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை. இதையெல்லாம் நான் பொருட்படுத்தா விட்டாலும் அப்பா பழைய சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொண்டவர். எனக்குத் தலை தீபாவளி கொண்டாடா விட்டால் அதைப் பெரிய குறையாக நினைப்பார். என் நிலைமை எக்கச் சக்கமாயிருக்கிறது" என்று கூறினாள் பத்மா கவலை கலந்த குரலில்.

சகுந்தலாவுக்கு எவ்விதத்தில் பத்மாவைத் தேற்றுவது என்று தெரியவில்லை. "யார் எடுத்துச் சொன்னாலும் அவர் மனத்துக்குத் தோன்றினாலன்றி நன்னைடம் ஒப்புக்கொள்ள மாட்டார் உன் கணவர். இது தெரிந்திருக்கும் உனக்கு அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுவதைத் தவிர, கவலைப்படுவதில் என்ன பயன்!" என்று கூறினாள். வெளிப்படையாகச் சகுந்தலா அப்படிக் கூறிய போதிலும் பத்மாவுக்கு எவ்விதத்தில் உதவி செய்யலாம் என்று தீவிரமான யோசனையில் ஆழ்ந்தது அவள் மனம்.

அன்று மாலை அனந்த கிருஷ்ணன் ஆபீஸிலிருந்து திரும்பியதும் பத்மாவிடம் "உன் அப்பாவுக்கு அடுத்த வாரக் கடைசியில் சஷ்டி அப்த பூர்த்தியாம். நம் இருவரையும் வரச்சொல்லி அழைப்பு அனுப்பி யிருக்கிறார். எனக்கு ஆபீசில் வேலை அதிகம். லீவு கேட்டாலும் கிடைப்பது துர்லபம். உன்னை மாத்திரம் இரண்டு நாள் கழித்து அனுப்பி வைப்பதாகப் பதில் எழுதி விட்டேன்" என்று சப்பென்று சொன்னான்.

பத்மா தயங்கிய வண்ணம் "நீங்கள் வராமல் நான்மட்டும் தனியாக அங்கே போனால்..." என்று அவள் தெரிவிக்க நினைத்ததைச் சொல்லி முடிக்குமுன் "சரி, உன்னைப் போக வேண்டுமென்று நான் கட்டாயப் படுத்தவில்லை. நீ அங்கே போவதற்கு விரும்புவாய் என்று நினைத்துத்தான் உன் அப்பாவுக்குப் பதில் எழுதினேன். உனக்கு வர சௌகரியப்படாது என்று மறுபடியும் எழுதி விட்டால் போகிறது. எதற்கும் உன் அபிப்பிராயத்தை யோசித்துச் சொல்லு" என்று சொல்லி விட்டுச் சென்றான் அனந்த கிருஷ்ணன்.

அனந்த கிருஷ்ணன் மனத்தைத் திருப்ப ஆரம்பிக்கப் போக வேறு விதமாக சம்பாஷணை முடிந்ததைக் கண்டு கலக்கமுற்றாள் பத்மா. அவள் தகப்பனார் எழுதியிருந்த கடிதத்தை அனந்த கிருஷ்ணனிடம் பிரஸ்தாபிக்கவில்லை.

நாலைந்து நாள் கழிந்தது. அனந்த கிருஷ்ணன் ஆபீசுக்குப் புறப்படும்போது பத்மாவிடம் "உன் அப்பாவின் சஷ்டியப்த பூர்த்திக்குப் போவதாயிருந்தால் இன்று இராத்திரி ரயிலுக்குப் புறப்படத் தயாராக இரு. ஆபீஸிலிருந்து வந்ததும் ரயிலேற்றி விடுகிறேன். உன் அப்பாவின் சஷ்டியப்த பூர்த்திக்கோ அதை அடுத்து வரும் தீபாவளிப் பண்டிகைக்கோ நான் அங்கே வருவதாக உத்தேசமில்லை" என்று கண்டிப்பாகத் தெரிவித்து விட்டுச் சென்றான்.

அன்று அனந்த கிருஷ்ணன் ஆபீசுக்குச் சென்றது முதல் பத்மாவின் உள்ளம் அலைபாய ஆரம்பித்தது. மதுரைக்குப் போவதா வேண்டாமா என்ற பிரச்னையில் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவித்தாள். சகுந்தலாவிடம் நடந்தவற்றைக் கூறி அவள் அபிப்பிராயத்தைக் கேட்டாள். சகுந்தலா "நீ போய் விட்டு வா. உன் கணவரின் குணம் தெரிந்த உன் அப்பா உன்னையாவது எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்" என்றாள்.

"தீபாவளிக்கு நான் இங்கே திரும்பி வந்து விடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது" என்றாள் பத்மா ஏக்கம் நிறைந்த குரலில்.



தீபாவளிக்கு இன்னும் பத்து நாட்களுக்கு மேலிருக்கிறது. அதற்குள் உன் வீட்டுக்காரரின் மனம் மாறி அவர் அங்கே வந்தாலும் வரலாம் என்றாள் சகுந்தலா.

அன்று மாலை பத்மா பிரயாணத்துக்குத் தயாராக இருந்தாள். அவள் புறப்படு முன் சகுந்தலாவிடம் விடை பெற்றுக் கொள்ளச் சென்றாள். "பத்மா, நம்பிக்கையை மட்டும் எப்போதும் இழந்து விடாதே" என்று கூறிய புத்திமதி பத்மாவுக்கு அப்போதைக்குச் சாதாரணமாகப் பட்டது. பத்மா மதுரை சென்ற மறு நாளே ராமசாமி அனந்த கிருஷ்ணனுக்குத் தீபாவளிக்குத் தவறாமல் வந்து சேரும்படி அழைப்பு அனுப்பி வைத்தார். இதே தகவலைத் தெரிவித்துச் சகுந்தலாவுக்குக் கடிதம் போட்டிருந்தாள் பத்மா.

2

மூன்று நாள் கழித்தால் தீபாவளி. அன்று இரவு எட்டு மணி இருக்கும். ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வீடு திரும்பி அனந்த கிருஷ்ணன் அறையில் இருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். "ஸார்!" என்ற குரலைக் கேட்டு அறையின் வாசல் பக்கம்

டாக்டர் உள்ளே ஆராய்ந்து பார்க்கிருர்



. . . துன்பப்படுத்தும்
எரிச்சலுள்ள இருமலுக்கு க்ளேகோடின்
—டெர்ப்—வசாகாவையே குறித்துக் கொடுக்கிருர். அது
ஓர் அலெம்பிக் சரக்கு.

க்ளேகோடின்-டெர்ப்-வசாகா

Alembic

அலெம்பிக்கின் நம்பிக்கைவாய்ந்த இருமல் நிவாரணி

GTV. 2 T 52

திரும்பினான் அனந்த கிருஷ்ணன். சகுந்தலாவின் கணவன் ராகவன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன மிஸ்டர் ராகவன், உள்ளே வாருங்கள்" என்று கூறி வரவேற்றான் அனந்த கிருஷ்ணன். அருகிலிருந்த நாற்காலி ஒன்றில் ராகவன் அமர்ந்ததும் அனந்த கிருஷ்ணனைப் பார்த்து "ஸார்! இன்று ராத்திரியே நானும் என் மனைவியும் தீபாவளிக்காக மாம்பலத்துக்குப் போகிறோம். அங்கே தான் என்னுடைய சிறிய மாமனார் இருக்கிறார். வருகிற தீபாவளியை அவருடைய வீட்டில் கொண்டாடும்படி என்னையும் சகுந்தலாவையும் அழைத்திருக்கிறார். எனக்கு அங்கே போவதில் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. ஆனாலும் என் மனைவிக்கு அவள் சித்தப்பாவின் வீட்டுக்குப் போக வேண்டும் என்று ஆர்வம் இருக்கிறது. இந்தச் சிறிய விஷயத்தில் அவள் வேண்டுகோளை என்னால் நிராகரிக்க முடியவில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இம்மாதிரி காரியங்களில் நான் இட்டதுதான் சட்டம் ஆனால்..." என்று மேலே ஒன்றும் கூறாமல் நிறுத்தினான் ராகவன்.

அனந்த கிருஷ்ணன் "என்ன ஸார், பாதியில் நிறுத்தி விட்டீர்கள்" என்று கேள்வி போட்டான்.

ராகவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு மேலும் தொடர்ந்தான். "இரண்டு வருஷங்களுக்கு முன் திடீரென்று சகுந்தலா 'டைபாய்ட்' ஜுரத்தில் படுத்துக் கொண்டு விட்டாள். அவள் பிழைத்ததே புனர் ஜென்மமாகி விட்டது. அப்பொழுதுதான் நான் அவளுடைய மனத்தை அறியாமலே என் கௌரவமே பிரதானம் என்று கருதி அவளிடம் அலட்சியமாக நடந்து வந்ததை எண்ணி மனம் வெதும்பினேன். அவள் பிழைத்து எழுந்து இன்னும் சில வருஷங்களாவது உயிரோடிருந்து அவள் விருப்பத்துக்கும் அபிப்பிராயத்துக்கும் மதிப்புக் கொடுத்து வாழ வேண்டும் என்று எண்ணினேன். என்னுடைய நல்ல காலம் அவள் பிழைத்தெழுந்தாள். அது முதல் என்னால் இயன்றவரை அவள் விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுத்துத்தான் குடும்பத்தை நடத்தி வருகிறேன். பார்க்கப் போனால் வேடிக்கையாயிருக்கிறது. மனிதனுக்கு முதலில் முரண்டுவதும் பிறகு பச்சாதாபப்படுவதும் இயற்கையாக அமைந்து விடுகிறது. நாங்கள் திரும்பி வரும் வரை வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போக வந்தவன் ஏதேதோ பேசி உங்கள் நேரத்தை அதிகம் எடுத்துக் கொண்டு விட்டேன்" என்று கூறி முடித்து விட்டு வெளியே வந்தான் ராகவன்.

ராகவன் சென்றதும் அனந்த கிருஷ்ணனின் மனம் சலனமடைய ஆரம்பித்தது. 'மனிதனுக்கு முதலில் முரண்டுவதும் பிறகு பச்சாதாபப்படுவதும் இயற்கையாகவே அமைந்து விடுகிறது" என்று ராகவன் கூறிய வார்த்தைகள் அனந்த கிருஷ்ணனின் மனத்தில் சுழல ஆரம்பித்தன. சிதறிக் கிடந்த அவன் எண்ணங்கள் கடைசியில் பத்மாவை நோக்கிச் சென்றன. அவன் இதயத்தின் ஒரு மூலையிலிருந்து எழும்பிய குரல் "உனக்காக இல்லாவிட்டாலும் பத்மாவின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகவாவது நீ தீபாவளிக்கு மதுரைக்குப் போக வேண்டாமா?" என்ற கேள்வியை எழுப்பியது. தலையை இரண்டு கைகளாலும் தாங்கிய வண்ணம் அப்படியே செயலற்று, சிலைபோல் உட்கார்ந்திருந்தான்.

ராகவன் குடியிருந்த பகுதியில் பிரயாணத்துக்கு வேண்டிய பெட்டி படுக்கைகளைக் கட்டும் சத்தம் அனந்த கிருஷ்ணனின் காதில் விழுந்தது. ஏதோ தீர்மானத்துக்கு வந்தவன்போல் ராகவன் குடியிருந்த பகுதிக்குச் சென்று ராகவனிடம் "ஸார், ஒருவேளை நானும் வெளியூருக்குப் போவதாய் இருந்தால் வீட்டுச் சாவியை யாரிடம் கொடுப்பது?" என்றான் அனந்த கிருஷ்ணன்.

"நீங்கள் வெளியூருக்குப் போவதாயிருந்தால் சாவியை அடுத்த வீட்டில் கொடுத்து விட்டுப் போய் விடுங்கள்" என்றான் ராகவன்.

இதை யடுத்து ராகவன் வெளியில் போய் ஒரு டாக்ஸியைக் கொண்டு வந்தான். அதில் ராகவனும் சகுந்தலாவும் ஏறிக் கொண்டதும் அனந்த கிருஷ்ணன் அவர்களை வழியனுப்பினான்.

டாக்ஸி புறப்பட்டதும் சகுந்தலா ராகவனிடம் "எனக்கு இரண்டு வருஷங்களுக்கு முன் வந்த டைபாயிட் ஜுரத்தை அடிப்படையாக வைத்து ஒரு பெரிய கற்பனை செய்து விட்டீர்களே. நீங்கள் கூறியதை யெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்றாள்.

ராகவன் "கற்பனைக்கு நல்ல பலன்தான் கிடைக்கும் போலத் தோன்றுகிறது. உன் தோழி பத்மாவுக்குக் கொஞ்சமாவது நல்ல காலமாயிருந்தால் அனந்தகிருஷ்ணன் கட்டாயமாகத் தீபாவளிக்கு மதுரைக்குப் போயே தீருவான்" என்றான்.

3

தீபாவளிக்கு இரண்டு நாளிருந்தது. அன்று மாலை பத்மாவுக்கு விவரமான கடிதம் ஒன்று சகுந்தலாவிடமிருந்து வந்தது. "நம்பிக்கையைக் கைவிடாதே" என்று அவள் கூறியதை ஞாபகமூட்டி ராகவனுக்கும் அனந்த கிருஷ்ணனுக்கும் நடந்த சம்பாஷணையையும் விவரித்திருந்தாள் சகுந்தலா. தீபாவளிக்கு முதல் நாள் காலை அனந்த கிருஷ்ணன் மதுரையை அடைந்தான். அவன் வரவைக் கண்டதும் அவன் மாமனார் ராமசாமியின் குடும்பத்துக்கு உண்டான சந்தோஷத்துக்கும் ஆச்சரியத்துக்கும் அளவில்லை. பத்மாவைத் தனியாகச் சந்தித்தபோது அவள் முகத்தில் பொங்கி வழிந்து கொண்டிருந்த அசாதாரண குதூகலம் அனந்த கிருஷ்ணனுக்கு ஒரு புது அனுபவமாயிருந்தது. தான் மட்டும் தீபாவளிக்கு வராமலிருந்தால் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் மனவருத்தத்தை எண்ணிப் பார்த்ததுமே, அனந்த கிருஷ்ணனின் நெஞ்சம் நெகிழ்ந்தது. பரிவுடன் பத்மாவின் கரங்களைப் பற்றிய வண்ணம் "உன் மனத்தை அறியாமல் நான் எவ்வளவோ தடவை முரட்டுத் தனமாக நடந்து கொண்டிருக்கிறேன். இப்போது தீபாவளிக்கு நான் இங்கே வந்தது கூட ராகவன் அவனுடைய சிறிய மாமனார் வீட்டிற்குப் புறப்படு முன் பேசிவிட்டுப் போனது தான் காரணம்" என்றான் தழுதழுத்த குரலில்.

"அதையெல்லாம் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நீங்கள் இங்கே வந்ததற்கு வேறு காரணமிருக்கிறது" என்றாள் சாதுர்யமாக.

"என்ன பத்மா, நீ இப்படிப் பேசுகிறாய்" என்றான் அனந்தகிருஷ்ணன்.

"என்னிடம் உங்களுக்கு எப்பொழுதுமுள்ள அன்புதான் அதற்குக் காரணம்" என்றாள் பத்மா.

"பத்மா, உன்னை இன்றுதான் நான் சரியாகப் புரிந்து கொண்டேன். எவ்வளவோ தவமிருந்தாலும் உன்னைப் போல ஒருத்தியை மனைவியாக அடைவது அரிது" என்றான் அனந்தகிருஷ்ணன். அவள் கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்பியது. பதிலுக்குப் பத்மா அவனைப் பார்த்த பார்வை 'என்னைப் போல் பாக்கியசாலி வேறு யாருமில்லை' என்று கூறுவது போல் இருந்தது.

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M 4392

Registered as a newspaper in Ceylon

